
சுதேச
மித்திரன்
ஆகஸ்ட் 12, 1956 விலை 4 அணா

சுதேசமித்திரன் புத்தகசாலை

தலைமை ஆபீஸ்:

விக்டரி ஹவுஸ் :: மவுண்ட் ரோட் :: சென்னை-2.

அடியிற்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்:

1. பெங்களூர் க. மெணட்
2. செங்கற்பட்டு ஜங்
3. கோயமுத்தூர் ஜங்
4. திண்டுக்கல் ஜங்.
5. ஈரோடு ஜங்.
6. காரைக்குடி
7. காசரகாட
8. கும்பகோணம்
9. மதராஸ் பீச்
10. மதுரை ஜங்.
11. மானாமதுரை ஜங்.
12. மாயவரம் ஜங்.
13. ஒலவக்கோடு ஜங்
14. பொள்ளாச்சி ஜங்.
15. ரெய்ச்சூர்
16. தாம்பரம்
17. தென்காசி ஜங்.
18. திருநெல்வேலி ஜங்.
19. திருப்பதி (கிழக்கு)
20. திருவாரூர் ஜங்.
21. திருச்சி ஜங்.
22. தூத்துக்குடி
23. விழுப்புரம் ஜங்.
24. விருதுநகர் ஜங்.
25. விருத்தாசலம் ஜங்.

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும் தினசரி, வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோட், சென்னை 2.

பொருளடக்கம்

Vol. XXVII] துன்முகிஸ்ரீ ஆடிமீ 28உ ஆகஸ்டு 12 1956. [No. 28

நாடுநலமுற நல்வழி 3
காற்றுவாக்கிலே —அரட்டை 4
வள்ளி திருமணம் —எஸ். டி. வீரராகவன் 6
ஓரணுவுக்காக —கன்னடக்கதை 9
தபால்கள் 11
துப்பறியும் சுப்புடு —சந்தனு 13
படித்திருக்கிறீர்களா? —க. நா. சுப்ரமண்யம் 14
எண்ணெயும் திரியும் —கிருஷ்ணு 16
சாரணர் உலகம் —சித்தார்த்தன் 18
எண்ணமும் எழுத்தும் —மஹரி 19
மனிதகுலம் வளர்ந்த விதம் —சக்திதாசன் 23
அவன் செய்தது சரியா? —ஸ்ரீரங்கம் நரஸிம்மன் 25
திரைக்குப்பின் —ஆர்வி 27
நாராயணீயம் —அனந்தராம தீக்ஷிதர் 33
விக்கிரமாதித்தன் கதைகள் —சாலிவாஹனன் 35
துறவி செய்த தவறு —அஸ்வத்தாமா 36
ஐயோ ஆசிரியரே! —அல்பாயுஸ் 39
மோகமுள் —தி. ஜானகிராமன் 43
சட்டம் பேசுகிறது —வழக்கறிஞர் 50
கலாமண்டபம் 51
நாடக அரங்கம் 54
தீக்ஷிதர் கீர்த்தனை 55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

திருமாலிருஞ்சோலை என்ற அழகர் கோயிலில் சமீபத்தில் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோயிலில் ஆடி உற்சவம் அறநிலையப் பாதுகாப்பு இலாகா உதவிக் கமிஷனர் ஸ்ரீ பரமசிவத் தேவர் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ சுந்தரத் தோளர் உபய நாச்சியார்களுடன் தீர்த்தவாரி உற்சவத்திற்காகக் கடைசி நாள் எழுந்தருளியிருந்த போது எடுத்த படம்.



அடுத்த வாரம்

சுதந்திர தின இதழ்

பிரபல எழுத்தாளர்களின் கதை, கவிதை, கட்டுரைகளைத் தாங்கி, அதிக பக்கங்களுடன் வெளிவருகிறது. ராசி - பலனும் உண்டு.

காலச் சக்கரம்



பலே கைகாரன் அப்பா!
தமது சாஹஸங்கள் குறித்து தம்மைத் தாமே பாராட்டிக் கொள்கிறார் ஈ.வே.ரா
பலாத்காரக் கும்பலை அடக்க மத்திய சர்க்கார் ஆலோசனையில் 'இருமுறைகள்' இருக்கின்றனவாம்
பலாத்காரம்
பண்டிட் பந்த்
மேல் நாடுகள் கோரிக்கை
ஸூயஸ் தகராறில் மோதலைத் தவிர்ப்பதே இந்தியாவின் கொள்கை என்கிறார் நேருஜி
எகிப்தின் உரிமை

வாழிய செந்தமிழ் — வாழ்க நற்றமிழர்
சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு

நாடு நலமுற நல்வழி

பம்பாய் மாநகரின் எதிர்காலம் பற்றிய தகராறு ஒரு வழியாகத் தீர்ந்துவிட்டது. கண்டுபிடிக்கப்பட்ட பரிகாரம் என்னவோ பழைய யோசனைதான். ராஜ்ய சீரமைப்பு கமிஷன் சிபாரிசு செய்த இரு மொழி ராஜ்யம்தான் இது. இதைவிடச் சிறந்த பரிகாரம் கிடைக்காதென்பதை மஹாராஷ்டிரத் தலைவர்கள் முன்னதாகவே உணர்ந்திருந்தால் கடந்த சில மாத பயங்கர நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம்.

இதன் பிரகாரம், பம்பாயைத் தலைநகராகக் கொண்டு விதர்ப்பம், மராத்வாடா இவைகளோடு சேர்ந்த மகாராஷ்டிரமும், சௌராஷ்டிரம், கட்ச் இவற்றோடு அமைந்த கூர்ஜரமும் அடங்கிய ஒரு கூட்டு ராஜ்யம் ஏற்படுத்தப்படும். இந்நாட்டில் உத்தரப் பிரதேசத்துக்கு அடுத்தபடியாக இந்த இரு மொழி ராஜ்யமே மிக்கப் பெரிதாயிருக்கும். இதில் மகாராஷ்டிரர்கள் பெருவாரியாயிருப்பர். ஆயினும் குஜராத்திகள் அதைப் பொருட்படுத்தவில்லை. இந்த ஏற்பாட்டில் பம்பாய் தங்கள் தனி உடைமையாகாதென்பதை மகாராஷ்டிரர் ஒரு பொருட்டாக எண்ணாததும் குறிப்பிடத்தக்கது.

பம்பாய் பற்றிய முடிவு, நாட்டின் மற்ற பகுதிகளிலும் சிந்தனையைக் கிளறக்கூடியது. ஆக்க வேலைகள் உருப்படியாக நிறைவேற, மக்களிடையே ஒற்றுமை ஓங்கவேண்டும். இதற்குப் பல மொழியினரும் கூடியவரை ஒத்துவாழ வாய்ப்பளிப்பதே விவேகமல்லவா? மேலும் ராஜ்ய உறுப்புகள் எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு பொருளாதாரத் திட்டங்களை விரிவான அடிப்படையில் அமைப்பதும், திறம்பட நிறைவேற்றுவதும் சாத்தியமாகும். இந்த உணர்வுடனேயே முதலில் பீகாரையும், மேற்கு வங்கத்தையும் இணைக்கும் யோசனை உதயமாயிற்று. ஆனால் துர்ப்பாக்கிய வசமாக அது உருப்பெறவில்லை.

எப்படியும் பம்பாய் பற்றிய தற்போதைய ஏற்பாடு நாட்டின் மற்ற பாகங்களிலும் இரு மொழி அல்லது பன்மொழி ராஜ்யங்கள் அமையத் தூண்டுகோலாக உதவுவது திண்ணம். தென்னாட்டைப் பற்றியவரை, சென்னை ராஜ்யமும், திருவாங்கூர்-கொச்சியும் இணைந்தால் பரஸ்பரம் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் பல மாதங்களாகப் பறைசாற்றப்பட்டு வருகின்றன. மேலும் நாட்டின் மற்ற பகுதிகளில் பெரிய ராஜ்யங்கள் உருவாகிக்கொண்டிருக்கையில் நாம் மட்டும் வரவர குறுகிக்கொண்டு போவதன் விளைவுகளை இங்கு பொறுப்புள்ள தலைவர்கள் எண்ணிப் பார்ப்பதும், புதிய கண்ணோட்டத்தில் இப்பிரச்னையை அணுகுவதும் அவசியமாகின்றன.

நிர்மூல சக்தியின் நிர்மாணப் பணி

ஆசியாவில் முதன் முதலாக ஒரு உலையை ஸ்தாபித்து அணுசக்தி உற்பத்தி செய்யும் பெருமை இந்நாட்டுக்குக் கிடைத்திருப்பது பற்றி நாம் பூரிப்படையலாம். இந்தச் சாதனையில் பங்குகொண்ட நமது விஞ்ஞானிகளுக்கு நமது பாராட்டும், அவர்களுக்குத் தேவையான உதவி புரிந்து வந்துள்ள பிரிட்டிஷ் விஞ்ஞானிகளுக்கு நமது நன்றியும் உரியவை. அணுசக்தி உற்பத்திக்கு வேண்டிய முக்கியமான பொருள்களில் பல இந்நாட்டிலேயே கிடைக்கின்றன. இத்துறையில் முற்றிலும் நமது முயற்சியைக்கொண்டே அணுசக்தி உற்பத்தி செய்யக்கூடிய நாள் வெகு சீக்கிரத்தில் வர நமது விஞ்ஞானிகள் முழுமூச்சுடன் உழைப்பரென்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

அணுவிலடங்கிய சக்தியைக்கொண்டு மின்சார விசையை விசேஷமாக உற்பத்தி செய்யலாம். தற்போது இவ்விசை நிலக்கரி, அல்லது நீர்வேகத்தால் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்விரண்டுக்கும் ஒரு வரையறையுண்டு. ஆனால் அணுவைக்கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய மின்சார விசைக்கு வரம்பு எதுவுமில்லை. ஆகவே, தொழில் துறையில் இதுவரை ஏற்பட்டுள்ளதைவிட, அடுத்த சில வருஷங்களில் ஏற்படக்கூடிய அபிவிருத்தி பிரமிக்கத்தக்கதாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

மேலை நாடுகளைப்போல் அல்லாமல், அணுசக்தி உபயோக விஷயத்திலும் உலகுக்கு உதாரணமாகத் திகழவிழைகிறது, பாரதம். ஆக்க வேலைக்கே இது பயன்படுத்தப்படுமென்றும், இந்தியாவின் அனுபவத்தால் பிற ஆசிய நாடுகளும் அனுகூலம் பெற வாய்ப்பளிக்கப்படுமென்றும் உலையைத் துவக்கிவைக்கையில் அறிவிக்கப்பட்டது. நாச வேலையில் ஈடுபடுத்தாமல் நிர்மாணப் பணிக்குத் திருப்புவதன் மூலம், உலகம் முழுவதும் சந்துஷ்டியாக வாழவும், சமாதானம் நிலை பெறவும் வகை செய்யலாமென்ற பேருண்மையை வல்லரசுகள் இனியாவது உணருவதே அறி

என்ன வெற்றியோ ?

தமிழ்நாட்டிலுள்ள பல கோடி மக்களுக்கும் ஒரு குழப்பம். பெரியதொரு "போராட்டம்" நடக்கப்போவதாகப் பரபரப்பான செய்திகள் வெளிவந்தன. அயோத்தி ராமனை அடியோடு ஒழித்துக் கட்ட "கிடுகிடு" கிளர்ச்சி; யார் சொன்னாலும் நிறுத்தப்போவதில்லை; ஒரு நாள் புயலல்ல; பல நாள் கொந்தளிப்பு; கைதானால் தோழர்கள் நீதிமன்றத்தில் கூறவேண்டியதென்ன என்றெல்லாம் பலப்பல அறிவிப்புகள் தென்னாட்டு சாக்ரடிஸின் பகுத்தறிவுப் பாசறையிலிருந்து தடபுடலாகப் பிரகடமாயின. உப்பு சப்பற்ற வாழ்க்கையால் சலிப்படைந்திருக்கும் ஜனங்கள் நல்ல வேடிக்கை காணலாம் என்று ஆவலுடன் காத்திருந்தனர். கடைசியில் அவர்களுக்கு அதிலும் ஏமாற்றம். வாணம் புசுபுசுத்தது. ஆனாலும் "வெற்றி, வெற்றி, இமாலய வெற்றி" என்று கொம்மாளமடிப்பதைப் பார்க்கின்றனர். என்ன வெற்றி, யாருக்கு வெற்றி, விளங்காத புதிர்.

"போராட்டத்தை" பல நாள் நடத்தத் திட்டம்; ஒரே நாளில் நின்றுவிட்டது. ராமபக்தி குறையவேண்டுமென்று ஆசை. நடந்ததோ நேர் மாறானது. என்றுமே நினையாதவர் நாவிலும் ராமநாமம் அடிபட்டது. எங்கும் ராம பஜனை! இடிந்த கோயில்களிலும் விசேஷ பூஜை! எட்டிக்குப் போட்டியாக ராமசாமி பட எரிப்பு. இதுவா வெற்றி?

"தமிழ்நாட்டில் பெரியார் ஒருவர்தான் அறிவாளி. அவருடைய சீடர்களான நாங்களெல்லாம் முட்டாள் தொண்டர்கள். அவர் கட்டி வளர்க்கும் நாய்கள். கறுப்புச் சட்டை போட்ட அன்றே உலகத்தை மறந்துவிட்டோம். அய்யா காலாலிட்ட வேலையைத் தலையால் செய்வதே எங்கள் பொறுப்பு" என்று சிஷ்ய சிகாமணிகளில் உண்மை விளம்பிகள் ஒப்புக்கொண்டபோதிலும், "விஷயமறியாத" பாமரர் சொல்வதென்ன? மக்களை வருத்தும் பிரச்னைகள் எத்தனையிருக்கின்றன? பசி, பட்டினி, பஞ்சம் இவற்றை ஒழிப்பதில் 'அறிவு' போகவில்லை. 'கதை' ராமரைப்பற்றித்தான் தகராறு: அடடா, ரொம்ப அவசரமான காரியம்தான்! படத்தை எரிப்பது, பொம்மையை உடைப்பது இவையெல்லாம் பகுத்தறிவுள்ளவர் செயல்களா? குழந்தைத்தனமான காரியங்களல்லவா என்று எள்ளி நகையாடுகின்றனர். இதுவா வெற்றி?

வெண் தாடி வேந்தர் வளர்க்கும் தீயில் பல்லாயிரக்கணக்கில் தொண்டர்கள் குதிப்பர்; தமிழகச் சிறைச்சாலைகளிலெல்லாம் பெரும் இடம் நெருக்கடி ஏற்பட்டு அரசாங்கம் திணறும் என்று அலங்காரப் பந்தல் போட்டனர். ஒரு ஆயிரம் கூட ஆள் தேறவில்லை. இது சர்க்கார் கணக்கு. ஐயா கணக்கு ஐயாயிரம்! அதிலும் எத்தனையோ பேர் வாய்ப்பை இழந்துவிட்டனராம். சொந்த ஊரான ஈரோட்டிலேயே முயற்சி முற்றிலும் தோல்வி எனப் பத்திரிகை ("ஆரிய" ஏடு அல்ல) செய்தி. என்ன பரிதாபம்! பெயர்ப் பட்டியல் விளம்பரம், சிறைகளில் ஓய்வு, அரசாங்க விருந்து அத்தனையும் எதிர்பார்த்தவருக்கும் எல்லையில்லா ஏமாற்றம். 'பிடித்தனர், அடைத்தனர், விட்டனர்' என்பதற்கு முன்னே காரியம் முடிந்துவிட்டது.

"இன்றைய ஆட்சிக்கு வீண் தொல்லை கொடுக்கக்கூடாது" என்ற பரிவுதான் கிளர்ச்சியைத் திடீரென நிறுத்தியதற்கு முக்கிய காரணமாம். இந்தத் தலைவலியே வேண்டாமே என்று ஆளும் கட்சி முக்கியஸ்தர் நெடுநாளைய நண்பர், வருந்தி வேண்டியபோது மட்டும் செவி சாய்க்க மறுப்பு. ஆனால் சில மணி நேரத்தில் தலைகீழ் மாறுதல். லட்சியம் ஈடேறிவிட்டதாம்! விரிவான விளம்பரம் கிடைத்துவிட்டதாகப் பரம திருப்தி. ரேடியோ மீது கோபம்தானே ராமர் மீது பாய்ந்தது? அந்த வானொலியும் அதன் பவள வாய் திறந்து முத்தான சொற்களால் ஒரு வாக்கியம் சொல்லிவிட்டதாம்! சாதாரணமாகத் திரும்பிப் பார்க்காத பத்திரிகை நிருபர்களும் "படையெடுத்து" வந்து பிரமாதப்படுத்திவிட்டார்களாம். பத்திரிகைக்காரர்களுக்கு எப்போதுமே ஒரு பசி; செய்திப் பசி. "நாய் மனிதனைக் கடிப்பது செய்தியல்ல; மனிதன் நாயைக் கடித்தால் அது செய்தி" என்பது பத்திரிகை இலக்கணம்.

தன் "கிளர்ச்சி வியாபார"த் தந்திரத்தை திராவிடத் தந்தையே விளக்கியுள்ளார். "குறைந்த செலவு, குறைந்த தியாகம், பெரிய லாபம், வெற்றி" இவற்றையே அடிப்படையாகக் கொண்டதாம் அது. ராமர் சின்னத்தைப் படமெழுதி எரிக்கவே ஏற்பாடு. அதனால் செலவில் சிக்கனம். ஆனால், அறியாதவர் படமெழுத உதவ அனுப்பியதோ அழகியதான வர்ணப்படம்; பிரணவத்தில் அடங்கிய கோதண்டராமன் திருவுருவப் படம். வடக்கத்தி கம்பெனியொன்றின் "ஒரிஜினல்" தயாரிப்பு! அம்மாதிரி நூற்றுக் கணக்கான படங்கள் விநியோகிக்கப்பட்டனவாம். மிகவும் மெச்சத்தகுந்த "லக்" காரியமே! மிஞ்சிப் போன படங்களைக் கெஞ்சிக் கெஞ்சியும் விற்கிறார். வழிபட உதவும் என்றும் கூறுகிறார். ராவண பக்தர் ராம பக்தராகிவிட்டாரா? குறைந்த தியாகம் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இல்லையேல் தியாகம் என்ற சொல்லுக்கே அர்த்தமில்லாது போய்விடும். ஆனால் பெரிய லாபம், வெற்றி எங்கே? தேடினாலும் தெரியவில்லை ".போலீஸார் யாரையும் பிடிக்காமல் இருந்துவிடப்போகிறார்களேயென்று முதல் நாளெல்லாம் பெருங் கவலை." பச்சைத் தமிழர் சர்க்கார் அக்குறையைப் போக்க முன்வந்தது. ஆதரித்து நிற்பவரை அடியோடு கைவிட வேண்டாம் என்ற எண்ணமாயிருக்கலாம். "நான் அடிக்கிற மாதிரி நடிக்கிறேன். நீ அழுகிற மாதிரி இரு" என்று நாடகம் நடந்ததோ என்றுகூடப் பலருக்குச் சந்தேகம். பரவாயில்லை. பெரியவரே கூறுவதுபோல் பொது வாழ்வில் பரிகாசமும், ஏமாற்றமும், வேதனையும் சகஜம். ஆனாலும் ராமர் எதிர்ப்புணர்ச்சி இந்நாட்டில் எந்த அளவுக்கு இருக்கிறதென்பதை உண்மையில் தெரிந்துகொள்ள உதவியவருக்கு நாம் நன்றி பாராட்டாமல் இருக்கமுடியாது.

—அரட்டை

★

இந்தியாவில் உள்ள பேவர்-லூபா ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டராக இதுவரை பணியாற்றிய மிஸ்டர் E. P. E. மேயர், ஸ்விட்ஸர்லாந்தில் உள்ள தமது தலைமை காரியாலயத்தில் பணியாற்ற நாடு திரும்புகிறார். படத்தில் மிஸ்டர் மேயர் வலது புறமும், பேவர்-லூபாவின் தற்போதைய மானேஜிங் டைரக்டர் மிஸ்டர் பெரடரிக் பேவரும் அவரது மனைவியும் காணப்படுகின்றனர்.

★

பிரமுகர்வரிசை:
எச்.ஜே.பாபா

'இளமையிற்கல்' என்ற மூதுரைக்கும், சலியாத உழைப்புக்கும், தளரா உறுதிக்கும், தமது திறமையை நாட்டிற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பவர் டாக்டர் ஹோமி ஜிஹாங்கிர் பாபா. இவ்வாரம் இவர் பெயர் பிராபல்யமடைந்தது; இந்தியாவில் முதல் அணுசக்தி உலையும் இயங்கத் தொடங்கியது.

46 வயதாகும் டாக்டர் பாபா, பிரபல பௌதிக சாஸ்திர நிபுணர். 31வது பிராயத்தில் உலகப் பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் சங்க மெம்பரானார். இங்கிலாந்தில் உயர்தரக் கல்வி பயின்ற இவரது பேச்சு, 'கிண்கிணி' ஓசையுடன் கேட்பவரை மயக்கவல்லது. ஆராய்ச்சியில் மூழ்கித்திளைப்பினும், பிற ஈடுபாடுகளை மறப்பவரில்லை. நல்ல ஓவியர்; வயலின் வாசிப்பதில் சமர்த்தர். வயதேறிடினும் வனப்பும் காத்திரமும் குன்றாது இவர் இருப்பதில் வியப்பில்லை.

இந்திய முறைகளிலும், இந்தியர் திறமையிலும் அசையாத நம்பிக்கை வைத்திருப்பது, இவருடைய சிறப்பியல்புகளில் ஒன்று. 'மரத்தடியிலும், இருண்ட குகைகள்'ளும் அசையாது, அமர்ந்து, சிந்தித்த பெரியோர்களின் பரம்பரை இன்று சும்மா உட்கார்ந்திருக்கவில்லை; சிந்திக்கிறது. பௌதிக சாஸ்திரத்திலும் சிந்தனை செலுத்தப்படும். முன்போல வியக்கத்தக்க பலன் பெறுவோம்' என்று அமெரிக்காவில் இடித்துரைத்தார், பாபா. 'உங்கள் ரகசியத்தைத் தெரிவிக்காவிடில் பரவாயில்லை. நாங்கள் மெதுவாக முன்னேறுகிறோம்' என்றார். இப்பேர்ப்பட்டவரை அணுசக்தி கமிஷன் தலைவராக இந்திய சர்க்கார் தெரிந்தெடுத்திருப்பது எவ்வளவு பொருத்தமானது!

டாக்டர் பாபாவின் லட்சியம் சித்தியானால் இந்தியா முழுவதும் ஒரு நாள் அணுசக்தி நிலையங்கள் ஆங்காங்கே காட்சி தரும். பெட்ரோல், டீசல் எண்ணெய், நிலக்கரி, நீர்விசை ஆகியவை புரியும் பணியை அணுசக்தி நிலையங்கள் புரியும். பத்தாண்டுகளில் இக்கனவு நனவாகிவிடும் என்று நம்புகிறார், பாபா. இவரது ஒருமன ஊக்கம் ஒன்றே போதும், இதை சாதிக்க.

★

COMMEN

வள்ளி திருமணம்

எஸ்.டி.வீரராகவன்

காலை நேரம். முற்றத்தில் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு ஏதோ கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தான் பெரியண்ணன். யாரோ உள்ளே நுழைவதைப் பார்த்து நிமிர்ந்தான். உள்ளே நுழைந்தது வேலப்பன்தான். பெரியவர்கள் இரண்டு பேரை அழைத்துக்கொண்டு வந்திருந்தான். எப்போதும் போலல்லாமல் சரிகைத் துணியும் பட்டுச் சொக்காயும் அணிந்து, அசல் மருமகப் பிள்ளையைப்போலவே காட்சியளித்தான்.

"ஏது, வேலப்பய்யா இந்தச்சின்ன மனுசனைத் தேடிக்கிட்டு இவ்வளவு தூரம் வந்திருக்குது? என்ன விசயமோ?" என்று கிண்டலாகக் கேட்டுக்கொண்டே, பெரியண்ணன் வந்தவர்களை அமரச் செய்தான்.

"ஒரு முக்கியமான விசயமாத்தான் வந்தோம்..." என்று இழுத்தாற்போல் சொல்லிவிட்டு, மேலே எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் மற்றவர்களின் முகத்தைப் பார்த்தவர், வந்தவர்களில் ஒருவரான ராமசாமிக் கவுண்டர்.

"முக்கியமில்லாமப்போனா வழக்கமில்லாமல் இவ்வளவு தூரம் வருவாரா? அவருக்கு இந்தச் சின்ன மனுசனாலே ஆகக்கூடியது என்ன என்றுதான் புரியலே..." என்றான் பெரியண்ணன் அதே ஏளனக் குரலில்.

"நீங்க ஒண்ணு! இப்படி கேலி பண்ணினா அந்தப் பையன் எப்படிச் சொல்லுவான் வந்த விசயத்தை சுருக்கமா சொல்லணும்னு நாங்க வந்தது பெண் பேசறதுக்குத்தான்..." என்று ஒருவாறு விஷயத்தைச் சொன்னான் மற்றவனான மாணிக்க முதலி.

"பெண் பேசவா? எனக்கொன்னும் புரியலீங்களே..." என்றான் பெரியண்ணன் புருவத்தை நெறித்துக்கொண்டு. விஷயத்தை ஊகித்துவிட்டாலும், அவர்கள் வாயிலாகவே வரவழைப்போம் என்பது அவன் எண்ணம்.

"அதானுங்க, நம்ம வள்ளியை வேலப்பனுக்குக் கட்டிக்கொடுத்தா நல்லாயிருக்கும்னு..." எப்படியோ தடுமாறிச் சமாளித்து, ஒரு வழியாக விஷயத்தைச் சொல்லிவிட்டார்கள், ராமசாமியும் மாணிக்கமும். அவ்வளவு நடுக்கம் பெரியண்ணனிடத்தில்!

அவ்வளவு நேரம் சாவதானமாகப் பேசிவந்த பெரியண்ணன், ஒரே நிமிஷத்தில் வேறு மனிதனாகவே மாறிவிட்டான். அவன் கண்கள் சிவப்பேறின. மீசை துடித்தது. "ஏண்டா வேலப்பா! அவ்வளவு பெரிய மனுசனாயிட்டயா நீ? என்னுடைய அந்தஸ்தையும் உன்னுடைய நிலைமையையும் யோசித்துப் பார்த்தாயா? நான் முப்பது வேலி நிலத்துக்குச் சொந்தக்காரன். உனக்கு மூணு காணிக்கு வழியிருக்கா! என் பெண்ணைக் கேழ்க்க உனக்கு என்னடா யோக்யதை இருக்கு? வெட்கமில்லாமல் பெண் கேட்க வந்துட்டாயே..." இடி முழக்கக் குரலில் கேட்டான் பெரியண்ணன்.

ராமசாமியும் மாணிக்கமும் வெலவெலத்துப் போய்விட்டார்கள். பெரிய சங்கடத்தில் மாட்டிக்கொண்டு விட்டோமே என்பதை வெளியிட்டது அவர்கள் முகபாவம்.

அவ்வளவு நேரமும் பேசாமல் நின்றுகொண்டிருந்த வேலப்பன், சவுக்கடி விழுந்த காளையைப்போல் துள்ளி எழுந்தான். பெரியண்ணனின் அகம்பாவமும் இளக்காரமும் கலந்த பேச்சைக் கேட்டதும், அவன் ரத்தம் கொதித்தது. படபட வென்று ஏதோ சொல்லப்போனவன் சட்டென்று தன்னைத்தானே சாவதானப் படுத்திக்கொண்டான். ஆத்திரமாகப் பேசிக் காரியத்தைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. உள்ளே ஜன்னலுக்கப்பால் நின்றுகொண்டிருந்த வள்ளியின் முகத்தில் தெரிந்த கெஞ்சும் பார்வை, அவனை ஒருவாறு சாந்தப்படுத்தியது.

அடக்கமும் பணிவும் தொனிக்கும் குரலில் கம்பீரமாகப் பேசினான் அவன்.

"கவுண்டரே! உங்களுக்கும் எனக்குமிடையே உள்ள ஏற்றத் தாழ்வை நான் மறந்துவிடவில்லை. நீங்கள் ஊருக்கெல்லாம் தலைவர். நான் நாதியற்ற தனி மனிதன். நீங்கள் செல்வத்தில் புரளும் சீமான். நான் எளியவர்களிலும் எளியவன். ஆனால், ஒரு மனிதனின் அருகதையை அவனுடைய அந்தஸ்தைக் கொண்டா நிர்ணயிப்பது? என்னிடம் உடைமைகள் இல்லைதான். ஆனால், உள்ளத்தில் உறுதியும், உடலில் உழைக்கச் சக்தியும் இருக்கிறது. பணம் படைத்திருக்கவில்லை. ஆனால், பணிவையும் பண்பை

யும் பேணி வளர்த்திருக்கிறேன். செல்வமில்லையே தவிர, செருக்கும் என்னிடமில்லை. அந்தஸ்து இல்லாததால் அகம் பாவமில்லை. உங்களுக்கு மருமகப் பிள்ளையாவதற்கு என்னுடைய அருகதையை வேறு எந்த வழியிலாவது நிரூபிக்க வேண்டுமானல், நான் தயார். எதை வேண்டுமானலும் சொல்லுங்கள்..”

“நல்லாச் சொன்னே! நல்லாச் சொன்னே!” என்ருர்கள் ராமசாமியும் மாணிக்கமும். வேலப்பனின் உருக்கமான பேச்சு அவர்களுக்கும் தைரியமூட்டி விட்டது!

பெரியண்ணன் கொஞ்சமும் அசைந்து கொடுக்கவில்லை. “பேச்சுக்காக எதையும் சொல்லிடலாம். காரியத்திலே காட்டுவது சுலபமில்லே. எதை வேணுலும் செய்துடுவயா?”

அவன் அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தபோது தெருவில் பெரிய ஓசை கேட்டது. பூமி அதிரும்படியான நடையுடன் உள்ளே நுழைந்தது ஒரு காளை. பிரும்மாண்டமான உருவமும், கூரிய பெரிய கொம்புகளும், பயங்கரமான முழக்கமும் காட்டு ராஜா என்ற பெயர் அதற்கு எவ்வளவு பொருத்தம் என்பதை எடுத்துக் காட்டின. ஊரிலேயே மிகவும் பெரியதான அந்த மாடு, தன் சொந்தத்திலிருப்பதையே ஒரு தனிப் பெருமையாக எண்ணியிருந்தான் கவுண்டன். எங்கோ சுற்றவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தது அந்தக் காளை.

பெரியண்ணனுக்குத் திடீரென்று என்னவோ ஒரு எண்ணம் உதயமாகியது.

“இந்தக் காட்டு ராஜாவை அடக்கிப் பிடுவாயா?”–வேலப்பனைப் பார்த்துக் கேட்டான்.

“அட நீங்க ஒண்ணு! அவன் சொன்னதை விபரீதமாப் புரிஞ்சிக்கறீங்களே!” என்ருர்கள் ராமசாமியும், மாணிக்கமும்.

“விளையாட்டுமில்லே! விபரீதமுமில்லே! என் பெண்ணை செய்துக்கணும்னு அவன் பெரிய சூரனுத்தான் இருக்கணும்!..”–இது பெரியண்ணன்.

“இதென்னங்க! நீங்க நெசமாத்தான் சொல்றீங்களா? காட்டுராஜவையாவது மனுசன் அடக்கறதாவது? நாலு பேராச் சேர்ந்தாக்கூட முடியாதே!..” ராமசாமியின் குரல் நடுக்கமெடுத்தது.

இந்த இடத்தில் வேலப்பன் குறுக்கிட்டான். பெரியண்ணனின் விபரீதப் பேச்சைக் கேட்டு, அவன் ஒரு கணம் அசந்துதான் போய்விட்டான். ஆனல், சுபாவத்திலேயே பிறந்த துணிச்சலும் மிடுக்கும் அவனைக் கைவிடவில்லை.

“நீங்கள் சொன்னதை நான் ஒப்புக்கொள்கிறேன். எந்த தினத்தைக் குறிப்பிடுகிறீர்களோ, அன்றைக்கு இந்தக் காட்டுராஜாவுடன் பலப் பரீட்சை செய்கிறேன். முன்வைத்த காலைப் பின் வாங்கும் கோழையல்ல நான். தோற்ருல் சாவதற்குத் துணிவேனே தவிர, உங்களுக்கெதிரே மறுபடியும் வரமாட்டேன்..” உறுதி நிறைந்த குரலில் கம்பீரமாகச் சொன்னன் வேலப்பன்.

ராமசாமியும் மாணிக்கமும் பயத்தினல் வாயடைத்து நின்ருர்கள்.

இறுதியில் வெள்ளிக்கிழமையன்று அம்மன் கோயிலையடுத்த மைதானத்தில் காட்டு ராஜாவுடன் வேலப்பன் சண்டை போடுவதென்றும், அவன் ஜயித்துவிட்டால், வள்ளியை மணந்து கொள்வதென்றும் முடிவு கட்டப்பட்டது.

அந்த முடிவு ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒவ்வொரு புயலைக் கிளப்பிவிட்டது.

உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த வள்ளி, மயக்கம்போட்டே விழுந்து விட்டாள்.

வேலப்பனின் முகம் ஏதோ எண்ணச் சுழலை எடுத்துக் காட்டியது.

‘கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாகிவிட்டதே!’ என்று சொல்லிக்கொண்டே போனன் ராமசாமிக் கவுண்டன்.

“அந்தக் காலத்திலே கண்ணுலம் பண்ண வேலன் என்னென்னமோ செய்ய வேண்டியிருந்த மாதிரியல்ல இருக்கு?” என்ருன் மாணிக்க முதலி.

பெரியண்ணனின் முகமோ உணர்ச்சியற்ற கற்சிலையைப்போலிருந்தது.

ஃ ஃ ஃ

வெள்ளிக்கிழமையன்று அம்மன் கோயிலையடுத்த மைதானத்தில் ஊரார் அனைவரும் திரண்டு வந்திருந்தார்கள், மனிதனுக்கும் மாட்டுக்கும் நடக்கப் போகும் சண்டையைப் பார்க்க. பலபேர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள்.

“என்ன இருந்தாலும் இந்தப் பெரியண்ணனுக்குப் புத்தி இப்படி கெட்டுப் போகவேண்டாம். அந்த முரட்டு மாட்டுடன் சண்டைபோட்டு வேலப்பன் ஜெயிப்பதாவது? உயிர் பிழைத்தால் அதுவே பெரிய காரியம்!” என்று அநேகர் சொல்லிக்கொண்டார்கள்.

“சின்னப் பையனுடைய உசிருக்கு இப்படி உலை வச்சிட்டானே”, என்றனர் சிலர்.

“வேலப்பன் ஒண்ணும் அப்படி பயப்படறதா தெரியலே. மாடுகளை எப்படி அடக்கறதுன்னு யார்யாரிடமோ கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டிருக்கானும்”–இது வேறு சிலர்.

“பெரியண்ணனுடைய பெண்ணை செய்துக்கணும்னு பெரிய காரியம் செய்தாத்தான் முடியும். அவனுக்கு வேறு அந்தஸ்து என்ன இருக்கு?”–இப்படிப் பெரியண்ணன் சார்பிலும் சிலர் பேசினர்கள்.

குறிப்பிட்ட நேரத்தில் காட்டு ராஜாவை ஓட்டிக்கொண்டு வந்தார்கள் மூன்று ஆட்கள் சேர்ந்து. பெரியண்ணனிடத்தில் மட்டுமே அது அடங்குமாதலால், அவன் கூடவே வந்தான். வழக்கத்தைவிடப் பயங்கரமாகக் காட்சியளித்தது காட்டு ராஜா. வயிறு புடைக்கத் தின்று கொழுத்துப் பெரிய யானையைப்போலிருந்தது.

“ஐயோ பாவம் வேலப்பன்!” என்று ஏககாலத்தில் எல்லோரும் சொன்னர்கள்.

வேலப்பன் சிறிதும் பயப்பட்டதாகவே தெரியவில்லை. என்றைக்கும்போல் சிரித்த முகத்தோடு அவன் தைரியமாகத் தொடையைத் தட்டிக்கொண்டு நிற்பதைப் பார்த்து, எல்லோரும் ஆச்சரியப்படத்தான் செய்தார்கள்.

சண்டை ஆரம்பித்தது. மனிதனும் மிருகமும் ஒருவரையொருவர் மிஞ்சிவிடப் பார்த்து, இப்படிப் போவதும் அப்படிப் போவதுமாகச் சில நிமிடங்கள் கழிந்தன. வேலப்பன் மாட்டை வீழ்த்தப் பார்ப்பதும், மாடு வேலப்பனைக் குத்திவிட எண்ணித் துரத்துவதும்–இப்படியாகச் சண்டை முன்னேறியது.

திடீரென்று கொம்புகளை முன்னே நீட்டிக்கொண்டு வாலைச் சுழற்றியடித்து, வேலப்பனை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தது காட்டுராஜா.

“செத்தான் வேலப்பன்!” என்று கூவினர்கள் அனைவரும்.

ஆனல், மறு நிமிடம் சற்றும் எதிர்பாராதது நடந்தது. அலக்காக நகர்ந்து கொண்டு மாட்டின் கொம்புகளுக்குத் தப்பிய வேலப்பன், அதன் பக்கவாட்டில் பாய்ந்து, மாடு குறிதவறி நிலை தடுமாறிய சமயம் பார்த்து எகிறித் தன் பலம் கொண்டமட்டும் ஓங்கி வலது காலால் காட்டுராஜாவின் விலாவில் ஒரு உதை கொடுத்தான். அதைத் தொடர்ந்து மேலும் ஒன்று ... இரண்டு ...மூன்று...

“அம்மா!” என்றலறிக்கொண்டு சற்றும் எதிர்பாராத விதமாகத் தரையில் சாய்ந்தது காட்டுராஜா. அதன் கண்கள் பிதுங்கி, வாய் நுரை தள்ளியது. அப்புறம் அதனல் அசையக்கூட முடியவில்லை.

ஒரு கணம் தாங்கள் கண்ட காட்சியை நம்பமுடியாமல் மலைத்து நின்ருர்கள் அனைவரும் அடுத்த நிமிஷம் “ஜயித்தான் வேலப்பன்!” என்ற கோஷம் எல்லோர் வாயினின்றும் வந்தது.

பார்த்தால் பூனைமாதிரி இருந்திச்சே!” என்று வியந்தார்கள் அனைவரும்.

“என்ன இருந்தாலும் வேலப்பன் கெட்



திருச்சி டிஸ்டிரிக்ட் கோர்ட் சென்ட்ரல் நாஸர் ஸ்ரீ வி. துரை ரரகவாச்சாரியார் குமாரியும், ‘மித்திரன்’ அலுவலகத்தைச் சேர்ந்த ஸ்ரீ கே. ஆர். கண்ணனின் மருமாளுமான சௌ. ஜானகிக்கும், நெரூர் ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் குமாரனும், ஹிந்துஸ்தான் பிஸ்டனைச் சேர்ந்தவருமான சிர. வேதாந்தத்திற்கும் திருச்சியில் சமீபத்தில விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

டிக்காரன்! மாட்டை எப்படி அடக்கறதுன்னு நல்லாத் தெரிஞ்சிக்கிட்டான்!" என்றார்கள் சிலர்.

"இப்ப என்ன சொல்றீங்க பெரியண்ணரே! நீங்க சொன்ன அந்த சாகசக் காரியத்தையும் வேலப்பன் செய்து முடிச்சிட்டானே!" என்று ஒருவர் கேட்டதும், "அவரு இனிமே சொல்றது என்ன! இனிமேலும் முடியாதுன்னு சொல்வாரா? டே, வேலப்பா! இன்னிக்கு வெள்ளிக்கிழமை. நாளும் கிழமையும் நல்லாருக்கு. இப்பவே தாம்பூலம் மாத்திப்பிடு" என்றார்கள் சில பெரியவர்கள். அந்தக் குழுவில் ராமசாமிக் கவுண்டரும் மாணிக்க முதலியும் கூட இருந்தனர்.

சிறிது நேரத்துக்குப் பின் வேலப்பன் தாம்பூலம் எடுத்து வந்தபோது, பெரியண்ணன் பேசாமல் வாங்கிக்கொண்டான். காட்டுராஜாவின் எதிர்பாராத தோல்வியைப் பார்த்ததிலிருந்து வாயடைத்துப் போனவன், அப்போதும் பூரணமாகப் பேசும் சக்தியை அடைந்ததாகத் தெரியவில்லை!

வள்ளியின் சந்தோஷத்துக்குக் கேட்கவேண்டுமா?

நல்ல நாளில் வள்ளியின் கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டினான் வேலப்பன். கலியாணம் விமரிசையாக நடந்தேறியது.

* * *

இதெல்லாம் நடந்து சில நாட்களுக்குப் பின் ஒருநாள் களத்து மேட்டில் தனியாக உட்கார்ந்திருந்தான் பெரியண்ணன். அவன் முகத்தில் என்றுமில்லாத ஒரு நிம்மதி நிறைந்திருந்தது. அப்போது அங்கே கணக்குப் பிள்ளை நாராயணசாமி வந்தான். அவன் பெரியண்ணனுக்கு அந்தரங்கமானவன். அவனிடம் பெரியண்ணன் எதையும் ஒளித்துவைக்கமாட்டான். அவன் தனியாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் நாராயணசாமியின் முகத்தில் ஆவல் படர்ந்தது.

"ஏது, பெண்ணுக்குக் கலியாணம் முடிஞ்சிடவே நிம்மதியா உக்காந்திருக்காப்பலே இருக்கு... அது சரி... நான் உங்களை ஒரு சந்தேகம் கேழ்க்கணும்.." இழுத்தாற்போல் சொன்னான் அவன்.

"அதென்ன பெரிய கேள்வியா போட்டுட்டே!" என்றான் கவுண்டன்.

"அன்னிக்கு வேலப்பன் காட்டுராஜாவோடு சண்டை போட்டானே, அதைப் பற்றிய சந்தேகம்தான். என்ன இருந்தாலும் யானைமாதிரி இருந்த அந்த மாடு, அத்தனை சுருக்கமா விழுந்துட்டது ரொம்ப ஆச்சரியமான விசயமில்லையா? இதிலே ஏதாவது ரகசியம் இருக்குமோ என்று சந்தேகம்.."

"அட பைத்தியக்காரா! உனக்குக்கூட அந்த விசயம் தெரியாதா? சரி உட்காரு, சொல்றேன்!"—மெதுவான குரலில் சொல்ல ஆரம்பித்தான் பெரியண்ணன்.

"காட்டு ராஜாவைப்பற்றிய முக்கியமான ஒரு ரகசியம் என்னைத் தவிர யாருக்கும் தெரியாது. அது பிறந்த சில நாழிகைக்கெல்லாம் அதன் தாய்ப்பசு இடறி விழுந்து தன் காலால் அதன் விலாவில் மிதித்துவிட்டது. அப்போது நான் தற்செயலாக அங்கே போக நேர்ந்ததால், துடித்துக்கொண்டிருந்த கன்றை எடுத்துக் காப்பாற்றினேன். நல்ல சிகிச்சை செய்ததால் கன்று பிழைத்தது. நாளடைவில் நல்ல தீனியிலும் ஊட்டத்திலும் அது வளர்ந்து மிகவும் பலசாலியாகிவிட்டது. ஆனால் பிறந்தபோது நேர்ந்த விபத்தினால் நசுங்கிப் போன விலா எலும்பு, சரியாகக் கூடவே இல்லை. அன்று முதல் அந்தப் பாகத்தில் மட்டும் அது பலவீனமாகவே இருந்தது. என்னுடைய தனிப்பட்ட கவனிப்பிலே வளர்ந்ததாலும், பார்வைக்குப் பயங்கரமாக இருந்தாலும் இந்த விஷயம் ஒருவருக்கும் தெரியாமலே இருந்தது. நானும் அதை யாரிடமும் சொல்ல விரும்பவில்லை. சண்டையின்போது வேலப்பன் மாட்டின் விலாவில் ஓங்கி உதைக்கவே, அது தடுமாறிக் கீழே விழுந்துவிட்டது.."

"நீங்க சொல்றது ஒன்னும் புரியலீங்களே. வேலப்பனுக்கு மட்டும் இந்த ரகசியம் எப்படித் தெரிந்தது?"—குறுக்குக் கேள்வி போட்டான் நாராயணசாமி.

"இதுகூடவா உன்னால் ஊகிக்க முடியவில்லை! நான்தான் அவனுக்கு அதைத் தெரிவித்தேன். அவனுக்கு ரொம்பவும் வேண்டியவனான கோவிந்தனிடம் சொல்வதுபோல், சண்டை தொடங்குவதற்கு முன் வேலப்பனிடம் சொல்லிவிடும்படிச் செய்தேன்.."

"ஆ! நீங்களா!"—நாராயணசாமி பிரமிப்பினால் வாயடைத்துப் போனான். சில விநாடிகளுக்குப் பிறகே அவனால் பேசமுடிந்தது. "என்னங்க நீங்க சொல்றது? வேலப்பனைத்தான் உங்களுக்குக் கட்டோடு பிடிக்காதே. அவனைப் பார்த்தாலே நீங்கள் எரிந்து விழுவீங்களே!"

"சேச்சே! எல்லாரும் நினைத்தது போலவே நீயும் எண்ணிவிட்டாயே. உள்ளும் புறமும் ஒன்றாகவேயிருக்குமா? வெளிப்பார்வைக்கு அப்படி நடந்துகொண்டாலும் மனசுக்குள்ளே வேலப்பனின் குணம் எனக்குத் தெரியாதா? இந்த ஊரிலேயே வள்ளிக்கு இணையான ஜோடி அவனைத் தவிர வேறு யாரும் கிடையாது என்று நான் எப்போதோ தீர்மானித்துவிட்டேன். அவனுடைய உழைப்பும் சாமர்த்தியமும் தைரியமும் வள்ளிக்கு ஏற்றவன் அவன்தான் என்ற எண்ணத்தை எனக்கு எப்போதோ உண்டாக்கிவிட்டன. தவிர, அந்தப் பெண்ணும் அவனிடத்திலே மனசைக் கொடுத்துவிட்டது. தாயில்லாத அந்தப் பெண்ணின் மனசைக் கலங்க அடிக்காமல் அதன் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது பெற்ற தகப்பனின் பொறுப்பு என்பது எனக்குத் தெரியாதா?

"இருந்தாலும் சொந்தக் கௌரவம் என்பது எல்லாவற்றுக்கும் குறுக்கே வந்தது. எல்லோராலும் பெரிய மனிதனாகக் கருதப்பட்ட நான், ஊரிலே பெரிய இடத்துப் பிள்ளைகள் இருக்கும்போது, சொத்தும் உடைமையும் அந்தஸ்தும் இல்லாத அந்தப் பையனுக்கு என் பெண்ணைக் கொடுத்தால், ஊரிலிருக்கும் மற்றப் பெரியவர்களுடைய விரோதத்தையல்லவா சம்பாதித்திருப்பேன்? அதற்காகத்தான் வேலப்பனின் சாமர்த்தியத்தை எல்லோர் மனதிலும் பதிய வைப்பதற்காக இந்தக் காட்டுராஜா நாடகம் போட்டேன். அந்தப் பையனுங்கூட, சுலபமாகக் கிட்டாமல் இவ்வளவெல்லாம் கஷ்டப்பட்ட பின் கிடைத்தால், பெண்சாதியை அருமையாகவல்லவா வைத்துக்கொள்வான்!...."

நாராயணசாமியின் ஆச்சரியம் எல்லை கடந்தது. "உங்களைப்பற்றி எப்படியெல்லாம் நினைத்துவிட்டோம்!" என்றான் உணர்ச்சியுடன்.

"இன்னும் ஒரே ஒரு சந்தேகம் மட்டும் இருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ உங்களுடைய உதவியைக்கொண்டல்லவா வேலப்பன் காட்டுராஜாவைத் தோற்கடித்தான்? அவனுடைய யோக்யதை இதில் எப்படித் தெரிகிறது?"—குறுக்கே கேள்வி போட்டான் நாராயணசாமி.

பெரியண்ணன் சொன்னான்: ஒரு எல்லைக்கு மீறியதை மனிதன் செய்யவேண்டுமென்றோ அதைக் கொண்டுதான் மனிதனின் திறமையை நிர்ணயிக்க வேண்டுமென்றோ சொல்வது அர்த்தமற்ற வாதம். செய்யமுடியாத தொன்றைச் செய்யவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்தபோது—தோல்வி நிச்சயம் என்று தெரிந்திருக்கும்போது—அத்தகைய சந்தர்ப்பத்தில் மனிதன் எப்படி நடந்துகொள்கிறான் என்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். காட்டுராஜாவை மனிதனால் ஜெயிக்க முடியாது என்பது தெரிந்ததே. ஆனால், அது தெரிந்திருந்தும் வேலப்பன் தன் கௌரவத்திற்காகவும், வள்ளியின் மீதுள்ள ஆழ்ந்த அன்புக்காகவும் தன் உயிரையே வேண்டுமானாலும் பணயமாக வைத்துச் சண்டை போடத் துணிந்தான். அந்தச் சண்டைக்கு ஒப்புக்கொள்ளும் சமயத்தில்—ஏன், கடைசி நிமிஷம் வரையிலும் கூட—அவனுக்கு அந்த மாட்டின் பலவீனத்தைப்பற்றித் தெரியாதே! அவன் மன உறுதியைத் தெரிந்துகொள்வதற்காகத்தானே நான் கடைசி நேரம்வரை அந்த ரகசியத்தை அவனுக்குத் தெரிவிக்கச் சொல்லாமலிருந்தேன்! ... அதிலிருந்துதான் அவனுடைய மனிதத்தன்மையை நிர்ணயித்தேன்..."

கணீரென்று சொல்லி முடித்தான் பெரியண்ணன். நாராயணசாமி மலைத்து நின்றான்.

என்றைக்குமே அவன் கண்களில் பெரிய மனிதனாகத் தோற்றமளித்த பெரியண்ணன், அப்போது மிகப் பெரியவனாகத் தோன்றினான். மேலுக்குப் பயங்கரமாகக் கொந்தளித்தாலும், ஆழ்ந்த அமைதியையும் எண்ணிறந்த முத்துக்களையும் ரத்தினங்களையும் தன்னுள்ளே அடக்கிவைத்திருக்கும் பெருங்கடலைப் போல் அவன் கண்களுக்குக் காட்சியளித்தது பெரியண்ணனின் உள்ளம்.

ஓரணாவுக்காக....

கன்னட மூலம்: எம். வி. சீதாராமையா

தமிழில்: ஹேமா ஆனந்ததீர்த்தன்

"பாலிஷ்."

"டக்-டக், டக்-டக்."

"பாலிஷ், பாலிஷ்."

"டக்-டக், டக்-டக், டக்-டக்...."

"பாலிஷ், சார், பாலிஷ்."

"டக்-டக், டக்-டக், டக்-டக்..."

"பாலிஷ் சார், பாலிஷ் சார்" என்ற தீனமான, கெஞ்சும் குரல் விடாது மார்க்கெட்டிலிருந்து பிரசவ ஆஸ்பத்திரி வரையிலும் என்னைப் பின்பற்றி வந்தது. எனது புது பூட்ஸ்களின் "டக்-டக்" சப்தமே அந்தக் கெஞ்சுதலுக்குப் பதிலாக அமைந்தது. நான் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. புது பூட்ஸானதையால் பாலிஷ் தேவையில்லையென்பது என் எண்ணம். எனவே அந்தக் குரல் எனக்காக அல்ல என்ற உதாசீனத்துடன் நடந்தேன். பழக்கப்படாத பூட்ஸானதையால் என் நடையே ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

பூட்ஸுகளின் மீது குறைந்தது 1/10 அங்குலம் அழுக்காவது படிந்திருக்கும் என்பதைப் பார்த்து, நான் அணிந்துகொண்டிருந்த கால் சட்டைக்கும் அவற்றிற்கும் பொருத்தம் இல்லையென்பதை அறிந்துகொண்டே அவன் அவ்வாறு என்னைப் பின்பற்றியிருக்கவேண்டும். கிடைக்கப்போகும் ஓரணாவுக்காக தொண்டை உலரக் கத்திக்கொண்டு அவ்வளவு தூரம் ஓடிவரும் முட்டாளாக அந்தச் சிறுவன் இருந்திருக்க முடியாது.

இவையெல்லாம் நான் பிறகு யோசித்தவை. அந்தச் சமயத்தில் நான் அவன் கதறலைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை.

பிரசவ ஆஸ்பத்திரிக்கு அருகில் நான் திரும்பிப் பார்த்தபோது அந்தப் பையனைத் தவிர வேறு யாரும் என் கண்களில் படவில்லை. எனவே அவன் என்னைத்தான் இதுவரையில் துரத்திக்கொண்டு வந்திருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை.

"பாலிஷ் போடட்டுமா சார்?"

"டக்-டக், டக்-டக்."

"ரொம்ப தூசி படிஞ்சிருக்கு சார்."

குனிந்து பார்த்தேன். மேலே சொன்னபடி 1/10 அங்குலம் தூசி படிந்திருந்தது, முதல் முறையாக என் கவனத்துக்கு வந்தது. 'வீட்டுக்குப்போய் கந்தைத் துணியால் துடைத்துக்கொண்டால் போயிற்று; இவனுக்கு எதற்காக ஓரணா கொடுக்க வேண்டும்' என்று நினைத்துக்கொண்டேன்.

"டக்-டக், டக்-டக்." இதுவே மீண்டும் என் பதில். நிரந்தரமான பதில்.

பாவம். சிறிது நேரம் மௌனமாகவே என்னைப் பின் தொடர்ந்தான்.

"உங்கள் கால் சட்டைக்கும் பூட்ஸுக்கும் பொருத்தமாகவே இல்லை சார். உங்கள் பூட்ஸ் டக்-டக் என்று சப்தம் செய்துகொண்டு, பளபள என்று பிரகாசித்தால் எல்லோரும் உங்கள் கால்களையே பார்க்க வேண்டாமா?"

எனக்குச் சிரிப்பு வந்தது. பச்சாத்தாபம் தோன்றியது. பூட்ஸுகளுக்கு பாலிஷ் தேவை தானென்றும் தோன்றியது.

"அங்கே அந்த பெஞ்சின் மேல் உட்கார்ந்துகொள்ளலாம் வா" என்று கோட்டை ஹைஸ்கூல் காம்பவுண்டுக்குள் அவனையும் அழைத்துக்கொண்டு நுழைந்தேன். அந்தப் பையன் ஒரே தாவாகத் தாவி என் முன்னால் ஓடி வந்து, "கொடுங்கள் சார், நான் கொண்டு வருகிறேன்" என்று என் கையிலிருந்த காய்கறிப் பையை வாங்கிக்கொண்டான். பெஞ்சருகே வந்ததும் பையைப் பெஞ்சின் மீது வைத்துவிட்டு, "வாங்க சார், உக்காருங்க இப்படி" என்று மரியாதையுடன் எனக்கு ஒரு இடத்தைக் காண்பித்தான்.

நான் உட்கார்ந்து கொண்டேன்.

பையனும் நிலத்தின் மீது உட்கார்ந்துகொண்டு கறுப்பு-சிவப்பு பாலிஷ் அங்கங்கே அப்பிக்கொண்டிருந்த ஒரு அழுக்குப் பையிலிருந்து ஒரு பாலிஷ் டப்பி, ஒரு பிரஷ், ஒரு கந்தைத் துணி இவற்றை எடுத்து வைத்துக்கொண்டான் தயாராக.

நான் பூட்ஸுகளை அவிழ்ப்பதற்காகக் குனிந்தேன்.

"அவிழ்க்காதிங்க சார். அப்படியே நீட்டுங்க".

அவன் என்ன சொல்லுகிறான்? ஏன் பூட்ஸுகளைக் கழட்டாதே என்கிறான்?

"காலை நீட்டுங்கள் சார். பூட்ஸுகளைக் கழட்ட வேண்டாம். அப்படியே பாலிஷ் போடுகிறேன். கழட்டுவதும் போடுவதும் அது வேறு இரண்டு நிமிஷம் லேட் ஆகும்."

"டேய். என் காலைப் பிடிக்கிறேனென்கிறாயேடா? நீ வேலை செய்கிறாய், கூலி வாங்கிக் கொள்கிறாய். என்னுடைய காலை ஏன் பிடிக்கவேண்டும்? அதற்காக நான் உனக்கு அதிகம் கூலி கொடுக்கப் போகிறேனோ?"

"நீங்கள் என்றைக்குமே பாலிஷ் போட்டுக்கொண்டது இல்லை போலிருக்கிறது, ஏன் சார்?"

"ஆமாம்."

"நீங்கள் நடக்கிறதைப் பார்த்தே தெரிந்துகொண்டேன்."

அட பொடிப்பயலே, எவ்வளவு சாமர்த்தியசாலி!

அவன் பாலிஷ் போட ஆரம்பித்துவிட்டான். ஐந்தே நிமிஷங்களில் இரண்டு பூட்ஸ்களின் கயிற்றையும் அவிழ்த்து பாலிஷ் போட்டு முடித்து மீண்டும் கயிற்றைக் கட்டிவிட்டு தன் வேலையின் அழகைத் தானே பார்த்து ரசித்துக்கொண்டான். அவன் பாலிஷ் போட்டுக்கொண்டிருந்தபோது என் கவனம் முதலில் அவன் கைகளின்பேரில் சென்றது. அவைகளில்தான் என்ன லாகவம்! பிறகு என் பார்வை கொஞ்சம் கொஞ்சமாக மேலேறி அவனது கிழிந்த சட்டை, பரட்டைத் தலை, அழுக்குப்

பிடித்த கதர்த் தொப்பி ஆகியவைகளின் பேரில் படிந்தது. என் மனத்தில் சொல்ல முடியாத ஒரு வேதனை ஏற்பட்டது.

என் உடையை ஒரு முறை பார்த்துக் கொண்டேன். பையனின் உடையை ஒரு முறை பார்த்தேன். நம் நாட்டு மக்களின் அஷ்டதரித்திரத்தின் கொடுமை அன்று தான் எனக்குப் புலனாயிற்று. மகாத்மா காந்தியின், நிர்வாண அடிகளின் வாய்மை அன்றுதான் எனக்குப் புரியலாயிற்று. என்னையே ஏழை என்று நினைத்துக்கொண்டிருந்த எனக்கு, அன்றுதான் கண்கள் திறந்தன. அந்த வறுமையின் நிர்வாணக்கோலம் எவ்வளவு மர்மமானது, எவ்வளவு பயங்கரமானது! தமக்குப் புரியுமா?

சட்டையின் கிழிசல் இருக்கட்டும்; அதன் அழுக்கும் இருக்கட்டும். அவன் கை கால்களில் நிறைந்திருந்த அழுக்கு, கிழிசல்களினூடே தெரிந்த அவனது உடம்பின் அழுக்கு, பரட்டைத் தலையிலே படிந்திருந்த எண்ணெய் அழுக்கு, கதர்த் தொப்பியின் மண்படிந்த நிறம், அழுக்குச் சட்டையில் அங்கங்கே அப்பிக் கொண்டிருந்த கறுப்பு, சிவப்பு பாலிஷ் வர்ணங்கள்—இவற்றைக் கண்டு எனக்கு மனம் நொந்தது. வெட்கமாகவும் இருந்தது. கேவலம், அற்பமான என்னுடைய பூட்ஸுகள் பளபளவென்று ஜொலிக்கவேண்டும்; இந்தப் பையனின் தலை தண்ணீரும் எண்ணெயும் காணாமல், அழுக்கு நிறைந்து, நாட்டின் வறுமையின் நிரந்தரச் சின்னமாக, ஆனாலும் யாராலும் லட்சியம் செய்யப்படாமல், இருக்க வேண்டும்! நம் எல்லோருடைய பூட்ஸுகளின் தூசியே அவன் தலைமீது சென்று படிந்திருக்கிறதோ என்று எனக்குத் தோன்றியது.

"பாலிஷ் போட்டாச்சு சார்."

அவன் தலையையே பார்த்துக்கொண்டிருந்த என் கண்கள் இப்பொழுது என் கால்களை நோக்கின. பூட்ஸுகள் பளபளவென்று பிரகாசித்தன. மீண்டும் கண்களின் பார்வை மேலே சென்றது. பையனின் அழுக்குத் தலை என் கண்களைக் குத்தியது.

எவ்வளவு மனம் நொந்தாலென்ன? எவ்வளவு யோசித்தால்தான் என்ன பயன்? என் ஒருவனின் கண்கள் திறந்தால் போதுமா? இந்தக் காட்சி நாட்டு மக்கள் அனைவரின் கண்களையும் குத்தவேண்டும், அவர்களுடைய கண்கள் திறக்கவேண்டும்.

பச்சாதாபத்தை முடிந்த அளவு காரியத்தில் காட்டவேண்டுமென நினைத்துப் பையிலிருந்து இரண்டு மாம்பழங்களை எடுத்து அவனிடம் கொடுத்தேன். எனக்கென்று வாங்கியிருந்த வாசனை சோப்பு ஒன்றையும் எடுத்துக் கொடுத்தேன். நன்றாகத் தேய்த்துவிட்டுக் கொண்டு குளிக்கும்படி சொன்னேன்.

கையிலே ஒரு நாலணாவையும் கொடுத்தேன்.

பையன் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டான். அதுவரை என்னென்னவோ பேசிக்கொண்டே இருந்தவன் இப்பொழுது மௌனமாகிவிட்டான். பற்களெல்லாம் தெரிய மனம்விட்டுச் சிரித்தான். திருப்தியின், சந்தோஷத்தின் காரணமாகப் பிறந்த அச்சிரிப்பு ஒரு கணம் அவனது அழுக்கு முகத்திற்குக் களை கட்டியது.

அந்தச் சிறுவனின், அவனைப்போன்ற லட்சக்கணக்கான, சிறுமைப்பட்டுப் போயிருப்பவர்களின் வாழ்விலே பிரகாசம் தோன்றும் நாள் எதுவோ?

புறப்படும்போது நான் அவனைக் கேட்டேன்.

"உங்கப்பா யார்?"

"அப்பா இல்லை சார்."

"அம்மா?"

பையன் தலையை ஆட்டினான்.

"நீ எங்கே இருக்கே?"

"புது தரகுப்பேட்டையில்."

"யார் வீட்டில்?"

"யார் வீட்டிலும் இல்லை."

"சாப்பாட்டுக்கு என்ன செய்யறே?"

"அங்கே ஒரு கிழவி இருக்கா. நான் சம்பாதிப்பதை எல்லாம் அவளிடம் கொண்டு போய்க் கொடுத்துவிடுவேன். அவள் எனக்கு சோறு போடுவாள்."

"தினமும் தவறாமல் உனக்கு துட்டு கிடைக்கிறதா?"

"கிடைக்காத நாளும் உண்டு. அந்த நாட்களில் பண்டாரம் எனக்குச் சோறு போடுவான்."

"பண்டாரமா?"

"ஆமா சார். அவன் தினமும் பிச்சை வாங்கி அந்த அரிசியையெல்லாம் கொண்டு வந்து கிழவிக்குக் கொடுத்துவிடுவான். அவள் அவனுக்கும் சோறு போடுகிறாள். எனக்கு துட்டு கிடைக்காத அன்றைக்கு அவன் எனக்குச் சோறு போடுவான். அவனுக்குச் சரியாக பிச்சை கிடைக்காத நாளில், நான் அவனுக்குச் சோறு போடுவேன்.."

தரித்திரர்களின் கூட்டுறவுச் சங்கம்!

அந்தச் சிறுவன் எனக்கு கொஞ்சம் கொஞ்சமாக நெருக்கமாகிவிட்டான். அவனுக்கு ஓரணா கொடுப்பதற்காகவே,

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்டபுண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

சைபால் CIBOL

ரமணீஸ் **பேபி கிரைப்**

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

அட்டைப் படம்

ஆடிக் காற்றின் வேகத்திலே அவள் உள்ளத்திலும் ஏதேதோ எண்ணச் சுழல்கள் நிகழ்கின்றன போலிருக்கிறதே! மெத்தையிலே பதிந்திருக்கும் அவளுடைய முக கமலம்தான் எத்தனை சிந்தனை ரேகைகளைப் பிரதிபலிக்கின்றது! "..கைத்தலம் பற்றக்கனாக்கண்டேன் தோழீ நான்" என்று ஆண்டாள் கனவு கண்டதுபோல், இந்த ஆவணியிலாவது தன் திருமணம் நிகழ்ந்துவிட வேண்டுமே என்று கனவு காண்கிறாளோ, இந்தக் கட்டிளங் கன்னி! ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்; கன்னிப் பெண் வேறு என்னத்தைத்தான் அப்படிச் சிந்திக்கப் போகிறாள்!

ஓவியர் 'ரமணி' தீட்டியுள்ள அழகு மணிச் சித்திரம் இது.

தேவை இருந்ததோ இல்லையோ, அடிக்கடி என் பூட்ஸுகளுக்குப் பாலிஷ் போட்டுக்கொண்டேன்.

ஒரு வருஷம் ஓடிவிட்டது. என் பூட்ஸுகள் ரிப்பேர் செய்யவேண்டிய நிலைமையை அடைந்துவிட்டிருந்தன. யுத்தத்தின் காரணமாக பூட்ஸுகளின் விலை ஏகமாக ஏறிப்போயிருந்தது. பழைய பூட்ஸ் கொஞ்சம் கிழிந்து போனதும் வீசி எறிந்துவிட்டு புதிது வாங்கிக்கொள்ளும் வர்க்கத்தில் நான் சேரவில்லை. ஆனால் பழைய பூட்ஸுகளை ரிப்பேர் செய்து கொள்வதற்கும் அலுப்பு. சோம்பேறித்தனம். பூட்ஸ் போட்டுக்கொள்வதையே விட்டு விட்டேன்.

அந்தப் பையனை மாத்திரம் தினமும் சந்தித்துக்கொண்டு தான் இருந்தேன். பூட்ஸ் இல்லாத என் கால்களைப் பார்த்து அவன் சிரிப்பான்.

"பூட்ஸ் ரிப்பேர் செய்துக்குங்க சார். கொண்டு வாங்க நான் செய்து தருகிறேன். நீங்கள் துட்டு கொடுக்க வேண்டாம். ரிப்பேர் செய்து பாலிஷ் போட்டுக் கொடுக்கிறேன். நான் சாகும்வரையில் உங்கள் பூட்ஸுக்குப் பாலிஷ் போட்டுக் கொடுத்தாலும் கடன் தீர்க்க முடியாத அவ்வளவு நீங்கள் ஏற்கெனவே எனக்கு கூலி கொடுத்திருக்கிறீர்கள். உங்களுக்கு பாத சேவை செய்தாலாவது புண்ணியம் கிடைக்கும்"—என்றான் ஒரு நாள் அந்தப் பையன். இந்தச் சிறு பையனின் வாயிலிருந்து எவ்வளவு பெரிய வார்த்தைகள்! அவன் சொன்னது போல நானொன்றும் அவனுக்கு வாரி வழங்கியிருக்கவில்லை. என்னிடத்தில் அவனுக்கு அவ்வளவு பிரியமும் விஸ்வாசமும் ஏற்பட்டு விட்டன.

பாலிஷ் போட்டுக்கொள்ளாவிட்டாலும் அவனைப் பார்த்தபோதெல்லாம் அரையணாவோ ஓரணாவோ கொடுப்பேன். வேண்டாம் என்பான். 'வேர்க்கடலை வாங்கிச் சாப்பிடு' என்று சொல்லிக் கட்டாயப்படுத்திக் கொடுத்துவிடுவேன்.

சில மாதங்களாக அவன் என் கண்களில் படவில்லை. நான் என் பழைய பூட்ஸுகளையே ரிப்பேர் செய்துகொண்டு போட்டுக்கொள்கிறேன். அதில் ஒரு அங்குலம் தூசி படிந்து போயிருக்கிறது. பாலிஷ் போட்டுக்கொள்ள அலுப்பு.

அவன் எங்கோ காணோம். அவன் காணப்படாத அன்றே பிரசவ ஆஸ்பத்திரிக்கு அருகில் ஒரு கார் விபத்து நிகழ்ந்ததாகவும் அதில் ஒரு அநாதைச் சிறுவன் சிக்கி செத்துப்போனதாகவும் பத்திரிகைகளில் படித்த நினைவு. அந்தச் சிறுவன் இவனாக இருக்குமோ?

தாருப்பேட்டையில் ஒரு நாள் தபாலாபீஸுக்குப் போய்க்கொண்டிருந்தபோது ஒரு பண்டாரத்தைக் கண்டேன். பாலிஷ்காரப் பையனைப்பற்றி அவனை விசாரித்தேன். காணாமற்போன ஒரு பையனைப் பற்றிய சமாசாரத்தை அவன் தந்தையிடம் சொன்னால் எவ்வளவு ஆவலோடும் பரபரப்போடும் கேட்பாரோ அப்படியே அந்தப் பண்டாரம் என்னிடம் கேட்டான்: "அந்தப் பையனைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா, சாமி? தெரிஞ்சா சொல்லுங்க சாமி. அவன் இல்லாமல் எனக்குச் சாப்பாடே பிடிக்கவில்லை."

பண்டாரத்திடமிருந்தும் அந்தப் பையனைப் பற்றிய விஷயம் தெரியவில்லை. அவன் கார் விபத்தில் மாட்டிக்கொண்டு இறந்துதான் போயிருக்க வேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டேன். நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டது என் இதய ஆழத்திலிருந்து.

நான் இப்பொழுது பூட்ஸ் போட்டுக்கொள்வதில்லை. பளபளவென்று பிரகாசிக்கும் பூட்ஸுகளை யார் கால்களிலே கண்டாலும் அந்தப் பையனின் நினைவுதான் வருகிறது. அந்த நினைவை வெகு பவித்ரமானதாக என் இதயத்திலே வைத்துக் காப்பாற்றி வருகிறேன். என் உள்ளத்தின் அழுக்குகளைப் போக்கி 'பாலிஷ்' போடுகிறது, அந்தப் பையனின் நினைவு.

மணமகன்: எவரஸ்ட் ஸ்ரீ ஸ்வாமியின் சகோதரருடைய புத்திரர், சிர. எம். எஸ். சுப்பிரமணியம். மணமகள்: டாட்டா ஆயில் மில்ஸ், டாடாபுரத்தில் இஞ்சினீர்-இன்-சார்ஜ் ஸ்ரீ தோராமனின் புத்திரி சௌ. கங்கா. ஜூன் 29-ந் தேதி இவர்களுடைய விவாகம் கணியூரில் நடந்தது.

தலைநகர் பால்.....

டிஸம்பர் மாதம் தில்லி மாநகரில் நடைபெறவிருக்கும் ஆசிய நாடுகளின் எழுத்தாளர் மகாநாட்டில் உலக எழுத்தாளர்களில் சிறப்பிடம் பெற்றுள்ள ஸ்ரீ ஜவாஹர்லால் கலந்துகொள்வார் என்று தெரிகிறது. முப்பது ஆசிய நாடுகளைச் சேர்ந்த சிறந்த எழுத்தாளர்களைத்தவிர, மேற்கத்திய எழுத்தாளர் பலரும் பார்வையாளராக வரப்போகிறார்களாம்.

இங்கு சென்ற மாத இறுதியில் நடந்த ஆயத்த மகாநாடு, அதன் தீர்மானங்களை அறிக்கை ஒன்றில் விவரித்திருக்கிறது. 'ஆசிய நாடுகளின் இலக்கியம்', 'ஆசியாவின் சுதந்திர எழுச்சி', 'ஆசிய நாடுகளுக்கிடையே கலாசாரப் பரிவர்த்தனை' ஆகியவைபற்றி டிஸம்பர் மகாநாட்டில் எழுத்தாளர்கள் ஆலோசனை நடத்துவார்கள். பர்மா, சைனா, கொரியா, நேபாளம், வியத்நாம் முதலான பல நாடுகளிலிருந்தும், பாரதநாடுமுழுவதிலிருந்தும்சுமார் 12 பேர் ஆயத்த மகாநாட்டில் கலந்துகொண்டு,பூர்வாங்கஏற்பாடுகளுக்குதிட்டமிட்டார்கள். தமிழ்நாட்டு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட ஸ்ரீ கே.எஸ்.ஜம்புநாதனும்,சென்னை 'ஜனசக்தி'யைச்சேர்ந்த ஸ்ரீ முத்தையாவும் இதர மொழிப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து முயன்றதன் விளைவாக டிஸம்பர் மகாநாட்டிற்கு முன்பாக இந்திய எழுத்தாளர் மகாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது. இந்திய எழுத்தாளர் தம் நாட்டின் மொழிகளின் இலக்கிய வளத்தை ஓரளவாவது உணர்ந்துகொள்ள வழி வகை செய்வதாக அந்த மகாநாடு அமையும்.

ஆயத்த மகாநாட்டில் வெளிதேசப் பிரதிநிதிகளும், இதர இந்திய மொழியினரும் தமிழ் இலக்கியத்தைப்பற்றி விசாரிக்கலாயினர். அதுவும் 'குறள்' பற்றி பல பிரதிநிதிகள் விசாரித்தார்கள். வ. வெ. ஸு. அய்யர் ஆங்கிலத்தில் எழுதிய குறள் மொழிபெயர்ப்பு நூலையும், தில்லித் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட 'தமிழ் வரலாறு' என்ற ஆங்கில நூலையும், ஸ்ரீ ஜம்புநாதன் அந்தப் பிரதிநிதிகளுக்கு வழங்கினார். ஆசிய மகாநாட்டில் ஆங்கிலமே பொது மொழியாக இருக்க வேண்டும் என்று ஆயத்த மகாநாட்டில் தீர்மானம் உருவாவதற்கு தென்னாடு—அதுவும் தமிழ்ப் பிரதிநிதிகள்—பெரிதும் காரணஸ்தர்கள் என்றால் மிகையாகாது. வழக்கம்போல, ஹிந்திமட்டுமே பொது மொழியாக இருக்க வேண்டும் என்ற வாதப் பிரதிவாதங்கள் பல நடந்தன என்று சொல்லத் தேவையில்லை.

° ° °

அச்சுக் கலை சம்பந்தமாக அரசாங்கம் இந்த நவம்பர் மாதத்தில் தனது வருஷாந்தரப் போட்டியை நடத்தப்போகிறது. சிறந்த வகையில் அச்சான நூல்

களுக்கும், அரியமாதிரிகளுக்கும் விருதுகள் கிடைக்கும். குழந்தைகளுக்கான புத்தகங்கள், படங்கள் நிறைந்த நூல்கள், ஆங்கில நூல்கள், இந்திய மொழி நூல்கள், தினசரிகள், கலை சஞ்சிகைகள், சுவரொட்டிகள் முதலானவற்றை இந்தப் போட்டிக்கு அனுப்பிவைக்கலாம். ஆனால் அவையெல்லாம், 1955 ஆகஸ்டு 15க்குப்பின் தயாரானவையாக இருக்க வேண்டும். சென்றவருஷம் முதல் போட்டி நடந்தது நினைவிருக்கலாம். அச்சடிப்பதில் உயர்ந்த தரத்தையும், புத்தகங்களிலும் பிரசாரப் பிரசுரங்களிலும் கவர்ச்சிகரமான மாதிரிகளையும் ஆதரித்து ஊக்கமளிப்பதற்கான இந்த அகில இந்தியப் போட்டியில், போன வருஷத்தைப் போலில்லாமல், இந்தமுறையாவது தமிழகம் முழு வீச்சில் ஈடுபட வேண்டும். கவர்ச்சிகரமான அச்சு வகைகளும், விதவிதமான மாதிரி வகைகளும் பெருகியிருப்பதை, சமீபத்தில் வெளியான நூல்களும் பிரசுரங்களும் நன்கு விளக்கியுள்ளன. தமிழ் நாட்டு பிரசுரகர்த்தர்கள் எல்லோரும் தவறாது கலந்துகொள்ள வேண்டியபோட்டிஇது; போட்டிக்குவரும் நூல்களில் முதலானவற்றைக்கொண்ட காட்சி ஒன்றை, நவம்பரில் யுனெஸ்கோ மகாநாட்டின்போது நடத்தப்போகிறார்கள். இந்தியாவின் அச்சுக் கலைத் தேர்ச்சியை பிறருக்கு எடுத்துக் காட்டவிருக்கும் இந்தக் காட்சியில், தமிழகமும் அதன் கைவரிசையைக் காட்ட வேண்டும்.

ஆசிரியரின் பதில்

பிரபலமாக எல்லாப் பத்திரிகையிலும் கதைகள் வெளியாகிக் கொண்டிருந்த ஒரு ஆசிரியருக்குத் தினம் ஏழெட்டு அசட்டுக் கடிதங்களாவது வரும். 30 கட்டுரைகளை எழுதி அத்துடன் ஒரு கடிதமும் எழுதியிருந்தார் ஒரு ஆரம்ப ஆசிரியர், "இவற்றையெல்லாம் எங்கே போடலாம் என்று தங்கள் அனுபவத்தைக் கொண்டு தெரிவித்தீர்களானால் நன்றி உள்ளவனாக இருப்பேன்" என்று.

"போட நல்ல இடம் இருக்கிறது" என்று பதில் எழுதிய பிரபல ஆசிரியர், "கடலில் கொண்டுபோய்ப் போடுங்கள்" என்று யோசனை கூறினார்.

★

புதுசாக எழுத ஆரம்பித்த ஆசிரியர் ஒருவர் லண்டன் மர்க்குரி என்ற ஒரு மாதப் பத்திரிகையின் ஆசிரியரான ஸ்கொயர் என்பவருக்கு ஒரு கதை அனுப்பினார். அந்தக் கதையுடன் ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

'உயிருடனிருப்பவர்களோ, இறந்தவர்களோ—நிஜ மனிதர்கள் யாரையும்போல் நான் என் பாத்திரங்களைச் சிருஷ்டிக்க முடியவில்லை.'

'அதுதான் பிசகு. இதில் வரும் பாத்திரங்கள் உயிருடனுமில்லை. இறந்தவர்களுமில்லை' என்று பதில் எழுதிக் கதையைத் திருப்பி அனுப்பினார் ஸ்கொயர்.

—எஸ். ராஜா.

இலங்கை லிகிதம்

★

இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் இம்மாதம் 18-ந் தேதி திருகோணமலையில் நடத்தவிருக்கும் வருடாந்தர மகாநாட்டுக்கு மிகப் பெரிய தோரணையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நாட்டின் எண்திசைகளிலிருந்தும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஒரு வாரம் முன்னதாகவே புறப்பட்டு, நாடு நகரங்களையெல்லாம் இலங்கையின் சரித்திரத்தில் முதன் முறையாக நடையாகவே நடந்து திருகோண மலையை அடைவார்கள். தமிழ் அரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்தபொழுது நாட்டில் பெரிய கொந்தளிப்பும்வகுப்புக் கலகமும் ஏற்பட்டன. அதேமாதிரி மீண்டும் ஏற்படாதபடி தடுக்க முன்னேற்பாடாக போலீஸ் ராணுவ பந்தோபஸ்து நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளப்போவதாக பிரதம மந்திரி ஸ்ரீ பண்டார நாயகா பத்திரிகை நிருபர்களின் மகாநாட்டில் அறிவித்திருக்கிறார்.

தமிழரசுக் கட்சி மகாநாட்டில் சுமார் பத்தாயிரம் பேர்களுக்கு மேல் கலந்து கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது. தமிழரசுக் கட்சிக்கு ஸ்ரீ ஸி. வன்னிய சிங்கம் மறுமுறை தலைவர் பதவிக்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீ வன்னிய சிங்கம் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்திருந்தது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

ஃ ஃ ஃ

இவ்வாரம் வரவு செலவு திட்டத்தைப் பற்றி ஸ்ரீ ஏ. அமிர்தலிங்கம் பார்லிமெண்டில் பேசியபொழுது, "வடிகட்டின வகுப்புவாத பட்ஜட்" என்று அதை வர்ணித்தார். கொழும்புக்கு வரும் எல்லா கப்பல்களையும் கொழும்பு துறைமுகத்தில் சமாளிக்க முடியவில்லையென்பதை நிபுணர்கள் கமிட்டியொன்று எடுத்துக்காட்டி, தமிழ்ப் பிரதேசங்களிலிருக்கும் காங்கேசன் துறை, திருகோணமலை ஆகிய இரு துறைமுகங்களையும் வர்த்தகத் துறைமுகங்களாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தது. ஆனால் அரசாங்கமோ நிபுணர்கள் தேர்ந்தெடுத்த இவ்விரண்டு துறைமுகங்களையும் விட்டு, சிங்களப் பிரதேசத்திலிருக்கும் காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய பட்ஜட்டில் பணம் ஒதுக்கியிருக்கிறது. கல்வி இலாகாவின் மான்யத்தில் ஓராயிரம் சிங்கள ஆசிரியர்களை நியமிக்க பணம் ஒதுக்கிவிட்டு, தமிழ் ஆசிரியர்கள் சம்பந்தப் பட்டமட்டில் அரை டஜன் பேர்களை மட்டுமே நியமிக்க நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் ஸ்ரீ அமிர்தலிங்கம் இவற்றை எடுத்துக்காட்டி "இதற்குப் பெயர் வகுப்புவாதம் இல்லாவிட்டால் வேறு என்ன?" என்று வினவினார்.

தோட்ட முதலாளிமார்களின் ஒத்துழையாமை காரணமாகவே பல்லாயிரக் கணக்கான இந்தியத் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை கிடைக்க முடியாமற் போகிறதென்று காங்கிரஸ் பலமாகப் புகார் செய்திருக்கிறது. சட்டப்படி பிரஜா பதிவுக் கமிஷனர் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பினால் மூன்று மாத காலத்திற்குள் அந்த நோட்டீஸ்களுக்கு தொழிலாளர் பதில் கொடுத்தாக வேண்டும். பதில் கிடைக்காவிட்டால் பிரஜா உரிமை மனுவை கமிஷனர் தள்ளுபடி செய்து விடலாம். தோட்ட விலாசங்களுக்கு வரும் இம்மாதிரி நோட்டீஸ்கள் தொழிலாளரிடம் ஒழுங்காக பட்டுவாடா செய்யப்படாமல் தோட்டக் காரியாலயங்களிலேயே கிடக்கின்றன. இதனால் தவணை காலம் தாண்டிப்போய் பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன.

ஃ ஃ ஃ

ஆஸாத் காஷ்மீரிலிருந்து வந்த இருவர் கொழும்பில் பத்திரிகை நிருபர்களின் மகாநாடு கூட்டி இந்தியாவை எவ்வளவு தூரம் தூற்ற முடியுமோ அவ்வளவு தூற்றினார்கள். ஹிட்லர், முசோலினியைப்போல நேருஜியும் ஒரு சர்வாதிகாரியென்றும், ஆசியா முழுவதையும் ஆக்ரமிக்க அவர் திட்டம் போட்டிருப்பதாயும், அவரிடம் இலங்கை மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமென்றும் பூச்சாண்டி காட்டினார்கள். ஆனால் இந்த தூது கோஷ்டி இலங்கைக்கு வந்ததைப்பற்றியோ அல்லது அவர்கள் பத்திரிகை நிருபர்கள் மகாநாடு நடத்தியதைப்பற்றியோ இலங்கைப் பத்திரிகைகள் ஒரு வரி கூடப் பிரசுரிக்கவில்லை. பாகிஸ்தானிடம் அக்கறையுடைய சில பெரிய 'தலைகள்' பகீரதப் பிரயத்தனங்களைச் செய்து பார்த்தும்கூட இலங்கைப் பத்திரிகைகள் தூது கோஷ்டியின் முகத்தில் கரியை அள்ளிப் பூசிவிட்டன! இதேபோல மலாயா பத்திரிகைகளும் ஆஸாத் காஷ்மீர் தூது கோஷ்டியை அவமானப்படுத்தி அனுப்பியது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இந்த சம்பவம் இன்னொரு அதிமுக்கியமான விஷயத்தையும் அறிவுறுத்துவதாக இருக்கின்றது. ஸர் ஜான் கொத்தலாவலை பிரதம மந்திரியாயிருந்த காலத்தில் இலங்கை பாகிஸ்தான் பக்கத்தில் அதிகமாகச் சாய்ந்து வந்தது. சில பத்திரிகைகளும் அதற்குத் தகுந்தபடி தாளம் போட்டு வந்தன. அந்தக் காலங்களில் இந்தியாவிற்குப் பாதகமான கட்டுரைகளும் செய்திகளும் பிரசுரமாவதும் சகஜம். இலங்கையின் புதிய பிரதம மந்திரியான ஸ்ரீ பண்டார நாயகா நேருஜியின் சிறந்த நண்பரென்பதோடு வெளிப்படையாகவே நேருஜியின் கொள்கைகளையும் ஆதரிப்பதனால், அதை அனுசரித்து பத்திரிகைகளிடமும் ஒரு நல்ல மன மாற்றம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

துப்பறியும் சுப்புடு
மாலே மணி 7 இருக்கும். காந்தி பார்க்கில் நிறைய கூட்டம். மின்சார விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ரேடியோவும் பாடிக் கொண்டிருந்தது.
ஒரு ஓரத்தில் இருந்த பெஞ்சியின் மீது உட்கார்ந்து ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தான் சுப்புடு.
மற்றொரு புறத்தில் ஒரு பெஞ்சியின் மீது ஒரு ஆசாமி, சாய்ந்து படுத்தபடி, தன்னை மறந்து ரேடியோ சங்கீதத்தை ரசித்துக் கொண்டிருந்தார்.
அவருடைய இடதுகை பெஞ்சிக்குப் பின்னால் தொங்கிக் கொண்டிருந்தது. அதில் அணிந்திருந்த வைர மோதிரம் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.
பாட்டின் இனிமையிலும் காற்றின் சுகத்திலும் சிறிது, கண்ணயர்ந்து விட்டார் மனுஷர்.
கொர்!..கொர்!..ர்
புஸ்...ஸ்...ஸ்....
அதே சமயம் அவருக்குப் பின்னால் பெஞ்சியின் அடியில் உட்கார்ந்திருந்த ஒரு ஆசாமி சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டான். மெள்ள மோதிரத்தை இழுத்துப்பார்த்தான்.
பிடிப்பில்லாமல் இருந்த மோதிரம் இலகுவில் அவன் கைக்கு வந்து விட்டது.
திடுக்கிட்டுத் தூங்கியவர் விழிக்கவே திருட்டுப் பேர்வழி மெள்ள நகர்ந்து விட்டான்.
ஐயையோ! இது என்ன? என் வைர மோதிரத்தைக் காணோம்! யார் எடுத்தது? அட பாவிகளா!!
அவர் அலறலைக் கேட்டுக் கூட்டம் கூடிவிட்டது.
என்ன சார்! என்ன நடந்தது?
என்னுடைய கஷ்டகாலம். கொஞ்சம் கண்ணயர்ந்துவிட்டேன். என் விரலிலிருந்த வைர மோதிரத்தை எவனோ கழட்டி விட்டானே!
அடடா!
பாவம்! மனுஷர் அலறுகிறார்! யாரிடமாவது தப்பித்தவறி கிடைத்திருந்தால் அவரிடம் கொடுத்து விடுங்கள்.
இதற்கிடையில் உண்மைத் திருடன் பார்க்கை விட்டு, நைஸாக வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தான். அதே சமயம் வாழைப் பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்த சுப்புடு தோலை வீசி எறிந்தான்.
ராஜ நடைபோட்டு வந்த திருடன் அதன் பேரிலா காலை வைக்க வேண்டும்?
சர்...ர்...ர்
வேகமாய் அவன் சறுக்கி விழவே, தலை தடாலென்று தரையில் மோதியது. உடனே அவன் வாயிலிருந்து துள்ளி வெளியே விழுந்தது மோதிரம்!
அயோக்கியா! மோதிரத்தைத் திருடி வாயில் போட்டுக் கொண்டா ஓடப்பார்த்தாய்? வா! போலீஸ் ஸ்டேஷனுக்கு!
என்னுடைய நல்ல காலம் உங்களைப் பார்க்கும்படி செய்தது! உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

படித்திருக்கிறீர்களா?

க.நா. சுப்ரமண்யம்

இன்று தமிழ் இலக்கியத்தில் தோன்றியிருக்கும் ஒரு புது வேகத்துக்கு, ஒரு புது உயிர்ப்புக்கு அடிகோலியவர் வ. வே. ஸுப்ரமண்ய ஐயர் என்று சொன்னால் அது மிகையாகாது. எல்லாரும் சுப்ரமணிய பாரதிபோலக் கவி பாடவும், வேகம் பெறவும் முடியாது. ஆனால், இலக்கிய விமர்சனத்திலும், கதை எழுதுவதிலும், வசனத் தெளிவிலும் எழுதுகிறவர்கள் எல்லாருமே வ. வே. ஸு. ஐயர் போல ஆக முயலலாம். அந்த முயற்சிக்குத்தான் இன்றுவரை மறுமலர்ச்சி என்கிற பெயர் வழங்கி வந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. இலக்கியத்தைப் பற்றிய வரையில் மறுமலர்ச்சி என்கிற வார்த்தையை முதன் முதலில் உபயோகித்த வரும் அவர்தான் என்று எங்கேயோ படித்த ஞாபகமாக இருக்கிறது. எனினும் இதைத் திடமாக என்னால் சொல்ல முடியாது.

மங்கையர்க்கரசியின் காதல் என்கிற கதைத் தொகுதியில் எட்டுக் கதைகள் அடங்கியிருக்கின்றன. இதற்கு முன்னரும் தமிழில் கதைகள் இல்லாமல் இல்லை. ஆனால், இன்று நாம் உபயோகப்படுத்துகிற சிறப்பான அர்த்தத்தில், சிறுகதை என்கிற வார்த்தை உபயோகப்படத் தொடங்கியது இந்தத் தொகுதியுடன் தான் என்று சொல்லவேண்டும். கனமான நடையில், கம்பீரமான ரீதியில் வ. வே. ஸு. ஐயர் இந்த எட்டுக் கதைகளையும் நமக்கு எழுதியளித்திருக்கிறார். படித்துப் போற்றி அனுபவிக்க வேண்டிய பொக்கிஷம்.

"மங்கையர்க்கரசியின் காதலும், காங்கேயனும் கயேலிக் மகாகவியான ஒஸ்ஸியானுடைய காவியங்களின் பந்தாவில் எழுதப்பட்டிருக்கின்றன" என்று முகவுரையில் சொல்லுகிறார் ஆசிரியர். "இவை தமிழ்நாட்டுப் பழைய வீரத் தன்மையையும், பழக்க வழக்கங்களையும் ஒருவாறு விளக்கிக் காட்டும்... ராதி புதிது... அழேன்ழக்கேயின் சரித்திரம் இந்த லோக யுத்தத்தில் நிகழ்ந்த ஓர் உண்மைக் கதை. கமல விஜயம் என்பது இந்த யுத்தத்தில் நடந்ததாகக் கற்பித்து எழுதிய கதை." கிரேக்கர்களின் புராணங்களைச் சேர்ந்த எதிரொலியாள் கதையை வெகு அழகாகத் தமிழில் சொல்லியிருக்கிறார். அதைத் தவிர நித்தியமான காதல் கதைகளான லைலா மஜ்னுவையும், அனார்கலியையும் சுவைபடச் சொல்லியிருக்கிறார். "கதைகள் கலிந்த நிரம்பியவையாய், ரஸபாவோபேதமாய் இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம்" என்று முடிவுரையில் குறிப்பிட்டிருக்கிறார் ஆசிரியர். ஆங்கிலம், பிரெஞ்சு, தமிழ், சம்ஸ்கிருதம், கிரேக்கு, லத்தீன் முதலிய பாஷை இலக்கியங்களையும், இலக்கிய உத்திகளையும் சுயப் பிரக்ஞையுடன், கலைஞனுடைய நோக்குடன் படித்து, அனுபவித்து அறிந்த ஐயர் அவர்கள் தன் கதைகளுக்கு அற்புதமான உருவம் கொடுக்க முயன்று வெற்றி பெற்றிருக்கிறார்.

"குலோத்துங்க சோழனுக்காகக் கலிங்கம் சென்று வென்று வந்த கருணாகரத் தொண்டைமானுடைய மகளான மங்கையர்க்கரசி என்னும் மங்கை, கருணாகரன் என்னும் வாலிபனைக் காதலிக்கிறாள். அவள் தகப்பன் இறந்துவிட்டதால், அவளுடைய சிற்றப்பன்தான் தற்காலம் அவள் குடும்பத்துக்குத் தலைவன். அவன் அவளை மார்த்தாண்டன் என்னும் வேறு ஓர் இளைஞனை மணக்கும்படி வற்புறுத்தி வருகிறான். ஆனால், மங்கையர்க்கரசி கருணாகரனையே விவாகம் செய்துகொள்வது என நிச்சயித்துக்கொண்டு, அவனை ஒரு நாள் இரவு ஊரின் புறத்திலுள்ள ஒரு காளி கோயிலுக்கு வரும்படி சொல்லிவிட்டுத் தான் குறித்த நேரத்தில் கோயிலுக்குச் சென்று காத்துக் கொண்டிருக்கிறாள்" என்று சூசிகையில் ரத்தினச் சுருக்கமாக Setting (பகைப் புலத்தை) வாசகர்களுக்கு அறிவித்துவிட்டு கதையைத் தொடங்குகிறார். கதையின் பாவத்துக்கு முதல் வார்த்தைகளே அஸ்திவாரம் தருகின்றன: "எங்கே பார்த்தாலும் இருள், காரிருள்; கறுத்த கனத்த மேகங்கள் வானத்தில் இடைவிடாது சென்று கொண்டிருக்கின்றன.



வ. வே. ஸு. ஐயர்.

சந்திரன் சற்று நேரத்துக்குத் தோன்றுகிறான். உடனே முன்னிலும் கனமான மேகங்களுக்கிடையில் மறைந்துவிடுகிறான். காற்று சீறிக்கொண்டு செல்கிறது. தூரத்தில் புலியும் கரடியும் உறுமிக் கொண்டிருக்கின்றன. பக்கத்துக் கொல்லைகளில் நரிகள் ஊளையிட்ட வண்ணமாக இருக்கின்றன. அதோ அந்த ஆலமரத்தின் மீதிருந்து ஒரு கோட்டான் பயங்கரமாகக் கத்துகிறது; உடனே நிறுத்திவிடுகிறது. காதலன் வரவு நோக்கி நின்ற காரிகை, காளியிடம் முறையிட்டுக் கொள்கிறாள். காதலன் வரவில்லை. மார்த்தாண்டன் வந்து, 'நான் அவனைத் தனிவழியில் மறித்து வீர சுவர்க்கம் அனுப்பிவிட்டேன்' என்கிறான். தன்னை ஏற்றுக் கொள்ளச் சொல்லி வேண்டுகிறான். ஆனால், கருணாகரன் விழுந்த இடத்தைக் காட்டச் சொல்லிக் கேட்கிறாள் மங்கையர்க்கரசி.

"மரத்தடிக்குச் சென்றாள், சென்றாள். உடனே விழுந்தாள், விழுந்தாள். கோவென்று அலறினாள்... என் காதற் கணவனே என்று புலம்பினாள். 'என் நாதா, உன் உதடு அசைகிறதுபோல இருக்கிறதே! என்னை அழைக்கிறாயோ? வந்தேன்! வந்தேன்!' இவ்வாறு பிரலாபித்துக் கொண்டே உயிரற்ற கருணாகரனின் உடல்மீது விழுந்து வெகு நேரம் கிடந்தாள். எழுந்தபோது, அவள் உருவமே மாறுபட்டுப் போயிருந்தது. இப்பொழுது அவள் ரௌத்ராகாரமாக விளங்குகிறாள். மேகங்கள் சந்திரனை மூடிவிட்டன. அந்த நள்ளிரவில் அவள் கண்கள் தழல்விட்டு எரிகின்றன. காளியே மனித உரு எடுத்தாற்போல் நிற்கிறாள்... மார்த்தாண்டனை ஏற எடுத்துப் பார்த்தாள்... 'என்னை மணக்கலாம் என்றல்லவோ இருந்தாய்! இந்தா மாலையிடுகிறேன் வா' என்று சொல்லிக் கொண்டே, மார்த்தாண்டன் மருமத்தில் கைப்பிடியால் குத்தி வீழ்த்திவிட்டாள். '..பழி வாங்கிவிட்டேன். இதோ நானும் வந்துவிட்டேன்' என்று கருணாகரன் உடல் இருந்த இடம் சென்று தன்னையும் குத்திக்கொண்டு விழுந்துவிட்டாள். மங்கையர்க்கரசியின் காதல் இவ்விதம் முடிந்தது."

அளவில் மிகச் சிறியதான இந்தக் கதையில் கவிதை நயமும், பாவ ஆவேசமும் ஏராளமாகவே காணக் கிடைக்கின்றன. சில இடங்களில் இது கவிதையாக அமைந்துவிட்ட கதையோ, வசனத்தில் இவ்வளவு வேகமும் சாத்தியமா என்று எண்ணச் செய்கிறது. இதேபோல அனார்கலி என்கிற கதையிலும் ரஸபாவோபேதம் ஏராளமாகவே இருக்கிறது. எல்லோருக்கும் சாதாரணமாகத் தெரிந்த ஒரு கதையை விசேஷமாக நடத்திச் செல்லுகிற சிரமமான காரியத்தை மிகவும் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார் வ. வே. ஸு. ஐயர். யுவராஜன் ஸலீம், ஏழைப் பெண் அனார்க்கலியிடம் தன் காதலை வெளியிடுகிற கட்டம். "அனார்க்கலி! உனது லாவண்யத்தின் சக்தி உனக்குத் தெரியவில்லை; மலையினின்று விழும் நீரருவிபோலத் தெளிவாயும், பரிசுத்தமாயும் இருக்கிற உன் சுபாவத்தின் ஆகர்ஷண சக்தி உனக்குத் தெரியவில்லை; ஆனால், நான் அவற்றை அறி

கிறேன்; காந்தம் ஊசியை இழுப்பது போல அவை என்னை உன் வசப்படுத்தி விட்டன; இனிமேல் நான் ஸலீம் அல்லேன்; அக்பர் ஷாவின் ஜேஷ்ட புத்திரனும், யுவராஜனும் அல்லேன்; என் அனார்க்கலியின் குலமாகிவிட்டேன்'' என்றான் ஸலீம். ஆனால், அனார்க்கலி ஒதுங்கி நின்றாள். "முயற்குட்டிக்குச் சிங்கத்தை மணக்கும் பாக்கியம் வருமா? தெருவில் மிதிபடும் தும்பைப்பூ, சூரியனை இச்சிக்கலாமா? ஆகையால் எனக்குத் தங்கள் மீதுள்ள காதலை இருதயத்தை விட்டுப் பறித்துவிட்டேன்'' என்றாள் அனார்க்கலி. யுவராஜனின் காதலுக்குப் பாத்திரமான குற்றத்துக்காக அனார்க்கலி காவலில் வைக்கப்பட்டாள். ஸலீம் வந்து காப்பாற்றுவான் என்று காத்திருந்தாள். நாட்கள் சென்றன. வருஷங்கள் ஆயாக அனார்க்கலியின் சரீரம் மெலிந்து விண்டுபோய்விட்டது. அன்புக்கும் மலர்களுக்கும் அவள் மனம் தவித்தது. அவ்விரண்டையும் தவிர மற்றவைகளெல்லாம் அவளுக்குக் கிட்டின. அவளுக்குத் தீராத நோய் வந்து விட்டது."

ஸலீம், ஜஹாங்கீர் பாதுஷாவாகிவிட்டான். பாதுஷாவானதும் அனார்க்கலியை மறந்து விடாமல் தேடி வந்தான். ஆனால், அனார்க்கலியை அவன் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவள் சித்தமும் கலங்கிப் போயிருந்தது. "பேதுற்றவள்போல் விழித்தாள். நீ யார் தம்பி? ஆ, நம் அக்பர்ஷாவின் மகனா? உன்னை, மங்கையர்களை மோசம் செய்கிற வஞ்சகன் என்று எல்லோரும் சொல்லுகிறார்களே! எனக்குத் தோன்றவில்லை. நீ நல்லவன் போலத்தான் தோன்றுகிறது. அனார்க்கலியை நீ பார்த்திருக்கிறாயா? நல்ல பெண் அவள். எங்கேயோ போய்விட்டாள். என்னை ரோஜா மலர்கள் எடுத்துக் கொண்டுவரச் சொன்னாள். நான் எடுத்துப் போகப் போகிறேன். நீயும் வருகிறாயா?'' என்று சொல்லிவிட்டு அனார்க்கலி அப்படியே பிரக்கினை தப்பிப் போய்விட்டாள். "ஒரு விநாடிதான் அவளுக்கு மறுபடி ஞாபகம் வந்தது. அவள் மடியிலே உயிர் துறந்தாள்."

மங்கையர்க்கரசியின் காதலில் வருகிற எல்லாக் கதைகளுமே காதலையும், சோகத்தையும் வடித்தெடுத்த சித்திரங்கள்தான் என்று பொதுவாகச் சொல்லலாம். நிறைவேறிய காதலைச் சொல்லுகிற கமலவிஜயம் என்னும் கதை, மற்ற கதைகளைப்போல அவ்வளவு வெற்றியடையவில்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. கவிதை உள்ளம் படைத்த வ. வே. ஸு. ஐயர், வீரத்துக்கும் காதலுக்கும் தன் எழுத்தில் முக்கிய ஸ்தானம் அளித்து எழுதியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இந்தக் கதைகளுக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல உள்ள ஒரு கதை பற்றி நான் இதுவரை எதுவும் சொல்லவில்லை என்பது வெளிப்படை. 'ஏன் சொல்லவில்லை?' என்று சிலருக்குப் பதட்டமாகவும், கோபமாகவும்கூட இருக்கலாம். குளத்தங்கரை அரசமரம் என்கிற இந்தக் கதை, இந்த முப்பது வருஷங்களில் படித்தவர் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்ட கதை. வ. வே. ஸு. ஐயர் வேறு எந்தக் காரியத்தையும் செய்யாதிருந்தாலும், வேறு எதையுமே எழுதாமலிருந்தாலும், இந்த ஒரு கதையை எழுதிய ஒரு காரணத்தினாலேயே தமிழர்களின் நன்றிக்கும், பாராட்டுக்கும் உரியவர் ஆவார் என்பதில் எனக்குச் சற்றும் சந்தேகம் இல்லை. எனக்குத் தெரிந்து இந்தத் தலைமுறையில் எழுதுகிறேன் என்று பேரெடுக்கிற ஆசிரியர்களில் யாரும் இந்தக் கதையின் அழகுக்கும், அமைதிக்கும் பலியாகாமல் இருந்ததில்லை. இதில் உத்தியும், உணர்ச்சியும் ஒரே அழுத்தத்துடன் விழுந்து நம்மைப் பரவசப்படுத்துகின்றன என்று சொல்லவேண்டும். பாரதியார் சொன்னதுபோல "கண்ணீர்த்துளி வர உள்ளுருக்கும்'' காரியத்தை வ. வே. ஸு. ஐயர் இந்தக் கதையில் பிரமாதமாகவே சாதித்திருக்கிறார்.

இந்தக் கதை, "எங்களூர்க் குளத்தங்கரை அரசமரத்தால் சொல்லப்பட்டது. அது நன்னூல் முதலிய இலக்கணங்கள் படித்ததில்லை... செந்தமிழை எதிர்பார்க்க வேண்டாம்... நம் கதாநாயகர்கள் பேசிய வார்த்தைகளை அது வழுவின்றி நினைத்துக் கொண்டிருந்தது எனக்கே ஆச்சரியத்தைத் தந்தது. கதையைப் படிப்போர் ருக்மிணியை மறவாமல் நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்று பூரணமாய் நம்புகிறேன்'' என்று முகவுரையில் எழுதியிருக்கிறார் ஆசிரியர். ஆனால், ருக்மிணியை அறிந்துவிட்டவர்கள் அவளை மறப்பதென்பது சாத்தியமேயல்ல.

குளத்தங்கரை அரசமரம் கதை சொல்கிறது: "பார்க்கப் போனால் நான் மரந்தான். ஆனால், என் மனஸிலுள்ளதையெல்லாம் சொல்கிறதானால் இன்னைக்கெல்லாம் தீராது. இந்த ஆயுஸுக்குள் கண்ணாலே எத்தனை பார்த்திருக்கிறேன்! காதாலே எத்தனை கேட்டிருக்கிறேன்! உங்கள் பாட்டிகளுக்குப் பாட்டிகள் வந்து விளையாடுவதை இந்தக் கண்ணாலே பார்த்திருக்கிறேன். சிரிக்கிறீர்கள். ஆனால், நான் சொல்லுகிறதிலே எள்ளளவேனும் பொய் இல்லை. நான் பழைய நாளத்து மரம் – பொய் சொல்லக் கத்ததில்லை'', என்று ஆரம்பித்து அந்த அரசமரம், ருக்மிணியின் சண்டைக் கதையைச் சொல்லுகிறது. "...ஏழெட்டு நாளாய் எனக்கு ருக்மிணியின் ஞாபகமாகவே இருக்கிறது. பதினஞ்சு வருஷமாச்சு. ஆனால் எனக்கு நேற்றுப்போல இருக்கிறது. உங்களில் ஒருவருக்கும் ருக்மிணியைத் தெரியாது. பார்த்தால் சுவர்ண விக்கிரகம்போலிருப்பாள். குழந்தை. அவளுடைய சிரிச்ச முகத்தை நினைத்தால் அவளே எதிரில் வந்து நிற்பதுபோல இருக்கிறது எனக்கு. அவள் ஒருத்தியின் அழகை இன்னைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். நல்ல உயரமாக இருப்பாள். அவள் கையும் காலும் தாமரைத் தண்டுகள் மாதிரி நீளமாயிருக்கும். அவள் சரீரமோ மல்லிகைப் புஷ்பம் போல மிருதுவாக இருக்கும். ஆனால் அவள் அழகெல்லாம் கண்ணிலேதான். என்ன விசாலம்! என்ன தெளிவு! என்ன கனிவு! களங்கமற்ற நீல ஆகாசம் ஞாபகத்துக்கு வரும். அவள் கண்களைப் பார்த்ததும் நிலோற்பலம் நிறைஞ்ச; நிர்மலமான நீரோடையைப் பார்ப்பது போல இருக்கும்.'' இது முதல் காட்சி.

கடைசிக் காட்சியையும் பார்ப்போம். "ஊரின் சோபையையும், தாயார் தகப்பனார் ஜீவனையும், என்னுடைய சந்தோஷத்தையும் எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஒரு நிமிஷத்தில் பறந்துபோய்விட்டாளே என் ருக்மிணி. (குளத்தில் விழுந்து இறந்தவளை) கீழே அந்த மல்லிகைக் கொடி ஓரத்திலே விட்டிருந்தார்கள். எத்தனை தடவை அந்த மல்லிகை மொக்குகளைப் பறித்திருக்கிறாள் அவள் பொன்னான கையாலே! குளத்தங்கரை யெல்லாம்,—அவள் குழந்தையாயிருக்கிறபோது—அவள் பாதம் படாத இடம் ஏது, அவள் தொடாத மரமேது, செடியேது! ஐயோ, நினைக்க மனம் குமுறுகிறது. அந்த அழகான கைகள், அந்த அழகிய பாதங்கள் எல்லாம் துவண்டு தோஞ்சு போய்விட்டன. ஆனால் அவள் முகத்தின் களை மாத்திரம் மாறவேயில்லை...அதியாச்சரியமான சாந்தம் வியாபித்திருந்தது."

"பெண்கள் மனசு நோகும்படி ஏதாவது செய்யத் தோணும்போது இனிமேல் இந்தக் கதையை நினைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள். விளையாட்டுக்காகக் கூடப் பெண்ணாய்ப் பிறந்தவர்களின் மனதைக் கசக்கவேண்டாம்'' என்று கதையை முடிக்கிறது குளத்தங்கரை அரசமரம். வேண்டுமென்றே தான் ருக்மிணியின் சோக சரிதத்தை இங்கு சுருக்காமல் விட்டிருக்கிறேன். அது அவரவர்கள் படித்தறிந்து கொள்ளவேண்டியது. இன்றையச் சூழ்நிலையை வைத்து எழுந்த ஒரு உணர்ச்சிமயமான காதல், சோகக் கதை—சிறு காவியம்.

ஆர். எஸ். பதி கம்பெனியாரின்

லேடிடால் ஹேர் ஆயில்

கூந்தலை வளரச்செய்கிறது கண் எரிச்சலை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியை தருகிறது.

எங்கும் கிடைக்கும்

சென்னையில் கிடைக்குமிடம்:—
ஸ்கூல் வியூ ஸ்டோர்ஸ்,
96, தம்புச் செட்டி தெரு, சென்னை-1.
M. S. ஸ்டோர்ஸ்,
1-17H மௌண்ட் ரோடு, சென்னை-2.

எண்ணெயும் திரியும்

கிருஷ்ணா

தந்தி வந்தது.

அது தாங்கி வந்த செய்தியோ...?

சாதாரணமாகத் தந்தியென்றால் நடுங்க வேண்டிய அவசியமில்லை கிருஷ்ணனுக்கு. ஏனென்றால், பிரபல எஸ். எம். டிம்பர் ஒர்க்ஸின் சொந்தக்காரராகிய சுந்தாமூர்த்தியின் புத்திரனும், காரியாலய நிர்வாகியுமான அவனுக்குத்தான் நாளொன்றுக்கு எண்ணிலடங்காத தந்திகளும் 'போன்' கால்களும் வந்து கொண்டேயிருக்குமே!...

இருந்தாலும்...

அன்று அந்தத் தந்தியைக் கையெழுத்திட்டு வாங்கும்பொழுது அவனது கரங்கள் லேசாகப் படபடத்தன. நெஞ்சம் ஏனோ நீர் இறைக்கும் மோட்டார்போலப் படபடவென முழங்கியது. தந்தியிலிருந்த வாசகம் அவன் கண்களை இருளடையச் செய்தது. அடிவயிற்றிலிருந்து கிளம்பிய உணர்ச்சிக் கனல், இதயத்தைச் சுட்டுப் பொசுக்கியது. கைக்குட்டையால் வாயை இறுகப் பொத்திக்கொண்டு, அப்படியே செயலற்றவனாகச் சோபாவின் மேல் உட்கார்ந்துவிட்டான்.

அவனை இந்த நிலைக்கு ஆளாக்கிய தந்தியோ அவனது கையிலிருந்து நழுவி, கீழே அவன் காலடியில் பறந்து விழுந்தது.

கணவனின் கையிலே கொடுப்பதற்கென்று [illegible]ாக ஓ[illegible]ன் க[illegible]க் கொண்டு வந்த வேணி, கணவன் இருந்த நிலையைக் கண்டதும் பதறிவிட்டாள். கையிலிருந்த டம்ளரை டீபாயின்மேல் வைத்துவிட்டு, ஆதரவோடு அவனருகில் வந்து, "என்ன செய்கிறது உங்களுக்கு?" என்று தவிப்புடன் விசாரித்தாள்.

அவனால் அப்பொழுது பேசவா முடிந்தது?...

வேணியின் பார்வை மெதுவாகக் கீழ் நோக்கிச் சென்றது. கீழே கிடந்த தந்தியைப் பாய்ந்து எடுத்துப்படித்தாள்:

"சுந்தாமூர்த்தி திடீரென்று இன்று காலை காலமாகிவிட்டார். அண்ணை வீட்டிற்கே முதலில் தந்தி கொடுத்தால், அம்மா தன் பலஹீன நிலையில் இதைத் தாங்கிக்கொள்வார்களோ என்னமோ என்று பயந்தே, முதலில் உங்களுக்குத் தந்தி கொடுத்திருக்கிறேன். அம்மாவிடம் பக்குவமாகச் சொல்லிச் சமாளிக்கும் பொறுப்பு உங்களுடையது. ஆபீஸிற்கும் மற்றும் உள்ள இடங்களிலும் தெரியப்படுத்தி விட்டேன். சடலத்துடன் வருகிறேன். ஏற்பாடுகள் செய்யவும். இப்படிக்கு,
கேசவன்"

தந்தி தாங்கி வந்த தணலின் சோதிப்பை அவளது நெஞ்சமும் உணர்ந்தது. அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவர்... மாமனார்... காலம் ஆகிவிட்டதா? இரண்டு தினங்களுக்கு முன்பு உதகைக்குப் புறப்படும்பொழுது கூட ஆரோக்கியமாகத்தானே இருந்தார்...

இனிமேல்!... அத்தை...

ஐயோ! அந்த வயதான இதயம் இதைக் கேட்டதும், என்ன பாடுதான் படப் போகிறதோ தெரியவில்லையே! ஈசா! இதென்ன சோதனை?...

அத்தையின் மங்களகரமான முகம் அவளெதிரில் தோன்றி, அந்த வேதனையை அதிகப்படுத்தியது. சந்திர சூரியர்கள்போல இரு காதுகளிலும் ஜோதி வீசும் தோடுகளும், விண்மீனைப் பிடித்து—அதிலும் முக்கியமாய் சுக்கிரனைப் பிடித்து—பொன் உமிசத்தில் இட்டு அணிந்துகொண்டதுபோல மூக்கில் மூத்து மூக்குத்தியும் ஒளிவீச, கழுத்து நிறைந்த ஆபரணங்களுடன் அத்தை அசைந்து அசைந்து நடந்து வருவதைப் பார்த்தாலே போதுமே!.. தீராத கலியெல்லாம் தீர்ந்து விடுமே...

ரவி வர்மா என்றோ தீட்டிவிட்டு மறைந்த திருமகளின் உருவம் இன்னும் அப்படியே இருக்கிறது. அந்த உருவிற்கு வயதானால், எப்படி அழகுடன் கம்பீரமும் கலந்து பிரகாசிக்குமோ, அதைப் போல இருப்பாளே அத்தை...

இனி..இனி...

கண்ணீரினால் மார்புப் புடவை நனைந்து உள்ளுடம்பில் ஈரம் உறைந்தவுடன்தான் உணர்ந்துகொண்டாள், வேணி, வெகுநேரமாகத் தன் கண்கள் கண்ணீரைப் பெருக்கி இருக்கின்றனவென்பதை.

கணவனை மெள்ளத் திரும்பிப் பார்த்தாள். அவன் இன்னும் விம்மிக்கொண்டிருந்தான். புகழ்படைத்த, பெரிய, பிரபல 'பிஸினஸ்மேன்' அவன். மர உலகப் பொருளாதாரத்தையே இந்தக் கையில் வாங்கி, அந்தக் கையில் நேர்மையாக மாற்றுபவன்! அப்பேர்ப்பட்டவனை இப்பொழுது பாசம் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, சிறு குழந்தையைப்போல ஆட்டிவைக்கிறது; அழவும் வைக்கிறது!

"நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் நடக்கவேண்டியதைப் பார்க்கவேண்டாமா? அங்கே போய்..அத்தையிடம்.." என்று வேணி விம்மலினிடையே கூறி முடிப்பதற்குள், "எப்படிச் சொல்லிச் சமாதானப்படுத்துவேன்! ஐயோ, எப்படிச் சொல்வேன், என் அம்மாவிடம்!" என்று கதறிவிட்டான் அவன்.

வேணி தன்னை உறுதிப்படுத்திக்கொண்டாள். டிரைவர் சங்கரனைக் காரை எடுக்கச் சொல்லிவிட்டு, கணவன் முகத்தைத் துடைத்து, அவனை ஒருவாறு சமாதானப்படுத்தி, காரினுள் ஏற்றித் தானும் அமர்ந்துகொண்டாள்.

டிரைவரும் மௌனமாகவே காரைச் செலுத்தினான். உலகமே மௌன சமாதியடைந்துவிட்டது போன்ற வெறுமை உணர்ச்சி அங்கே நிலவியது.

ஃ ஃ ஃ

லக்ஷ்மி நிவாஸம் பங்களாவினுள் கார் வந்து நின்றது.

அதனின்றும் மௌனமே உருவாக இறங்கிய தம்பதி, மெதுவாக அடிமேலடி வைத்து உள்ளே நுழைந்தனர்.

காலை உணவுக்குப் பின் ஆச்வாசமாகச் சோபாவில் அமர்ந்துகொண்டிருந்தாள் லக்ஷ்மியம்மாள். வாயிலே பாக்கு ஊறியது; கைவிரல்கள் வெற்றிலையை மடித்தபடி இருந்தன.

ஏதோ குற்றம் செய்துவிட்டவர்கள் போலத் தலைகுனிந்தபடியே உள்ளே நுழைந்த மகனையும் மருமகளையும் கண்டவுடன்,

"ஏன் கிருஷ்ணா, இரண்டு பேரும் எதையோ பறிகொடுத்துவிட்டவர்கள் போல வாடிவதங்கி வருகிறீர்கள்! என்ன விஷயம்?" என்று பரிவுடன் விசாரித்தாள்.

அம்மாவின் முகத்தை நேருக்கு நேர் பார்த்தால், மன உறுதி கலைந்து கண்ணீர் கொட்டி விடுமோ என்ற ஐயத்தினால் நிலத்தைப் பார்த்துக்கொண்டே, "ஒன்றுமில்லையம்மா! சும்மாத்தான் வந்தேன், சாப்பாடெல்லாம் ஆகிவிட்டது போலிருக்கிறதே!" என்றபடியே, மெள்ளத் தன் தாயின் அருகில் அமர்ந்துகொண்டான்.

பொங்கிவரும் துயரத்தை இந்த சம்பிரதாய வார்த்தைகள் தடுத்து நிறுத்திவிட முடியுமா? உள்ளக் குமுறலை அடக்க வெகுவாகத் தவித்தான் கிருஷ்ணன். வேணியோ, ஜன்னல் வழியாக வெளியே பார்ப்பதும், சுவரிலே தொங்கும் படங்களைப் பார்ப்பதுமாக, அர்த்தமில்லாமல் விழித்துவந்தாள். அத்தையை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் அவளுக்கும் இல்லை...

"என்னமோ சாப்பிட்டேன் அப்பா! இன்று என்னமோ எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. வாய்க்கு எல்லாமே விஷமாகக் கசந்தது. வயிற்றிலேகூட ஏதோ சொல்ல முடியாத சங்கடம்! என்னவென்று எனக்கே தெரியவில்லை. உன் அப்பாவோ, நீங்கள் அண்ணன் தம்பிகளோ, நெடுந்தூரம் அயல்நாடுகளுக்கெல்லாம் சென்றிருந்தபொழுதுகூட எனக்கு இப்படிச் சங்கடம் செய்ததில்லை... இன்று என்னமோ உன் அப்பாவின் நினைவு... 'திடீர் திடீர்' என்று வந்து வயிற்றைக் கலக்குகிறது. என்னமோப்பா, 'எண்ணெய் முதலில் வற்றுமோ, திரி முதலில் தீருமோ?' என்ற நிலையில் இருக்கிறோம்! முதலில் என் மூச்சு போனால் தேவலை..."

தொண்டை கரகரத்தது லக்ஷ்மியம்மாளுக்கு.

வாயினால் பேசித் தெரியவைக்க வேண்டிய அவசியமேயில்லாத ஒரு ஆத்மீக உணர்வின் சக்தி, மனித மனத் தத்துவத்திலே பரவிக் கிடக்கிறது. அதுதான் லக்ஷ்மியம்மாளை இப்படிப் பேசச் செய்ததோ!

அதற்குமேல் கிருஷ்ணனால் பொறுக்க முடியவில்லை.

"திரி முந்திவிட்டதம்மா! அப்பா காரியம் ஆகிவிட்டதம்மா!" என்றவன், குழந்தையைப்போலத் தாயின் பாதங்களில் தலைவைத்து விம்மினான். வேணியும் ஓடிவந்து அத்தையைப் பிடித்துக்கொண்டாள்.

"நிஜமாகவா அப்பா! நீ என்ன சொல்கிறாய்? ஒன்றுமே புரியவில்லையே!" என்று உடலும் உள்ளமும் நடுநடுங்கிய லக்ஷ்மியம்மாளின் கையிலிருந்த வெற்றிலைச் சுருள் தானாகவே கீழே விழுந்தது.

மூவரது கண்ணீரும் ஸ்பரிசமும் கலந்த அதே துயர வேளையில், வாசலிலே வந்து நின்றது அந்தக் கார்.

அதனின்றும் உள்ளே எடுத்து வைக்கப்பட்ட சுந்தரமூர்த்தியின் சடலம், 'நீர்மேல் குமிழி'யென்னும் நிலையிலா உலகவாழ்விற்கு உதாரணமாகக் கீழே கிடத்தப்பட்டிருந்தது.

சுந்தரமூர்த்தி!

முழுப் பெயரைக்கூடச் சொல்லவேண்டாம். 'எஸ். எம்.' என்ற விலாசமே போதும்! எவரும் புரிந்துகொண்டுவிடும்படியான மந்திர எழுத்துக்கள்போல அவை எங்கும் புகழ்க்கொடி நாட்டியிருந்தன!

எஸ். எம். டிம்பர் ஒர்க்ஸின் முதலாளியாகிய அவர், தமது தொழிற்சாலையில் வேலை செய்யும் அனைவருக்கும் வெகு திருப்திகரமாகவும், நேர்த்தியாகவும் எப்படி நிர்வாகத்தை நடத்தினார் என்பதற்கு உபமானம் கூறவேண்டுமென்றால், அதற்கு அவரது நிர்வாகத்தையே தான் உபமானமாகக் கூறவேண்டியிருக்கும்.

கேசவன், கிருஷ்ணன் என்று இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும், அவருக்குப் பின் அவரது பெயர் சொல்லி விளங்க வைக்க இருந்தனர். ஒருவிதமான குறையுமில்லாமலேயே அவரது காலமும் கடந்துவந்தது. அதோடு தன்னை அண்டியவர்களுக்கும் ஒரு குறைவுமில்லாமல் பாதுகாப்பு அளித்து வந்தார். அவரால் முன்னுக்குக் கொண்டுவரப்பட்ட ஏழைகளின் குடும்பம் எத்தனை எத்தனையோ!..

ஆனால் இன்று!... அவர் இல்லை. பூவுலகை வாழவைத்தது போதுமென்று அமருலகையும் வாழ்விக்கச் சென்றுவிட்டாரோ? நல்லவர்களிடம்தானே நமனும் காதல் கொள்கிறான்!

குளித்துவிட்டு, கச்சிதமாக உடுத்த உடையுடனும், நெற்றியில் ஒளிவீசும் ஸ்ரீசூர்ணத்துடனும் அவர் வெளிவந்தால், திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமானே எதிரில் வந்து நிற்பது

போல இருக்கும். இன்று அதே கம்பீரம் பொருந்திய உடல்....!

என்னே உலகம்!..அது சுழலும் வேகத்திலே, அந்தச் சூறாவளிக் காற்றிலே, ஈச தேவனுக்குக் காணிக்கையாக உதிர்ந்த ஜீவன்கள் எத்தனை எத்தனை!

இன்னும்...இதோ ஒன்று தயாராகிவிட்டது!

சற்று நேரத்தில் தணலைத் தழுவப் போகும் அவ்வுடல், பூத்த நறுமலர்களின் குவியலிலே புதையுண்டு கிடந்தது. ஊரே திரண்டு வந்துவிட்டது போன்ற ஜன இரைச்சல். அதையும் மீறி ஒலிக்கும் மந்திர கோஷங்கள்.

ஆயிற்று. எவ்வளவு நேரம்தான் 'வைத்துக்கொண்'டிருக்க முடியும்? இதோ புறப்படப் போகிறது!

எல்லாரும் வந்து கடைசியாகக் கதறினர். ஆனால்..இந்தக் கலவரத்திலே...முக்கியமாய் 'அவளை' மட்டும் காணவில்லை... துன்பத்தினால் உறிஞ்சப்பட்ட அவளது நெஞ்சம், அவளை என்ன செய்ததோ?...

வேணிதான் முதலில் கவனித்தாள். "அத்தை எங்கே?..கொஞ்சம் நேரம் முன்புகூட இங்கேதானே இருந்தார்!"

யாவற்றையும் மறந்த நிலையில் அத்தையைத் தேடினாள் அவள்.

பூஜையறையிலே சுவாமி படத்திலே தலையை வைத்துக்கொண்டு குப்புறப் படுத்திருந்தாள் அத்தை.

"அத்தை, அத்தை! எழுந்திருங்கள்!" என்று அழைத்தபடியே அத்தையின் தோள்களின் மேல் கையை வைத்தவள், மறுகணம், "ஐயோ! இங்கே வாருங்களேன்!" என்று கூச்சலிட்டாள்.

எல்லோரும் ஓடோடி வந்தனர்.

வந்து...?

என்ன செய்ய முடிந்தது...?

மாங்கல்யம் பறிபோகும் முன்பே மணாளனுடன் மறையக் கொடுத்துவைத்தவளை வாயாரப் புகழ்ந்ததோடு, ஈசுவரனையும் போற்றினர்! அதுதான் அவர்களால் செய்ய முடிந்தது!

ஆம்! உயிர்விளக்கிலே, திரி எரிவதற்குத் தகுந்த அளவிலேயே எண்ணெயையும் விட்டுவைத்திருந்த அவன் அருள் திறத்தை எப்படித்தான் வியக்காமலிருக்க முடியும்!

சாரணர் உலகம்

பயனீரிங்

சித்தார்த்தன்

இதற்கு முன் கட்டுரையில் பயனீரிங்கின் அவசியத்தைப்பற்றியும், அதில் முக்கியமான 'லாஷிங்'குகளைப் பற்றியும் படித்திருப்பீர்கள். அதிலேயே 'ஸ்கொயர் லாஷிங்'கைப்பற்றியும் படித்திருப்பீர்கள்.

இப்பொழுது நாம் அறியப்போவது 'டயகனல் லாஷிங்'தான். இதுவும் 'லாஷிங்'தான். ஆதலால் இதைப் போடுவதற்கும் கம்புகள் அல்லது இரும்புத் துண்டுகள் தேவை. சாதாரணமாக சாரணர்களிடம் கம்புகள்தானிருக்கும். அவர்கள் அதைத்தான் இந்த 'லாஷிங்'குகளுக்கு உபயோகிப்பார்கள். ஆதலால் அவர்கள் இங்கு கம்புகளைத்தான் உபயோகிப்பார்கள்.

இந்த 'லாஷிங்' எந்த சமயங்களில் உபயோகப்படும்? எந்த 'லாஷிங்'கையும் சமயத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றபடி உபயோகிப்பதுதான் விவேகம். சாரணர்களுக்கு இது நன்கு தெரியும். அவர்கள் எதையும் சமயத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு உபயோகிப்பார்கள்.

இந்த 'லாஷிங்'கையும் இரு கம்புகளின் மேல்தான் போடுவார்கள் அல்லவா? இதை எப்பொழுது போடுவார்கள். இரு கம்புகள் ஒன்றோடொன்று தொடாமலிருக்கும்பொழுது அவைகளைச் சேர்த்துக் கட்ட இதை உபயோகிப்பார்கள். கம்புகள் எப்பொழுது ஒன்றோடொன்று தொடாமலிருக்கும் என்ற சந்தேகம் வரலாம். நாம் 'ட்ரெஸில்' கட்டுகிறோமென்று வைத்துக்கொள்வோம். அதில் இரு கம்புகள் ஒன்றோடொன்று படாமல் வரும். ட்ரெஸிலைப்பற்றியும், அதைக் கட்டும் முறையைப்பற்றியும் பின்னால் விஸ்தரிக்கப்படும். இங்கு இதைப் புரிந்துகொள்ள மட்டும் அது எவ்வாறிருக்கும் என்று தெரிந்துகொள்வது நலம். படம் 1ஐப் பார்த்தால் 'ட்ரெஸிலின்' உருவம் நன்கு தெரியும்.

படம் 1ஐப் பார்த்தால் ஆறு கம்புகள் உபயோகித்திருப்பது நன்கு தெரியும். அதில் ஏ, பி என்று இரு கம்புகள் இருக்கின்றன. இந்த இரு கம்புகளும் எப்படி அமைந்திருக்கின்றன என்று நன்கு கவனியுங்கள். இதை நன்கு கவனித்தால் அவைகள் சேருமிடத்தில் ஒன்றோடொன்று படாமலிருக்குமென்று அறியலாம். இதைப் போன்ற சமயங்களில் 'டயகனல் லாஷிங்' உபயோகப்படும்.

இந்த 'லாஷிங்'கை சாரணர்கள் எந்த சமயங்களில் உபயோகிப்பார்கள்? இதை நாம் அறிவது மிகவும் நலம். சாரணர்கள் இதை 'ஸிக்னலிங் டவர்' கட்டும் பொழுது உபயோகிப்பார்கள். மேலும் 'பிரிட்ஜ்'கள் கட்டும்பொழுது உபயோகிப்பார்கள். அகப்பட்ட வஸ்துக்களை வைத்து படகுகளைக் கட்டும்பொழுதும் உபயோகிப்பார்கள்.

இந்த 'லாஷிங்' எப்படி போடுவது? இது மிகவும் சுலபமான 'லாஷிங்'. நீங்கள் 'ஸ்கொயர் லாஷிங்' போடும்பொழுது அதை 'க்ளவ் ஹிட்ச்' போட்டு ஆரம்பிக்கிறீர்களல்லவா? இங்கு அது கூடாது. சேர்த்துக் கட்டவேண்டிய இடத்தில் 'டிம்பர் ஹிட்ச்' போட்டு ஆரம்பிக்க வேண்டும். 'டிம்பர் ஹிட்ச்' எப்படிப் போடுவதென்று முடிச்சுகளைப்பற்றி எழுதும்பொழுது கூறியாகிவிட்டது. ஆதலால் அதை இங்கு விவரிப்பதில் பிரயோஜனமில்லை. அதை எப்படிப் போடுவது என்பது உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும்.

இதை ஆரம்பிக்கையில் 'டிம்பர் ஹிட்ச்' போடவேண்டும். எந்த டிம்பர் ஹிட்சையும் இரு கம்புகளையும் சேர்த்துப் போடவேண்டும். இதன் பிறகு மூன்று அல்லது நான்கு தடவை இறுக்க சுற்றவேண்டும். அதாவது படம் 2ஐப் பாருங்கள் நன்கு புரியும்.

இதன் பிறகு இதேபோல் மற்ற பக்கங்களையும் சேர்த்துக் கட்டவேண்டும். படம் 3ஐப் பார்த்தால் நன்கு புரியும்.

படம் 3லிருந்து இவ்வாறு சுற்றும்பொழுது 'லாஷிங்' எவ்வாறு வருமென்று புரிந்துகொண்டிருப்பீர்கள். இதன் 'பிறர்ப்பின்டர்ன்' போட்டு மேலும் இதே போல் சுற்றவேண்டும். கடைசியில் எந்த கம்பின்மேல் சௌகர்யமாக வருகிறதோ அந்த கம்பின் மேல் 'க்ளவ் ஹிட்ச்' போட்டு முடிக்கவேண்டும்.

இதற்கும் 'ஸ்கொயர் லாஷிங்'கிற்குமுள்ள வித்தியாசத்தை நன்கு கவனியுங்கள். 'ஸ்கொயர் லாஷிங்' போது 'க்ளவ் ஹிட்சு'டன் ஆரம்பிக்கிறோம். இதில் 'டிம்பர் ஹிட்ச்'சுடன் ஆரம்பிக்கிறோம். 'ஸ்கொயர் லாஷிங்' போது முடிகிறது. ஒரு கம்பின் மேல் போட்டு ஆரம்பிக்கிறோம். இங்கு இரண்டு கம்பின் மேலும் முடிச்சு வரவேண்டும். மேலும் 'ஸ்கொயர் லாஷிங்'கில் கயிறு பக்கவாட்டில் போகும். இங்கு எதிரிடையாகப் போகும் கடைசியில் 'ஸ்கொயர் லாஷிங்' போய் இதிலும் 'க்ளவ் ஹிட்ச்' போட்டுதான் முடிக்கிறோம்.

இன்னும் இரு 'லாஷிங்'குகள் பாக்கியிருக்கின்றன. அதாவது 'ஷியர் லாஷிங்'கும், 'பிகர் ஆப் எய்ட்' லாஷிங்கும்தான். இவைகளை விஸ்தரிக்க இந்தக் கட்டுரையில் இடமில்லையாதலால் அடுத்த கட்டுரையில் விஸ்தரிக்கப்படும். இவைகளும் சுலபமான 'லாஷிங்'குகள்தான்.



1

2



3



எண்ணமும் எழுத்தும்

— மஹரி

அன்றைய தினப் பத்திரிகையைப் பிரித்தவுடன், அந்தச் செய்திதான் முதலில் தட்டுப்பட்டது. சில சமயங்களில் நமக்குச் சம்பந்தமான செய்தி முதலில் கட்டுப்படும், சில சமயங்களில் அதைப் பாராமலே மற்றவைகளைமட்டும் பார்ப்போம். அன்று முன்னது நடந்துவிட்டது:—

ஒரு பெண்ணைக் கொல்ல முயற்சி.

கணவனே கத்தியால் குத்திவிட்டு போலீஸில் சரண் அடைந்தார்.

வேலூர், மார்ச் 10—

இன்று இவ்வூர் போலீஸ் ஸ்டேஷனில் தேசூரைச் சேர்ந்த அண்ணாமலை என்பவர் கத்தியுடன் சரணடைந்தார். அவர் தன் மனைவி ஒரு பட்டினத்து இளைஞருடன் தனிவழி வந்ததாகச் சந்தேகித்துக் கத்தியால் குத்திக் காயப்படுத்திவிட்டதாக ஒப்புக்கொண்டு, கத்தியையும் கொடுத்தார். குத்துண்ட பெண் ஆஸ்பத்திரியில் சிகித்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறாள். போலீஸார் அண்ணாமலையை ரிமாண்டில் வைத்துவிட்டுப் புலன் விசாரிக்கின்றனர்.—ந—நி.

இந்தச் செய்தி என்னைப் பரபரப்படையச் செய்துவிட்டது. தேசூர்காரருக்கும் திருச்சிவாசிக்கும் ஏதும் சம்பந்தமில்லை என்றாலும், இந்தச் செய்தியில் அடிபட்ட தேசூர், பட்டினத்து இளைஞர், தனிவழி வந்தது ஆகியவற்றைக் கண்டவுடன் எனக்கு பரபரப்பு உண்டாயிற்று. சம்பவத்திற்கு நான் காரணமாகிவிட்டேனே என்ற எண்ணம் என்னை உலுக்கியது.

மீண்டும் செய்தியைப் படித்தேன். அந்தப் பெண்ணின் பெயர் காணப்படவில்லை. ஒருவேளை வள்ளியம்மையாக இருக்குமோ? உயர்ந்த பண்புடைய பெண்! பாவம்! அவள் கதியா இப்படி ஆகிவிட்டது? இன்னும் இருக்கிறாளோ இறந்துவிட்டாளோ? – என்றெல்லாம் எண்ணினேன். என் மனம் நிலைகொள்ளவில்லை. என் வேலைகள் முடிந்ததும், மாலையிலாவது அந்தக் காயமடைந்த பெண்ணைப் பார்த்து வரவேண்டும் என்று எண்ணினேன்.

நான் இந்தச் செய்தியில் என்னைச் சம்பந்தப்படுத்திக்கொண்டதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை.

ஃ ஃ ஃ

மூன்று தினங்களுக்கு முன்னர் என் காரியாலய வேலைக்காகத் தேசூர் போயிருந்தேன். போகும்போதும் பஸ் கிடைக்காமல் மாலை நான்கு மணி சுமாருக்குக் கூட்டு ரோடிலிருந்து நான்கு மைல்கள் நடந்துசென்று, தேசூரில் குறிப்பிட்ட அலுவல்களை முடித்துக் கொண்டேன். மாலை சுமார் ஐந்து மணிக்கு பஸ் ஸ்டாண்டை அடைந்தவுடன் தான், இனி ஆரணிப் பக்கம் பஸ் கிடையாது; மறுநாள் காலையில்தான் பஸ் போகும் என்ற விவரம் அறிந்தேன். மாலை ஏழு மணிக்குத்தான் திண்டிவனத்துக்கு ஒரு பஸ் உண்டு என்றார்கள்.

நான் திண்டிவனத்துக்குப் போய் என்ன செய்வது? எங்கு போனாலும் இரவு தங்க இடமிருக்காதே! தேசூரிலும் தெரிந்தவர்கள் கிடையாது. என்ன செய்வது?—என்று திகைத்துப் போய் ஒரு சில கணங்கள் நின்றேன். பின்னர், வந்த வழியே நடந்து சென்று கூட்டு ரோடை அடைந்தால், வந்தவாசியோ, போளூரோ செல்லும் பஸ் வருமே என்று எண்ணி, நடையைத் தொடர்ந்தேன். முன்னமேயே நான்கு மைல்கள் நடந்து வந்ததால் மீண்டும் நடக்கத் துவங்கியதும் கால்கள் கெஞ்சின. வேறு வழியில்லை என்ற அளவில் புதுபலம் உண்டாகியது. சற்று வேகமாகவே நடந்தேன்.

அரை மைல் தூரம் வந்திருப்பேன். சூரியன் சிவப்பேறிவிட்டான். எங்கும் தனிமை. இருபுறமும் பசிய வயல்களும், அதன் நடுவே நிற்கும் களைத்துப்போன கபிலை ராட்டினமும்தான் தோற்றின.

சற்று தொலைவில் ஒரு ஏரி; சுற்றிலும் பனந்தோப்பு.

அந்த மாலை நேரத்தில் எனக்குக் கொஞ்சம் முன்னே ஒரு இளம் பெண் நடந்து சென்றுகொண்டிருந்தாள். சுமார் இருபது வயது இருக்கும். அதிகச் சிகப்பு இல்லாத ஒரு புது நிறம். மஞ்சள் பூசிய பசுமை ஒரு தனி அழகாக இருந்தது. அந்தக் கிராமச் சூழலிலும் வாயில் புடவை உடுத்து, நாகரிக லோலக்குகள் அணிந்திருந்தாள். கால்களில் கொலுசு போட்டிருப்பது தெரிந்தது. தலையை அள்ளிச் செருகாமல் பின்னல் போட்டுக் கொண்டிருந்தாள். இளம் பெண், அதிலும் இருட்டிவரும் நேரத்தில் தனியாகப் போகிறாளே கிராம தேவதைபோல் என்று ஒரு பச்சாத்தாபம். கேட்டுவிட முடியுமா? பேசாமல் பின்தொடர்ந்து வந்து, கடந்து, முன்னேறினேன்.

அவளைக் கடக்கும்போது என்னை அறியாமல் அவளைப் பார்த்தேன். என்ன களையான முகம்! கிராமத்தில் செயற்கை அலங்காரம் இல்லாமலும் இத்தனை அழகுடன் பெண்கள் இருக்கிறார்களா என்று ஒரு கணம் வியந்தேன். பின்னர். நமக்கு ஏன் வம்பு என்று எண்ணி வேகமாக நடந்தேன்.

"இந்தாய்யா! எங்கே போறீங்க?" அந்தப் பெண்தான் கேட்டாள்.

"ஏம்மா? வேலூர் போகிறேன். பஸ்ஸு தான் கிடையாதுன்னுங்க...." என்றேன்.

"அதனாலேதான் நானும் தனியாப் பொறப்பட்டுகிட்டேன். இன்னி ராவுக்குள்ளர நான் வேலூர் போயாகணும்." அவள் ஏதோ சொல்லத் தயங்குவது போலே இருந்தது,

"கூட்டு ரோடு போனாலாவது வண்டி கிடைக்குமோ என்னவோ" என்றேன்.

"அங்கே போனா கொள்ளை வண்டி. எனக்கு அங்கே போறவரைக்கும்தான் பயம். நீங்க கொஞ்சம் நின்னு போங்க, நானும் கூடவே வந்துடறேன்" என்றாள்.

"தாராளமா வாயேம்மா. நான் என்ன சொமந்துகிட்டா போறேன்?" என்று சொல்லி, நடையைச் சற்று தளர்த்தி அவளுடன் சரியாக நடந்தேன்.

"இந்தப் பக்கத்து ஆம்பிள்ளைங்களை நம்ப முடியாது. நீங்க பட்டினத்தாரு மாதிரித் தோணுது. அதான் தைரியமாக் கேட்டேன். வித்தியாசமா நெனைச்சிக்காதீங்க" என்றாள் அந்தப் பெண்.

நான் பட்டினத்தாரா? திருவொற்றியூரைப் பார்த்ததுகூடக் கிடையாது. துறவு என்வரையில் அத்தனை எளிமையானது அல்ல. நான் நினைத்தாலும் சென்னையிலுள்ள என் மனைவி லக்ஷ்மியும், மகள் காயத்ரியும் என்னைவிட்டு விடுவார்களா? – என்றெண்ணிச் சிரித்தேன்.

தவிரவும் பட்டினத்தார் கையில் பேய்க் கரும்பு இருக்குமே! தாடி இருக்குமே–இப்படியெல்லாம் நான் வேடிக்கையாக எண்ணமிட்டுக்கொண்டே நடந்தேன். இதனிடையில் இரண்டொருவர் எங்கள் எதிரில் சைக்கிளில் அமர்ந்து சென்றனர்.

சற்று நேரம் மௌனமாக நடந்தோம். இரண்டு மைல்கள் கடந்தவுடன், அந்தப் பெண்ணே தன் விருத்தாந்தங்களைச் சொன்னாள்.

அவள் பெயர் வள்ளியம்மை. வேலூருக்குப் பக்கத்திலிருந்த செதுவாலையைச் சேர்ந்தவள். தேசூரில்தான் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள். அவளுடைய கணவன் ஒரு முரடன். மேலும், ஏதோ கெட்ட தொழில் செய்துகொண்டிருந்தான். அது வள்ளிக்குப் பிடிக்கவில்லை.

இதன் காரணமாக சச்சரவு நடந்திருந்தது. அந்தச் சண்டையின் காரணமாக அவள் பிறந்தவீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். அவளுக்குக் கல்யாணம் ஆகி இரண்டு வருடங்கள்தான் ஆகியிருந்தன. . . .

இப்படியே தயங்கித் தயங்கி ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டு வந்தாள். அவளாக இப்படி வலுவில் வந்து தன் கதைகளைச் சொல்லுவது என்னைச் சந்தேகத்தில் ஆழ்த்தியது. எத்தனை சட்டங்கள் போட்டும் இன்னும் மறையாமல் தலைவிரித்தாடும் மிருக வேட்கையின் அஸ்திவாரமோ என்றுகூடச் சந்தேகித்தேன்.

அப்படி எண்ணி அவள் முகத்தை நான் பார்க்கும்போது, அப்படி ஏதும் இல்லை என்ற வெகுளித்தனம் அவள் கண்களில் தென்பட்டது. வெள்ளை உள்ளமுடைய கிராமச் சிறுமி. வெள்ளைச் சிரிப்பு சிரித்துக்கொண்டு அவள் பேசியது, என் சந்தேகத்தைப் போக்கியது. மேலும், நம்மை மீறி என்ன வந்துவிடப்போகிறது என்ற தைரியமும் சேர்ந்தது. அப்படி இருந்தாலும் துணைக்காகக் கூட வருகிறேன் என்று சொல்பவளைத் தனியாக விட்டுவிட்டுப் போவதுதான் ஆண்மைத்தனமா? – என்றெல்லாம் போராடிக்கொண்டே நடந்து கொண்டிருந்தேன்.

"அந்தப் பையை நீங்களே கொண்டாறீங்களே. கொஞ்சம் நான் கொண்டாறேனே" என்று சொல்லி, என் கையிலிருந்த பையையும் வாங்கிக்கொண்டு நடந்தாள். என்னால் அவளுடன் சரியாக நடக்க முடியவில்லை. எதற்கும் டவுன் பஸ்ஸில் ஏறிப்போய்ப் பழக்கப்பட்டவன், நடந்தே பழகிய நாட்டுப்புறத்துப் பெண்ணுடன் நடக்க முடியவில்லை. ஒருவழியாக இருட்டும் நேரத்தில் கூட்டு ரோடை அடைந்தோம். கூட்டு ரோடில் ஒரு மணி நேரம் தவங்கிடந்த பின்னர், ஒரு வழியாகப் பஸ் தெய்வம் பிரஸன்னமாகி, போளூருக்கு வழிவிட்டது.

பஸ்ஸில் இடமின்மை காரணமாகக் கண்டக்டர் தீர்ப்புக் கூறினான். பெண்கள் தாப்பில் வள்ளியை அமர்த்தி, 'இந்தப் பெண்ணொடு சேர்ந்த ஆம்பிள்ளை'யாக என்னையும் பக்கத்தில் உட்கார்த்தி விட்டான். எனக்குக் கூச்சமாக இருந்தாலும், அவள், பட்டினத்துப் பெண் போலவே 'சடக்'கென்று அருகே அமர்ந்துவிட்டாள். போளூர் – வேலூர் பஸ்ஸிலும் இதே கதைதான். நான் மறுத்துச் சொல்ல ஏதும் இல்லை. மறுக்கவே விடவில்லையே! ஒரு வழியாக வேலூர் போய்ச் சேரப் பத்து மணியாகிவிட்டது.

அதற்குப் பின்பும் செதுவாலைக்குப் பஸ் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா? பஸ் ஸ்டாண்டில் இருந்தபடியே 'நான் போகிறேன்' என்று சொல்லி விட்டு, நான் விடுபட நினைத்தேன். முடியவில்லை. என்னையே நிழல்போலத் தொடர்ந்தாள், அந்தப் பெண். எனக்கும் சந்தேகமாகப் போய்விட்டது.



"இந்த ஊரில் உனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்களா?" என்று பேச்சைத் துவக்கினேன்.

"இல்லீங்களே. நம்ப வூட்டுக்கே வந்து ராவுமட்டும் தங்கிவிட்டு, காத்தாலே மோதப் பஸ்ஸிலே போயிடறேன்" என்றாள் நேரிடையாகவே. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. மேலும், அவளுடைய நம்பிக்கையும் புரிந்தது. நான் வேறூரில் வீடு வாசல் உள்ளவன் என்று நம்பித்தான் அப்படிச் சொன்னாள் என்று. நான் உண்மையை விளக்கினேன்.

"நான் மதராஸ்காரனம்மா. இங்கே வந்து ஹோட்டலில் தங்கி இருக்கிறேன். தனியாகத்தான் இருக்கிறேன் . . . அங்கே . . நீ . . !"

"ஓஹோ . . !" அவள் சற்று யோசித்தாள். சில வினாடிகளில், "மனங்காவல் இருந்தா மதில் காவல் தேவையில்லே. வாங்க. எப்படியும் ராவு போயாகணும்" என்று சொல்லி முன்னே நடந்தாள். எனக்கு தர்மசங்கடமாகி விட்டது. உரலில் தலையை விட்டாயிற்று; உலக்கை தலையில் மோத வந்துகொண்டிருக்கிறது என்ற நினைப்பில் எழுந்த தைரியம். 'சரி' என்று அறையை நோக்கி நடந்தேன்.

நான் தங்கி இருந்த அறையை அடைந்து, அறையில் இருந்த கட்டிலில் அவளைப் படுக்கச் சொல்லிவிட்டு, என் படுக்கையை எடுத்துக்கொண்டு வெளி வராந்தாவிற்கு வந்தேன்.

நான் வெளியே வந்த பிறகு கதவைத் தாளிட்டுக் கொள்வாள் என்று எதிர்பார்த்தேன். அவள் படுத்துவிட்டதும் என்னைச் சந்தேகத்தில் ஆழ்த்தியது.

சற்றுப் பொறுத்து, "கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்க" என்று குரல் கொடுத்தேன். பதிலில்லை. தூங்கிவிட்டாள் போலிருக்கிறது. எனக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டுகொண்டிருந்தேன். ஏனெனில், நமது பாதுகாவலில் நிச்சிந்தையாக ஒரு இளம் பெண் இருக்கிறாள் என்பதன் காரணமாக எழும் பிசாசு மனத்தின் பேயாட்டம். மேலும், நமது சாமான்கள் உள்ளே இருக்கின்றன. நாம் அயர்ந்துவிட்டால், அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு அவள் புறப்பட்டு விட்டால்?... இதுபோன்ற எண்ணங்கள் எழுந்து வதைத்தன.

படுக்கையை விட்டு எழுந்து சென்று விளக்கைப் போட்டேன். அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். கெட்ட நினைவுகள் உள்ள பெண்ணாயிருந்தால், இப்படித் தூங்கமாட்டாள் என்று ஒரு சமாதானம். விளக்கு வெளிச்சத்தில் அவளை நன்றாகப் பார்த்தேன். எவ்வளவு அழகான பெண். 'அப்பா' என்று வியந்தேன். அவள் அழகைத் தாங்க முடியாத மனதில் எத்தனையோ நெட்டுயிர்ப்பு, கனவு, புல்லரிப்பு.

இந்த அயோமயத்தினிடையில் அவள் புரண்டு படுத்தாள். உடனே என் வெளி மனம் விழித்துக்கொண்டுவிட்டது. 'இந்த நிலையில் அவள் விழித்துக்கொண்டால், நம்மைப்பற்றி எத்தனை கேவலமாக நினைப்பாள்? நம்பிக்கைக்குத் துரோகமா?' என்று பிய்த்து வாங்கியது. 'சட்' டென்று விளக்கை அணைத்துவிட்டு நகர்ந்தேன். நாற்காலி தடுக்கியது. சப்தம் கேட்டது.

"யாரு . . ." என்றாள் அவள்.

"நான்தான் . . ." என்று குரல் கொடுத்தேன். குரலில் நடுக்கம் இருந்தது என்னையே வெட்கமுறச் செய்தது.

"குடிக்கத் தண்ணி வேணுங்களா?" என்று சொல்லி, எனக்கு ஒரு காரணத்தையும் கொடுத்தாள்.

"ஹூம்" என்று சொல்லிவிட்டு, வெளியில் சென்று, கதவை வெளியில் தாளிட்டுப் பூட்டிவிட்டுப் படுத்துக்கொண்டேன். நெஞ்சு படபடத்தது. அப்படி எத்தனை நேரம் இருந்தேனோ தெரியாது. தூங்கி விட்டேன். விடியற்காலையில் வள்ளி உள்ளேயிருந்து எழுப்பினாள். எழுந்து கதவைத் திறந்தேன்.

என்னைக் கண்டதும் அவள் சிரித்தாள். எனக்கு வெட்கமாக இருந்தது. "நடந்து வந்த களைப்பு. கதவைத் தாழ்ப்பாள் போடாமெப் படுத்துட்டேன். அதுக்காக ஜெயில்லே போட்டுட்டீங்களே" என்று சொல்லி, மீண்டும் சிரித்தாள் அவள்.

"போயிட்டு வரேனுங்க. உங்களாலே தான் நான் நெனச்சபடி வந்து சேர்ந்தேன். எல்லா ஆம்பிள்ளையும் ஒங்களைப் போலவே இருந்துட்டா, ஊருலே பொம்பிளைங்களுக்குக் கவலையே இல்லே" என்று எனக்கு 'சர்டிபிகேட்' வேறு கொடுத்தாள். 'அது எனக்குச் செல்லுமா?' என்றது மனம்.

ஃ ஃ ஃ

அந்தச் சம்பவம் காரணமாக அவள் தன் கணவனால் குத்தப்பட்டாள் என்பது என்னால் எதிர்பார்க்கப்படாதது அல்ல. ஆனாலும், இத்தனை சீக்கிரம் இப்படியாக ஆகும் என்று நான் எண்ணவில்லை. தெய்வமே! அந்தப் பெண்ணாக இருக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டேன்.

மாலையில் என் அலுவல்கள் முடிந்தவுடன் நேரே ஆஸ்பத்திரிக்குப் போனேன். குத்துக் காயங்களுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட பெண்ணின் படுக்கை எண்ணை விசாரித்துக் கொண்டு அம்புபோலப் பாய்ந்தேன். 'பாவம்! நாம் ஒரு கருவியாக இருந்து கொண்டு இந்த விபத்துக்கு ஒரு பெண்ணை ஆளாக்கிவிட்டோமே' என்ற பச்சாத்தாப எண்ணம். 'அன்று நாம் கூட வராதிருந்தால் . . . அந்தப் பெண்ணின் பயணம் தடைப்பட்டிருக்குமோ . . என்னமோ .' இப்படிப் பல கோடி நினைவுகள்.

படுக்கைக்கு அருகில் சென்றேன். அடேடே! வள்ளியேதான்! நான் நினைத்தது சரியாகிவிட்டது. அன்று இரவில் படுக்கையில் அயர்ந்திருந்த அதே கிராம மோகினிதான். ஆனாலும், இன்று இன்னம் சற்று வெளிறிப் போய் திருப்தியடைந்த முகத்துடன் காணப்பட்டாள். என்னைக் கண்டதும், "வந்தீங்களா? உக்காருங்க. உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது" என்று சாதாரணமாகக் கேட்டாள்.

"ஆமாம்மா! பேப்பரிலே பார்த்தேன். எல்லாம் போட்டிருந்தது. என்கூட வந்ததினால், உனக்கு இந்த ஆபத்து வந்தது என்று கவலைப்பட்டேன்" என்றேன்.

"உங்ககூட என்ன? அன்னிக்கி நீங்க வராட்டி, யாராச்சும் வேறே ஒருத்தர். இந்தக் குத்துக்குக் காரணம், அது அல்ல" என்றாள்.



"அது அல்லவா? பின் எது? யார் குத்தி விட்டார்கள்?" என்றேன்.

"ஏம் புருசன்தான். அன்னிக்கி எங்க வீட்டைவிட்டு நான் எதுக்காக வந்தேனோ, அதே காரணத்துக்குத்தான் இது கெடெச்சுது. நல்ல வேளை, நெஞ்சுக்குக் குறி வச்சவரு, நான் குனிஞ்சுகிட்டதும் தோளிலே கீறிக்கிட்டுப் போயிடுச்சு. அவரு செஞ்சதுக்கு எந்த வழியிலாவது தண்டனை கெடச்சுடும்" என்றாள்.

"அவன் என்ன செய்தான்? தன் மனைவி தவறி நடந்ததைக் கேட்டால், எந்தப் புருஷனுக்கும் கோபம் வரத்தானே செய்யும்?" என்றேன்.

"என்னங்க நீங்ககூட இப்படிச் சொல்றீங்க? யாரு தவறி நடந்துவிட்டது...இந்தாக் கேளுங்க! என்னைப் பத்தி ஒங்களுக்குத் தெரியும். நான் நெனெச்சிருந்தா எண்ணிக்கோ தவறுதலா நடந்துக்கிட்டிருக்கலாம். எனக்கு மனசு காவலய்யா! கட்டின கணவனைக் கல்லுப்போல நம்பிவேன். அந்தப் பாவி தகாத முறையிலே காசே குறியாக் கள்ளு வித்தா, சாராயம் காய்ச்சினா, எனக்குப் பொறுக்கல்லே. எத்தனையோ வாட்டி சொல்லிப் பாத்தேன். கேக்கல்லே. சண்டையும், அடியும் உதையும்தான் மிச்சம். உள்ளூர்ப் போலீஸ்கிட்டே சொன்னேன். அவுங்களையெல்லாம் சரிக் கட்டிட்டாரு. அதுக்காக அன்னிக்கி வேலூர் பெரிய போலீஸ்லேயே சொல்லிப்பிடத்தான் ஓடியாந்தேன். அன்னிக்கி பத்துப் பானை தயாராச்சு. காய்ச்சப் போறப்போ தடுத்துப் பாத்தேன். கேக்காமே அடிச்சு, ஒதைச்சுப்பிட்டுப் போனாரு. அதனாலே நான் நேரா ஓடியாந்தேன். எப்பிடியாச்சும் எண்ணியதை நடத்திப்பிடணும்னு ஒரே போக்கா வந்தேன். அப்பத்தான் தொணைக்கி நீங்க வந்தீங்க.

"மக்கா நாள் காலையிலே உங்களை விட்டுப் புறப்பட்டு நேரே போலீஸ் ஸ்டேஷனிலே போயி சொன்னதும், போலீஸ்காரங்க என்னையும் இட்டுக்கிட்டுப் போயி சோதனை போட்டுப் பானையைப் புடிச்சூட்டாங்க. ஆனா ஆளு மட்டும் எப்படியோ ஓடிப் போயிடிச்சு.

"திருப்பியும் நான் ஏம் பொறந்த வூட்டுக்குப் பொறப்பட்டு, வந்துகிட்டிருக்கறப்போ, வழியிலே கண்டு கத்தியாலே குத்திப்பிட்டாரு. ஒடனே புடிச்சுக் கேக்கறப்போதான், யாரோடேயோ நான் ஓடிப்போயிட்டேன்; அந்தக் கோவத்துலே குத்தினேன்னாரு. அத்தை வுட்டுட்டு சாராயம் காய்ச்சினேன்; இவ காட்டிக் குடுத்தாட்டான்னு சொல்லுவாரா என்ன?" என்று சொல்லி முடித்தாள் வள்ளி.

அந்தப் பெண்ணின் நேர்மையும், தைரியமும் எனக்கு ஆச்சரியமளித்தன. மிக நல்ல பண்புகள் உடைய ஒரு வீரப் பெண் என்று மனதில் போற்றினேன். . .

வழக்கம்போல முடித்த கதையை என் தாயாரிடம் படித்துக் காண்பித்துக் கொண்டிருந்தேன். கதையை முடித்து விட்டு நிமிர்கையில், எதிரில் என் மனைவி ரௌத்ராகாரமாக நின்றுகொண்டிருந்தாள். அவள் கோபம் எனக்குப் புரியவில்லை.

"ஏன்! வானம் மின்னுது. மழையா, இடியா?" என்றேன் தமாஷாக.

"நான் ஏன் அழுறேன். ஊருக்குக் 'காம்ப்' போறேன், போறேன்னு சொல்லிட்டுப் போயி, கண்ட பெண்களோடெச் சுத்தறதுதான் லட்சணமோ? அப்படிச் சுத்தினா மழை மட்டுமா? புயலும், இடியும் சேர்ந்துதான் வரும்" என்று படபடத்தாள் லட்சுமி.

எழுத்தாளனின் மனைவியாக இருக்க லாயக்கில்லாத ஒரு பெண் எனக்கு வந்து வாய்த்திருக்கிறாளே என்று வருந்திக்கொண்டு, "கதைக்காக—அப்படிக் கற்பனை செய்து எழுதினால். . ." என்று மழுப்பினேன்.

"நீங்கள் கற்பனை செய்வீர்களே. கற்—பனை. . . இதுவரையில் எத்தனை கதைகள் கற்பனையில் எழுதினீர்கள்? எதையாவது உண்மையைப் பிடித்து அப்படியேதானே எழுதுகிறீர்கள்? அது மாதிரி. . ."

"இந்தா லட்சுமி. நீ சொன்னது உண்மைதான். அந்தக் கதைகள் எல்லாம் எழுதிவிட்டுச் சம்பந்தப்பட்டவர்களுடன் சண்டை வந்தது. இப்போது உன்னுடனேயே சண்டையா? சரி. இப்போது இந்தக் கதையின் கர்ப்பத்தைக் கேள்... நான் வேலூரில் தனியறையில் இருந்தது உண்மை. தேசூர் போய் வந்தது உண்மை. தேசூரில் பஸ் கிடைக்காமல் நடந்து வந்தது உண்மை. அப்படி வரும்போது தனி வழிக்குப் பேச்சுத் துணைக்கு யாராவது வந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணினேன். கூட வருவது ஒரு ஆணாக இருப்பதைவிட, இதுபோன்ற அலுப்படைந்த நேரங்களில் ஒரு பெண் வருவது சுறுசுறுப்பைத் தரலாம் என்று எண்ணியது உண்மை. வந்தது கற்பனை.

"அப்படிப் பெண்ணை உருவகம் செய்த போது, எதிரில் உன் உருவம்தான் சட்டென்று வந்தது. உன் புடவை, நிறம், முதலியவைகளைத்தானே வர்ணித்திருக்கிறேன். படித்துப் பாரேன். அப்படி என்னுடன் ஒரு பெண் வந்தால் பார்ப்பவர்கள் என்ன எண்ணுவார்கள் என்று ஒரு எண்ணம். இத்தனை எண்ணங்களுடன் கூட்டு ரோடை அடைந்து, ஒரு தினப் பத்திரிகை வாங்கினேன். அதில்தான் இந்தக் கத்திக்குத்துச் செய்தி வெளியாகியிருந்தது.

"அதிலிருந்து வளர்ந்த எண்ணம்தான் என்னுடன் ஒரு பெண் வந்ததாகவும், தன் கதையைச் சொன்னதாகவும், அதைக் காரணம் காட்டிக் கணவன் குத்திவிட்டதாகவும் எழுதத் தூண்டியது. பஸ்ஸில் ஏறியதும், அந்தப் பஸ்ஸில் சாராயக் கேஸ் சம்பந்தப்பட்ட கைதிகளை அழைத்துக்கொண்டு இரண்டு போலீஸ்காரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அந்தக் காட்சி, தன்னையும் இதே கதையில் புகுத்தச் செய்தது. எப்படிப் பொருத்துவது என்ற சமயத்தில் கற்பனை வேலை செய்தது. கதையில் காதலோ அல்லது கவர்ச்சியோ இல்லாமலிருந்தால் அச்சேறாது. ஆகவே, வேலூர் அறையில் தனி வாசம் என்று எழுதினேன். . ."

"யாரிடம் இந்த நொண்டிச் சமாதானமெல்லாம்? நீங்கள் எவளுடனாவது ஊர் சுற்றுங்கள், எனக்கு என்ன? இப்படிப் பட்ட தேனீ மனிதரிடம் என்னைக் கொண்டு வந்து தள்ளிவிட்டார்களே" என்று சொல்லி மழையை வரவழைத்து விட்டாள்.

"சரி சரி! உனக்கு எதற்காக இத்தனை வருத்தம்? இந்தக் கதையைக் கிழித்து விடுகிறேன்" என்று சொல்லிப் பாதி கிழித்துவிட்டேன்.

"ஐயோ! வேண்டாம். எனக்காகக் கதையைக் கிழிக்க வேண்டாம். கதை எழுதத்தான் உங்களுக்கு நேரம் கிடைப்பதே குதிரைக் கொம்பு. எழுதிய கதையையும் கிழித்துவிட்டால். . . . . அடுத்த மாதம் வீட்டைக் காலி செய்ய வேண்டியதுதான்."

வீட்டின் பொருளாதாரம் கோபப் போதையைக் கலைத்துவிடவும், லட்சுமி, லட்சுமியாக மாறிவிட்டாள். பக்கங்கள் பாதி கிழிந்திருந்ததை வாங்கிக் கொண்டு போய், சோற்றுப்பசை போட்டு ஒட்டிக்கொண்டு வந்தாள்.

குனிந்தபடியே மேல் கண்ணால் அவள் முகத்தைப் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சோற்றுப்பசை ஒட்டிய கதையின் பக்கங்களைப் போலவே, கிழிந்திருந்த எங்கள் உள்ளம் அந்தப் பார்வையால் ஒட்டிக்கொண்டது.

★

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் **ஈரல் குலைக்கட்டி** வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயாகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்.

19, தெற்குமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

மனிதகுலம் வளர்ந்த விதம்...

சக்திதாசன் சுப்பிரமணியன்

அம்பு முதல் அணுகுண்டு வரை

71. என்ன கண்டோம்?

நீண்ட தூரம் வந்துவிட்டோம். இப்போது சிறிது திரும்பிப் பார்ப்போம். இதுவரை என்ன கண்டோம்?

இந்த பூமியைப் பனி மூடியிருந்தது. பிறகு விலகியது. இப்படி நான்கு முறை நிகழ்ந்தது. முதல் பனி, சுமார் ஐந்து லட்சம் வருஷங்கள் முன்பு விலகியது. இரண்டாவது பனி, சுமார் நான்கு லட்சம் ஆண்டுகள் முன்பு விலகியது. மூன்றாவது பனி, சுமார் இரண்டு லட்சம் ஆண்டுகள் முன்பு விலகியது. நான்காவது பனி சுமார் முப்பத்தி ஐயாயிரம் ஆண்டுகள் முன்பு விலகத் தொடங்கியது; பல ஆயிரம் ஆண்டுகள் வரை விலகிக்கொண்டேயிருந்தது. சுமார் பத்தாயிரம் ஆண்டுகள் முன்பு முற்றும் விலகியது. பூமி இன்றைய நிலையடைந்தது.

இவ்விதமாகப் பனி மூடுவதும் விலகுவதுமாயிருந்தபோது என்ன நிகழ்ந்தது? பிராணிகளில் பல மாண்டன; பனி தாங்கமுடியாமல் உயிர்விட்டன. ஆனால் சில பிராணிகள் மாத்திரம் எப்படியோ உயிர் தப்பின.

உயிர் தப்பிய பிராணிகளிலே சில, பின்னங்கால்களால் நடந்தன; நிமிர்ந்து நின்றன. முன் கால் இரண்டையும் கைமாதிரி உபயோகித்தன. இவற்றிற்கு 'புரோ கான்ஸல்' என்று பெயரிட்டிருக்கிறார்கள் அறிஞர்கள். 'பிரை மேட்ஸ்' என்றும் சிலர் சொல்கின்றனர்.

இந்தப் பிராணிகளிலிருந்து இரண்டு வம்சங்கள் தோன்றின. ஒன்று குரங்கினம்; மற்றொன்று மனித குலம்.

நாட்டுப்புறங்களிலே நம்மவர்கள் சொல்வார்கள். ஓமம்—சக்களத்தி ஓமம் என்பார்கள். சக்களத்தி ஓமம், பார்வைக்கு ஓமம் போலவேயிருக்கும். ஆனால் ஓமத்தின் காரமும் மணமும் இரா.

இதே மாதிரி மனித குலமும் குரங்கினமும் தோன்றின. தோன்றிய காலத்திலே மனிதன் குரங்கு போலவேயிருந்தான். ஆனால் வால் மாத்திரமில்லை. குரங்கு முகம், மனித உடல். உடம்பு முழுதும் அடர்த்தியான உரோமம். இத்தகைய தோற்றமளித்தான் மனிதகுலத்தின் மூதாதை.

மேலெழுந்த விதமாகப் பார்த்தால் நாம் ஒப்புக்கொள்ளவே மாட்டோம். மனித குலத்தின் மூதாதை என்று சொல்லப்படும் அந்த மிருகத்தை நமது முன்னவனாக ஏற்றுக்கொள்ளவே மாட்டோம். ஆனால் அறிஞர் உலகம் ஆராய்ந்திருக்கிறது. ஆராய்ந்து முடிவு கண்டிருக்கிறது. முடிவு என்ன? இத்தகைய மிருகமே மனித குலத்தின் மூதாதை என்பது தான்.

தொடக்கத்திலே இந்த மனிதன் என்ன செய்தான்? உணவு தேடித்திரிந்தான். மண்ணைத் தோண்டுவான்; கிழங்குகளை அகழ்ந்து எடுப்பான்; தின்பான். இப்படி அவன் அந்தக் காடுகளிலே திரிந்தான்.

அவனுடன் இன்னும் பல மிருகங்களும் தோன்றின. புலி, காட்டெருது, யானை இவற்றின் மூதாதைகள். இவற்றின் மத்தியிலே வசித்தான் மனித குலத்தின் மூதாதை.

மிருகங்கள் ஒன்றுடன் ஒன்று போரிட்டன; கிழித்தன; கொன்றன; தின்றன. இவற்றின் மத்தியிலே மனிதன் வாழ்வது எப்படி? நிமிஷத்துக்கு நிமிஷம் ஆபத்து தான், உயிருக்கு ஆபத்து. எருதுகள் துரத்தின; யானைகள் விரட்டின; புலிகள் பாய்ந்தன; கொன்றன; தின்றன. மாய்ந்தனர் சிலர்.

மனிதக்கூட்டம் ஒன்று திரண்டது. கொம்புகளை எடுத்தது. மிருகங்களை விரட்டியது. வெற்றிகண்டது. இதுவே மனித குலத்தின் முதல் ஆயுதமாயிற்று. அதுதான் கொம்பு.

இப்போது மனிதக் கூட்டம் பயமின்றித் திரியலாயிற்று. கொம்புடன் திரிந்தது. அந்தக் கொம்பின் உதவியால் கிழங்குகளைத் தோண்டித் தின்றது. மிருகங்களை விரட்டியடித்தது.

இவ்விதம் உணவு தேடித் திரிந்து கொண்டிருந்தபோது ஆற்றின் கரையிலே கூரிய கல் ஒன்றைக் கண்டான், மனிதன். அதன் உதவியால் பிராணிகளைக் குத்தினான்; கொன்று கிழித்தான்; தின்றான். கல் அவனது இரண்டாவது கருவியாயிற்று.

நீண்ட நாள் வரையில் ஆற்றின் ஓரமாகக் கற்களைத் தேடித்திரியத் தொடங்கினான். உணவு தேடுவதும், கற்களைத் தேடுவதுமே அவனுக்கு நாள் முழுதும் சரியாயிருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக மனிதன் என்ன செய்தான்? கல்லினால் கூரிய ஆயுதம் செய்யத் தொடங்கினான். அந்த ஆயுதங்களினாலே பிராணிகளைக் கொன்று தின்றான்.

சில காலம் சென்றது. இதுவும் சங்கடமாயிற்று. பிராணிகள் அவன் கையில் சிக்காமல் ஓடின. நீளமான கொம்புகளிலே கல் கருவிகளைக் கட்டினான்.

பிராணிகளைக் குத்திக் கிழித்தான். இப்படிச் சில காலம் சென்றது.

மீண்டும் பனி வந்தது. அவனால் குளிர் தாங்க முடியவில்லை. அங்குமிங்கும் ஓடினான். காட்டிலே ஓரிடத்திலே தீப்பற்றி எரிந்தது. அங்கே சென்றான். குளிர் காய்ந்தான். அது சுகமாயிருந்தது. அந்த மரக் குச்சிகளை எடுத்து வந்தான். தேய்த்தான். நெருப்பு மூட்டத் தெரிந்துகொண்டான். இப்படிச் சில காலம் சென்றது.

மறுபடியும் உணவு கிடைப்பது அருமையாயிற்று. பிராணிகள் அருகின. அவற்றைத் துரத்திச் செல்வதும் கொல்வதும் கஷ்டமாயிற்று. புதியதோர் கருவி தேவை. மனிதன் வில்லை வளைத்தான். அதன் உதவியால் எட்டி நின்றபடியே பிராணிகளை அடித்தான். கொன்றான். இப்போது பிராணிகள் நிறையக் கிடைத்தன. அவற்றை வைப்பதற்கும் இருப்பதற்கும் இடம் தேவை.

மனிதன் மலைப்பக்கம் சென்றான். குகைகளில் வசித்தான்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றன. தொடக்கத்திலே காணப்பட்டது போல இல்லை மனிதன். இப்போது அவன் பல கருவிகளை உபயோகிக்கத் தொடங்கினான். கல் கருவி, கொம்பு, ஈட்டி, வில் முதலிய கருவிகள். குளிர் காயத் தீ.

பனிக்காலம் சென்றது. மீண்டும் உணவுப் பஞ்சம். மனிதன் குகையை விட்டு வெளியேறினான். குழந்தைகள், மனைவி முதலியோருடன் வனம் புகுந்தான். வனத்திலே ஏராளமான பிராணிகள் கிடைத்தன. அவற்றை வேட்டையாடினான். வேட்டையாடிய மிருகங்களின் மாமிசத்தை நெருப்பிலே வாட்டினான், தின்றான்.

இப்போது அவனுக்கு இன்னும் பலம் ஏற்பட்டது. நாய் அவனது வேட்டைத் தோழனாயிற்று. ஆடு, மாடு, பன்றி முதலியவற்றை வளர்க்கத் தொடங்கினான்.

குகையை விட்டு வெளியேறிய கூட்டத்தினர் எல்லோரும் வனம் புகவில்லை. சிலரே வனம் புகுந்தனர். மற்றும் சிலர் ஆற்றின் கரைப் பக்கம் சென்றனர். ஆற்றிலே மீன் ஏராளமாயிருந்தது. மீன் பிடிக்கத் தொடங்கினான் மனிதன். மீனைத் தின்றான். கிழங்குகளைத் தின்றான். பழங்களைத் தின்றான். உயிர் வாழ்ந்தான்.

ஆற்றின் கரையிலே குடிசை அமைத்தான். அதிலே வாழ்ந்தான்.

ஆற்றின் கரையிலே வாழ்க்கை அமைதியாயில்லை. வெள்ளம் வரும். மனிதனையும் அவன் குடிசைகளையும் அடித்துக்கொண்டு போகும். அவன் தவிப்பான். துடிப்பான்.

முடிவில் வெள்ளத்தை வென்றான். அநுபவம் அவனுக்குக் கற்பித்தது. ஆற்றின் கரையிலே மரங்களை வெட்டி உயரமாக அடுக்கினான். மண்ணைக் கொட்டினான். உயர்த்தினான். அதன் மீது குடிசை கட்டினான். மரத்தினாலே சிறு படகு செய்து ஆற்று நீரிலே செல்லவும் அறிந்தான் மனிதன். இப்படிப் பல ஆண்டுகள் சென்றன.

அவன் மனைவி என்ன செய்தாள்? பழங்களைக்கொண்டு வந்தாள். தானியங்களைக் கொண்டு வந்தாள்.

பழங்களைத் தின்றார்கள். வெளியே எறிந்தார்கள். அந்தக் கொட்டைகள் முளைத்தன. மரமாயின. பூத்துக் காய்த்துப் பழுத்தன. அவற்றைப் பார்த்தான் மனிதன். மேலும் மேலும் பழச் செடிகளையும் மரங்களையும் பயிர் செய்யத் தொடங்கினான். இதே மாதிரி தானியங்களையும் பயிர் செய்யத் தொடங்கினான். நாளடைவில் பயிர்த் தொழில் பெருகிற்று. பெரும் அளவில் வளர்ந்தது. மனிதக் கூட்டமும் பெருகிற்று. ஆற்றோரங்களில் கூட்டம் கூட்டமாக வசிக்கத் தொடங்கினார்கள். கூட்டங்கள் பெருகின. கிராமங்கள் தோன்றின. போக்கு வரவு ஏற்பட்டது. வியாபாரம், கொள்ளை எல்லாம் அதிகரித்தன.

புதிய வாழ்வுக்குத் தக்கபடி மனிதன் புதிய கருவிகளைச் செய்தான். ஒருவருக்கொருவர் உள்ளக் கருத்துகளைத் தெரிவிக்கத் தொடங்கினர். பேச்சும் எழுத்தும் ஏற்பட்டன.

பயிர்த் தொழில் பெருகிற்று. சமுதாயம் ஏற்பட்டது. பருவ காலங்களை அறிந்தான் மனிதன். இப்படியாக மனித சமுதாயம் வளர்ந்தது.

ஓராண்டல்ல. நூறாண்டுகள் அல்ல. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் முன்னேறியிருக்கிறான். அநுபவத்தின் மூலம் உணர்ந்து அறிந்து வளர்ந்திருக்கிறான்.

ஆகவே இன்று மனிதன் நாகரிகம் பெற்றிருப்பது திடீரென்று ஏற்பட்டதல்ல. யூகத்தில் அறிந்தது அல்ல.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போராடிப் போராடி அவன் அறிந்ததாகும்; அடைந்ததாகும்.

72. ஐந்நூறு ஆண்டுகளில்

சென்ற ஐந்நூறு ஆண்டுகளில் மனித குலம் வெகு தூரம் முன்னேறிவிட்டது. அதற்குக் காரணம் விஞ்ஞான வளர்ச்சியே.

இரும்பைக் கண்டு பிடித்தான் மனிதன்; வெடி மருந்தைக் கண்டு பிடித்தான். இரும்பும் வெடி மருந்தும் என்ன செய்தன?

பீரங்கிக்கும் துப்பாக்கிக்கும் இடம் அளித்தன. ஈட்டியும் வில்லும் பிடித்த மனிதன் இப்போது துப்பாக்கி ஏந்தத் தொடங்கினான்; பீரங்கியை உபயோகிக்கத் தொடங்கினான்.

நிலக்கரியைக் கண்டுபிடித்தான் மனிதன்; நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தான். இவை மேலும் முன்னேறச் செய்தன.

அச்சு இயந்திரமும், மின்சாரமும், ஆகாய விமானமும் கண்டு பிடித்தான் மனிதன். மேலும் முன்னேறினான். உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள மனிதக் கூட்டம் நெருங்கியது.

உலகம் முழுதும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

இப்போது அணு சக்தியைக் கண்டு பிடித்துவிட்டான் மனிதன். அணு குண்டு செய்துவிட்டான். உலகத்தையே ஆட்டி வைக்கிறான்.

73. மனித குலத்தின் எதிர்காலம்.

மனித சமுதாயத்தின் எதிர்காலம் எப்படி? மனித குலம் முன்னேறுமா? அல்லது அழியுமா? அணு குண்டு மனிதனை நிர்மூலமாக்குமா? இதுதான் இன்றைய கேள்வி.

ஆதிமுதல் மனித குலம் வளர்ந்த விதத்தை நோக்கினால் என்ன சொல்லத் தோன்றுகிறது? மனித குலம் அழியாது என்றே சொல்லத் தோன்றுகிறது.

நிமிர்ந்து நடக்கத் தொடங்கிய அந்த நாளிலே மனித குலத்துக்குச் சோதனை ஏற்படவில்லையா? ஏற்பட்டது. காட்டிலே இருந்த பெரிய விலங்குகள் மனிதனை அழிக்க முற்பட்டன. மனிதன் அழிந்தானா? இல்லை. அந்த மிருகங்களை அடக்கி வெற்றி கண்டான்.

பின்னே பனி அவனை வாட்டியது. கொன்றுவிடும்போல் பயமுறுத்தியது. பல பிராணிகள் இறந்தன. குளிர் அவற்றைக் கொன்றது. ஆனால் மனித குலம் அழிந்ததா? இல்லை. தீயைக் கண்டு பிடித்தான் மனிதன்; குளிரை வென்றான். மனித குலம் வாழ்ந்தது; வளர்ந்தது; முன்னேறியது.

ஆற்றின் கரையிலே வாழ்ந்த மனிதனை வெள்ளம் வாட்டியது. அழித்துவிடும்போல் அச்சுறுத்தியது. மனித குலமே பூண்டோடு நாசமாகுமோ என்று பயந்தான் மனிதன். மனித குலம் நாசமாயிற்றா? இல்லை. வெள்ளத்தை வென்றது. முன்னேறியது.

இப்படியாக மனித குல சரித்திரத்திலே பல சம்பவங்கள். மனித குலத்தையே நிர்மூலமாக்குமோ என்று பயப்படத்தக்க நிகழ்ச்சிகள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் இன்று நாம் காண்கிறோம். எனவே அந்த நிகழ்ச்சிகள் எவ்வளவு பயங்கரமானவை என்றுணர முடியாதிருக்கலாம். ஆனால் அன்றைய தினம் வாழ்ந்த மனிதனுக்கு அவை பயங்கரப் பிரச்னைகளே.

எனினும் மனித குலம் அழியவில்லை. அழிக்க வந்ததை ஆக்க வேலைக்குப் பயன்படுத்திக்கொண்டான் மனிதன்.

இதுதான் கடந்த காலத்தின் உண்மை. எனவே மனித குலத்தின் எதிர்காலம் பற்றி அஞ்சவேண்டியதேயில்லை.

அணு சக்தியை வெற்றிகொள்வான் மனிதன். அழியமாட்டான். முன்னேறுவான்.

(முற்றும்)

அவன் செய்தது சரியா?

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

வழக்கத்தைவிட ஒரு மணி நேரம் தாமதமாகவே வீடு திரும்பிய தேவநாதனின் முகம் களையிழந்து சோர்வடைந்திருந்தது. வரும்போதே அட்டகாசமாக வீட்டிற்குள் நுழையும் தேவநாதன், அன்று அடக்க ஒடுக்கமாக வந்து ஒரு பூனைபோல் சாதுவாக உட்கார்ந்தது சத்யாவுக்கு மிகவும் ஆச்சர்யமாயிருந்தது. அகன்ற விழிகளில் ஆச்சர்யம் ததும்ப அவனையே பார்த்தபடி நின்றாள்...

"ஏன் நிக்கறே? ஏதாவது இருந்தால் கொண்டுவாயேன்..." என்றான் சிறிது அலுப்புடன். சற்றைக்கெல்லாம் ஒரு தம்ளரில் காபியுடன் வந்தாள். வேண்டாவெறுப்பாக அதை வாங்கிக் குடித்துவிட்டு 'ம்!..' என்று ஒரு ஆசுவாசப் பெருமூச்சு விட்டான் தேவநாதன்.

"என்ன ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள்?" என்று கேட்டபடி பக்கத்தில் தரையில் உட்கார்ந்தாள் சத்யா. தேவநாதன் பதில் ஒன்றும் சொல்லாமலிருக்கவே, "என்ன, யோசனை பலமாயிருக்கு?" என்றாள் மீண்டும்.

"ஒன்றுமில்லையே!... எந்த ஊருக்குப் போகலாமென்று யோசித்துக்கொண்டிருந்தேன்..."

"ஊருக்கா? எதுக்கு?..."

"கொஞ்ச நாளைக்கு அப்படி ஜாலியா!..."

"கொஞ்ச நாளைக்கு என்றால்?"

"இரண்டு மாதம்!"

இதைக் கேட்டதுமே சத்யாவின் அடிவயிற்றில் பகீர் என்றது அதோடு, தேவநாதன் அப்பொழுது பார்த்த பார்வையும், புரிந்த புன்னகையும் அவள் கலக்கத்தை இன்னும் அதிகப்படுத்தின. வேதாளம் திரும்பவும் முருங்கை மரம் ஏறிவிட்டதா?...ஒரு விநாடி நேரத்தில் அவள் சிந்தனை எங்கெல்லாமோ போய்விட்டது. ஒன்றும் சொல்லத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தாள்.

"என்ன சொல்றே?" என்று அவள் மௌனத்தைக் கலைத்தான் தேவநாதன்.

"ம்..!"

"இவ்வளவு நேரமும் தூங்கிண்டா இருந்தே?"

"கேட்டுண்டுதான் இருந்தேன். இரண்டு மாதம் லீவா?..." கிணற்றிலிருந்து பேசுவதுபோலிருந்தது அவள் குரல்.

"இரண்டு மாதமென்ன? இனி எப்பொழுதும்..."

"அப்படியென்றால்?"

"வேலை க்ளோஸ்!.."

சத்யா நினைத்தது சரியாயிற்று. ஒரு நிமிஷம் சிலையாகச் சமைந்திருந்தாள். பிறகு "உங்களை வேலையை விட்டுத் தள்ளக் காரணம்?" என்றாள்.

"வேலையை விட்டு என்னை யாரும் தள்ளவில்லை; நான்தான் அதை உதறி விட்டேன்!"

"ஏனோ?" என்ற சொல் அவளையும் மீறி வந்துவிட்டது. பிறகுதான் 'ஏண்டா கேட்டோம்' என்று நினைத்துக் கொண்டாள்.

"எல்லாம் காரணமாகத்தான்!" என்றான் மிகவும் அலட்சியமாகத் தேவநாதன். பேச்சை அத்துடன் விட்டுவிடலாமாவென்றுதான் முதலில் நினைத்தாள். ஆனால், பாழும் மனசு கேட்டால் தானே? "நான் தெரிந்துகொள்ளக் கூடாதா?" என்று கேட்டு வைத்தாள்.

"தெரிந்துகொண்டு என்ன செய்யப் போறே சத்யா?... நாளைக்கு அவர்களாகத் தள்ளுவதற்கு முன்பு கௌரவமாக நானே விலகிக்கொண்டேன்!" என்று கூறிவிட்டு, ஒரு விநாடி மௌனமாக இருந்தான் தேவநாதன். பிறகு பல்லைக் கடித்தவாறு, "என் பெயருக்கு அடியில் ஒரு சிவப்புக் கோடு போட்டான் அந்த மட மானேஜர்!" என்றான் கோபம் தொனிக்க.

"சிவப்புக் கோடா?.. அப்படியென்றால்?"

"ரெட் லைன்!"

"யார் அவர்?.."

"ம்...உங்க மாமனார்!— அப்படியென்றால், சிவப்புக் கோடு என்றர்த்தம்!... அதாவது நான் வேலை செய்யும் கம்பெனியில், தப்பு—வேலை செய்த கம்பெனியில் ஒரு யோக்கியதாம்சப் புத்தகம் உண்டு. ஆபீஸில் வேலை செய்யும் ஒவ்வொருவருடைய பெயரும் அதில் இருக்கும். அவர்களுடைய நடவடிக்கைக்குத் தகுந்தவாறு அவரவர்களுடைய பெயருக்கு எதிரில் பலவிதமான குறிகள் போட்டு வைப்பார்கள். ஒருவனுடைய பெயருக்கடியில் சிவப்புக்கோடு போட்டால், 'இவன் அபாய மனிதன்' என்றர்த்தம். பின்னால் எந்த ஒரு சிறு காரணத்தைக் கொண்டும் வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள். அந்தக் கோடு தாங்கும் பாக்கியம் இன்று என் பெயருக்குக் கிடைத்தது! புரிந்ததா? இன்னும் விளக்கிச் சொல்லணுமா?" என்று சத்யாவைப் பரிகாசம் செய்யும் வகையில், ஏளனமாகச் சொல்வதுபோல் சொன்னான் தேவநாதன். உண்மையில் வேலையிழந்த துக்கம்தான் அவனை அப்படிப் பேசச் செய்தது. பேசிய தோரணையிலும் அந்தச் சாயல் தென்பட்டது. சத்யாவும் அதை நன்றாகப் புரிந்துகொண்டாள். கேட்கலாமா வேண்டாமாவென்று சிறிது யோசித்துவிட்டுத் துணிந்து, "நீங்கள் என்ன

தவறு செய்தீர்கள்?" என்று முணுமுணுத்தாள்.

"அதுதானே எனக்கும் புரியவில்லை!" என்று நிஷ்டூரமாகக் கூறிவிட்டு, சிறிது பேசாமலிருந்தான். பிறகு அன்று நடந்ததை சவிஸ்தாரமாக சத்யாவுக்கு விளக்கிச் சொன்னான்.

தேவநாதன் வேலை பார்த்து வந்த கம்பெனியில் மற்ற ஊழியர்களுக்கெல்லாம் அவன் தலைவன்போல. தேவநாதன், ஒரு தினுசான பேர்வழி. வேலையில் என்னவோ அசகாய சூரன்தான். ஆனால், யாரையும் லட்சியம் செய்யாத ஒரு சுபாவம். மேலதிகாரியென்று ஒரு அளிப்பட்ட மரியாதை கொடுக்கமாட்டான். அந்த ஒரு காரணத்தினாலேயே கடந்த பத்து வருஷங்களில் ஆறு உத்தியோகம் பார்த்துவிட்டான்; இது ஏழாவது!

அன்று, வேலை செய்பவர்களின் குறைகளைத் தெரிவித்துச் சில சலுகைகளைக் கோரும் ஒரு காகிதத்துடன் மானேஜரின் அறைக்குள் நுழைந்தான். மானேஜர் சொல்லுவதற்கு முன்பே, அங்கிருந்த நாற்காலியொன்றில் கால்மேல் கால் போட்டவண்ணம் உட்கார்ந்தான். அவன் வந்ததையோ, உட்கார்ந்ததையோ சிறிதும் கவனியாமல் தன் காரியத்திலேயே கவனமாயிருந்தார் மானேஜர். தேவநாதன் பேசத் தொடங்கினான். ஏதேதோ பேசிக்கொண்டே இருந்தான். அப்பவும் அவனை நிமிர்ந்து பார்க்காமல் 'ம்..' கொட்டிக்கொண்டிருந்தார். தேவநாதனால் மேற்கொண்டு பொறுக்க முடியவில்லை. "என்ன, நான் சொல்வது ஏதாவது காதில் விழுகிறதா?" என்றான் அதிகார தோரணையில். சற்றே நிமிர்ந்து அவனைப் பார்த்தார் மானேஜர். "நான் வந்து கால் மணியாகிறது; இன்னொரு தரம் எல்லாவற்றையும் சொல்ல என்னால் முடியாது. இந்தக் கோரிக்கை மனுவைப் பார்த்தே தெரிந்துகொள்ளுங்கள்!.." என்று சிறிது ரோசத்துடன் கூறியபடி எழுந்தான். அவன் எழுந்திருக்கையில், யோக்கியதாம்சப் புத்தகத்தைக் கையில் எடுத்தார் மானேஜர். எனவே, சிறிது நின்று அதைக் கவனித்தான். அவன் பெயருக்கு அடியில் சிவப்பு மையினால் ஒரு நீண்ட கோடு இழுத்தார். அதைப் பார்த்ததும் தேவநாதனுக்கு ஆத்திரம் அளவு கடந்துவிட்டது.

"அதற்கு என்ன அர்த்தம்?" என்றான்.

"எதற்கு?" என்றார் மிகவும் சாவதானமாக.

"அந்தச் சிவப்புக் கோட்டிற்கு!"

"அபாய மனிதன் என்றர்த்தம்!.."

"அப்படியென்றால்?"

"எந்த ஒரு சிறு காரணத்தைக் கொண்டும் வேலையிலிருந்து நீக்கிவிட சிபாரிசுக் குறி!"

"நான் செய்த குற்றம்?.. குறைகளை எடுத்துச் சொன்னது தவறா?" —தேவநாதனின் குரலில் உஷ்ணம் ஏறிற்று.

"குறைகளைச் சொன்னதில் தவறில்லை; அதைச் சொன்ன விதம்தான் தவறு! 'மரியாதை' என்று ஒன்றிருக்கிறதே தெரியுமா?"

"மனிதனுக்குத் தலை வணங்கும் மரியாதை, காக்காய் பிடிப்பவனுக்குத்தான் தேவை; நான் உண்மையான உழைப்பாளி!"

"சரிதான்!"

"என்ன சரிதான்?"

"நீங்கள் போய் உங்கள் வேலையைக் கவனிக்கலாம்!"

"அந்த உத்தேசமில்லை! வேலையிலிருந்து நீங்களாகத் தள்ளும்வரையில் வைத்துக்கொள்ள மாட்டேன்; நானே ராஜினமா கொடுத்து விடுகிறேன்."

"சந்தோஷம்!"

தேவநாதனுக்கு அப்பொழுது ஒரு வெறியே வந்துவிட்டது. ஒரு காகிதத்தை எடுத்து நாலுவரி எழுதிக் கொடுத்து விட்டு, விர்ரென்று கிளம்பி விட்டான்.

விஷயத்தைக் கேட்ட சத்யாவுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. முதலில் பேசவே பிடிக்கவில்லை. எழுந்து உள்ளே போக நினைத்தாள். "என்ன, ஒன்றும் சொல்லாமல் போறே?" என்றான்.

"என்ன சொல்லணும்?"

"நான் செய்தது சரிதானே?"

இதற்கு அவள் என்ன பதில் சொல்வாள்! இன்னொரு பெண்ணாயிருந்தால் வேலையைத் தொலைத்துக்கொண்டு வந்ததற்கு ஆயிரம் கேள்விகள் போட்டு ஆளைத் துளைத்திருப்பாள். சத்யா, வாயைத் திறக்கவில்லை. மன வேதனையைத் துளியும் காட்டிக்கொள்ளாமல் "உங்களுக்குச் சரியென்று பட்டால் சரிதான்!" என்றாள்.

இதெல்லாம் நடந்து இப்பொழுது பத்து வருஷங்கள் ஆகிவிட்டன! அப்ப! இத்தனை குறுகிய காலத்தில்தான் எத்தனை மாறுதல்!

தேவநாதன் முன்போல சாதாரண குமாஸ்தா இல்லை; ஒரு பெரிய ஸ்தாபனத்தின் முதலாளி! அவன் கீழே பல பேர் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர்.

முன்பு ஏழாவது வேலையை விட்டதும் பிறகு எட்டாவதைத் தேடி அலையவில்லை. தேடியிருந்தாலும் எட்டியிருக்குமோ என்னவோ! மேலும்மேலும் அடிமை வாழ்வு வாழ அவன் மனம் சம்மதிக்கவில்லை. இருந்த நில புலன்களையெல்லாம் விற்று, மூவாயிரம் நாலாயிரம் ரூபாய் சேகரித்தான். அதை வைத்துக்கொண்டு ஒரு சிறிய மருந்துக் கடை வைத்தான். ஏற்கெனவேயே தேவநாதனுக்கு மருந்துக் கடையொன்றில் பணியாற்றிய பழக்கமுண்டு. கடை வைத்த வேளையும் நன்றாயிருந்தது. சிறிய கடை பெரிய கடையாயிற்று; பிறகு ஒரு குட்டியும் போட்டது. ஒரு வியாபாரம் இரண்டு வியாபாரமாயிற்று. மருந்துக் கடையோடு மற்ற வியாபாரங்களும் சேர்ந்து கொண்டன. இப்பொழுது அவன் ஒரு பெரிய முதலாளி!

காலையில் பத்து மணிக்கெல்லாம் காரியாலயத்திற்கு வந்து விடுவான். மாலை ஐந்து மணிக்கு மற்றவர்கள் போகும் வரையில் அவனும் இருந்து வேலைகளை நேரடியாகக் கண்காணித்து வந்தான். வேலைக்காரர்களுக்குச் சம்பளம், போனஸ் முதலியவைகளைத் தாராளமாகக் கொடுத்து வந்தான். எல்லோருமே மிகவும் திருப்தியுடன் வேலை பார்த்து வந்தனர். ஆனால் இன்று?..

இன்று மத்தியானம் நடந்ததைத் தான் அவனால் சகிக்க முடியவில்லை. ஒரு பக்கம் வேதனை; ஒரு பக்கம் ஆத்திரம்! தான் செய்தது சரிதானா?

அவன் மூளை குழம்பி விடும்போலிருந்தது. பலவிதமாக எண்ணமிட்டபடி வீட்டை அடைந்தான். "என்ன ஒரு மாதிரியாயிருக்கிறீர்கள்?" என்றாள் சத்யா பரிவுடன்.

"ஒன்றுமில்லை.." என்று மழுப்பப் பார்த்தான். ஆனால், சத்யாவா விடுபவள்? குடைந்து குடைந்து கேட்கத் தொடங்கினாள். தேவநாதனுக்கும் அவளிடம் சொல்லி, 'தான் நடந்து கொண்டது சரிதானா?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. சொன்னான்.

"ஒன்றுமில்லை சத்யா; இன்று ஆபீசில் ஒரு சிறு விஷயம் நடந்தது. அதைப்பற்றித்தான்.. பாஸ்கரன் என்று ஒரு குமாஸ்தா. நல்ல உழைப்பாளி. அவனிடம் நான் எவ்வளவோ மதிப்பு வைத்திருந்தேன். இன்று மத்தியானம் அவன் என் அறைக்குள் நுழைந்தான். எதிரில் இருந்த நாற்காலியில் கால் மேல் கால் போட்ட வண்ணம் உட்கார்ந்துகொண்டு ஒரு காகிதத்தை நீட்டினான். எதையும் லட்சியம் செய்யாமல் அதை வாங்கிப் பார்த்தேன். சில சலுகைகள் தருமாறு எல்லா வேலைக்காரர்களுமாகக் கேட்டிருந்தார்கள். ஒவ்வொன்றாக நான் படித்துக் கொண்டிருக்கையில், அவன் ஏதேதோ பேசிக்கொண்டேயிருந்தான். அவன் சொன்ன விஷயங்கள் நியாயமாகவே இருந்தன. ஆனால்."

"ஆனால்?"

"சொன்ன விதம்தான்."

"ம்.. அப்புறம்?"

"சற்றைக்கெல்லாம் அவன் எழுந்து போய்விட்டான். என் கை என்னையுமறியாமல் வேலைக்காரர்களின் யோக்கிய தாம்சப் புத்தகத்தை எடுத்தது..எடுத்து.."

"அவன் பெயருக்கடியில் சிவப்புக் கோடு கிழித்தீர்களாக்கும்?"

"ஆமாம் சத்யா! அப்படித்தான் செய்தேன். நான் செய்தது சரிதானா?"—

சத்யா சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். பிறகு, "உங்களுக்கு சரியென்று பட்டால் சரிதான்!" என்றாள்.

"இல்லை, இல்லை; நீ பொய் சொல்லுகிறாய். எனக்காகச் சொல்லுகிறாய்.. ஆனால், நான் செய்தது சரிதான் சத்யா, நான் செய்தது சரிதான்! என்ன செய்வது? சில பதவிகளுக்குச் சில சட்ட திட்டங்களை அனுசரிக்க வேண்டியிருக்கிறது.." என்று ஏதோ வெறி பிடித்தவன்போலக் கத்தினான். சத்யா ஒன்றுமே பேசவில்லை. ஆனால், தேவநாதன் உள்ளத்தில் மட்டும் "நான் செய்தது சரிதானா?" என்ற கேள்வி திரும்பத்திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது. அதற்கு யாரால் பதில் சொல்ல முடியும்?

திரைக்குப் பின்

ஆர்வி

25

எல்லோருக்கும் கிளியனூரில் தனித் தனி கூடாரமாக அமைத்து, தங்கியிருப்பதற்கான ஏற்பாடு செய்திருந்தார்கள். காயம் பட்டவர்கள் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்கள். மற்றவர்கள் தட்டியும் தடுப்பும் கட்டிக்கொண்டு அங்கேயே தங்கியிருந்தார்கள். சாப்பாட்டுக்குக் கஞ்சித் தொட்டி தொடங்கியிருந்தார்கள்.

புயலுக்குத்தான் எத்தனை ஹாஸ்ய உணர்ச்சி! மனிதர்களுடைய கற்பனைக்கும் மீறிய விஷமமெல்லாம் செய்து ஒரு பெரிய திருவிளையாடலையே அது நடத்தியிருந்தது! அந்தச் சுற்று வட்டாரத்தில் கிளியனூர் முகாம் மட்டும் தப்பியது என்ன விந்தையோ, மாயமோ, தெரியாது. ஒருவருக்கும் அடங்காத முரட்டுப் பையனின் சேஷ்டையைப் போல, மொட்டைத் தலையையும் முழங்காலையும் முடிபோடுவதுபோல, அது பல விசித்திரமான காரியங்களைப் புரிந்திருந்தது. அந்த வயிற்றெரிச்சலிலும் சிரிப்பு மூட்டும் ஹிம்சைதான் உண்டாயிற்று, அதையெல்லாம் பார்க்கும்போது.

புயலும் மழையும் சேர்ந்துகொண்டு ஆடிய கூத்தின் அதிர்ச்சி லேசில் அடங்கவில்லை. சாலையில் போக்குவரத்து மீள்வதற்கும், தொடர்பு ஏற்படுவதற்கும் ஒரு வாரமாகிவிட்டது. விழுந்து கிடந்த மரங்களை வெட்டி மாளவில்லை. வேண்டிய அளவு மட்டும் கிளைகளைத் துண்டித்து அடி மரங்களை அப்படியே விட்டு வைத்திருந்தார்கள். கோயிலைத் தவிர அநேகமாகப் பொட்டலாகிவிட்ட சோமேசபுரத்தில் மீண்டும் வேலையைத் தொடங்குவதா, வேண்டாமா என்று பலத்த விவாதம் நடைபெற்றது. அங்கே கிடைத்த கலைச் சின்னங்கள், சிற்பங்கள், செப்புப் பட்டயங்கள் யாவும் அவ்வப்போது கிளியனூர் வந்து சேர்ந்துவிட்டதால், நடந்த வேலை வரையில் எதுவும் வீணாகப் போகவில்லை. பொங்கிப் புகுந்த கடலில் முக்கியமான தஸ்தாவேஜுகள் சில போயிருந்தன. ஆனால் அவற்றிற்கும் கிளியனூர் டெப்போவில் நகல்கள் கிடைத்து விட்டன.

மீட்பு வேலைக்கு வந்திருந்தவர்கள் புதிய புதிய குடிசைகளையும் கொட்டகைகளையும் அமைத்துவிட்டார்கள். எங்கெங்கிருந்தெல்லாமோ வாகன் கணக்காக ஆடைகளும், உணவுப் பண்டங்களும், தளவாட சாமான்களும், கீற்று, கயிறு, மூங்கில் உள்படத் தேவைக்கு அதிகமாகவே வந்து குவிந்து விட்டன. கிராம மக்களுக்குக் கால்நடைகளும் விதை தானியங்களும் வாங்குவதற்காகப் பணத்தை இனமாகவும் கடனாகவும் சர்க்கார் கொடுத்து உதவினார்கள். சீர்குலைந்த இடங்களில் எல்லாம் நம்பிக்கையும் தைரியமும் கிளைத்து எழுந்தன. ஜனங்கள் அனுபவித்த கஷ்டங்கள் எல்லாம் அவர்களுடைய மன அழுக்கை மட்டுமே கரைத்துக்கொண்டு போயிருந்தன. குருவிகள் கலைக்கக் கலைக்கச் சளைக்காமல் கூடு கட்டுவதைப்போல அங்கங்கே குப்பல் குப்பலாக, குடி குடித்தனம் என்று வைத்துக்கொண்டார்கள்.

தொடர் கதை

புதைபொருள் இலாகா சம்பந்தப்பட்ட வரையில், பொருள் சேதம் ஆள் சேதம் என்று குறிப்பிடும்படி எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. டாக்டரிடம் இருந்த பையன் அச்சுதனை மட்டும் எங்கும் காணவில்லை. எவ்வளவோ முயன்றும் அவன் உடலையும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் ஒருவனைத் தவிர மற்றவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். இன்னும் சொன்னால் புயலினால் அவர்களுக்கு ஒருவிதத்தில் அனுகூலந்தான் என்றுகூட சொல்லலாம். லட்ச லட்சமாகச் செலவழித்தாலும் வெட்டி அழிக்க முடியாத இடங்கள் எல்லாம் துப்புரவாக அழிந்திருந்தன. அப்பாவி உயிர்களைப் பலி கொண்டு இந்த அனுகூலத்தைச் செய்த புயலை எண்ணி மனம் நொந்து போகத்தான் வேண்டியிருந்தது.

அச்சுதன் இருந்த இடத்தில் இப்போது அரவிந்தனோடு வந்த அந்தப் பெண் தங்கச்சி இருந்து வந்தாள். பார்க்கப்போனால் புயல் செய்த அனுகூலத்தில் அரவிந்தனுக்கும் சிறிது கிடைத்திருந்தது. உயிரைத் திருணமாக மதித்து அவன் பல உயிர்களைப் பாதுகாத்த தீரத்தைப் பலர் பெரிதும் கொண்டாடினார்கள். முக்கியமாக டாக்டரைக் காப்பாற்றிய பெருமையைப் பலர் இன்னமும் பேசினார்கள். எல்லாவற்றையும்விட, செருக்கு கொண்டிருந்த பாமினியை மட்டந்தட்ட அவனுக்கு அந்தப் பெண் சரியான வாய்ப்பாக வந்து சேர்ந்திருந்தாள்.

குற்றவேல் செய்யவும், கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று எண்ணெயாகக் கேட்கவும் அவள் அவனுக்கும் சரி, டாக்டருக்கும் சரி, மிகவும் அவசியமாக இருந்தாள். அச்சுதனைவிடக் கூட அவள் அழகாக அவர்களுடைய தேவையைப் பார்த்து, நிர்வகித்து வந்தாள். "பொண்ணு! சின்னப் பொண்ணு!" என்று ஆயிரம் முறை தூக்கத்தில் எழுப்பி ஏவல் சொன்னாலும் அவள் முகம் சிணுங்காமல், அலுப்புகொள்ளாமல் செய்து வந்தாள்.

அவள் அப்படி ஒன்றும் படுநாட்டுப்புறப் பாங்காக இல்லை. நல்ல ஆடையணிகளைக் கொடுத்து அலங்கரித்துக்கொள்ளச் சொன்னதும் ராஜகுமாரிக்குத் தோழி ஒருத்தி ஏற்பட்டதுபோல், அவளுக்கு வேண்டிய அழகு பூரித்துக் கொண்டு வந்துவிட்டது. மற்றப் பெண்களைவிட அவள் சற்று நாசூக்காகவே இருந்தாள். பட்டுப்போல அடக்கமாகவும் இருந்தாள். குழந்தைகளுக்குத் திடீரென்று கிடைத்த விளையாட்டுப் பொம்மையைப்போல, அரவிந்தனுக்கு அவள்தான் நல்ல பொழுதுபோக்கு. கூடார வாழ்க்கை கொஞ்சம் விசித்திரமாக, வேடிக்கையாக இருந்தது. சண்டை ஓய்ந்த, போர் முனையில் டேரா அடித்த, பட்டாளம்போல, ஒருவித சுதந்தரமான கட்டுப்பாடின்மை நிலவியது — அதா

வது வெறும் சலுகை மட்டும். அதனல் தான் பாமினிக்கு அந்தப் பெண்ணைக் கண்டால் அவ்வளவாக ஆகவில்லை. டாக்டருடைய சிபாரிசினுல் அவர்களோடு தனியே வேருெரு கூடாரத்தில் இருந்த அவள், அந்தப் பெண்ணிடம் விடுவிடு என்று எரிந்து விழுந்து கொண்டிருந்தாள். பாமினியின் பாட்டி பக்கத்து ஊர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டிருந்தாள். அவள் வரும் வரையில் அவளைத் தனியே விட்டுவைக்க டாக்டரால் முடியவில்லை. அவளுடைய சிடுசிடுப்பை அந்தப் பெண் பொருட்படுத்தவும் இல்லை.

ஒரு நாள் அரவிந்தன் அந்தப் பெண்ணைப் பார்த்து, "ஏ பொண்ணு! இங்கே வா!" என்று அழைத்தான்.

அவள் எதிரில் நின்றதும், "இதோ பாரு, இனிமேல் உன் பெயர் என்ன தெரியுமா?" என்று கேட்டான்.

அவள் முத்துப்போன்ற அரிசிப் பற்களைக் கூச்சத்தோடு மறைத்துக்கொண்டு "தெரியாது" என்ருள்.

"உம்; தெரியாது இல்லையா? அதனுலே உனக்கு அருமையான பெயர் ஒன்று வைக்கப் போகிறேன். தெரிந்ததா? அந்தப் பெயரைக் கேட்டதுமே, 'எல்லாரும்' என்ன, 'எல்லாரும்' அப்படியே பொருமைப் பட்டு' வெடித்துப் போகணும்....சரிதானு?"

அவள் சம்மதத்தோடு சரிதான் என்று தலையை அசைத்தாள். குறுநகை புரிந்த விழிகள் படபடவென்று ஆவலோடு இமைத்துக் கொட்டின. அவன் சிறிது நேரம் நன்றி சுரக்கும் அந்தக் கண்களையே கள்ளம் கபடமின்றிப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, "அது என்ன ரொம்ப ஒசத்தியான பெயரோ, பாமினி——காமினி!" என்று கேட்டான்.

அந்தப் பேதைப் பெண்ணுக்கு அவன் மனப்போக்கு ஒன்றும் புரியவில்லை.



குஷாலாக இருந்தவன் திடுதிப்பென்று முகம் சிவக்கப் பேசினால் அவளுக்கு என்ன தெரியும்?

"உன் பேரு தங்கச்சிதானே?"

"ஆமாம்."

"உம். . தங்கச்சி . . அதென்ன 'ச்சி' ஒரு 'ச்சி'! நீ வெறும் தங்கமாகவே இரேன். சுத்தமான, பத்தரை மாற்றுத் தங்கமாக இரு. . பச்சைப் பசும் தங்கமாகவே இரு, பாதகமில்லே!"

"சரி. . ."

"இந்தப் பேர் தேவலேயா? உனக்குப் புடிச்சிருக்கா?"

அவள் சிரித்த முகம் மாறாமல் அவனுக்கு இதமாகத் தலையசைத்தாள்.

"இப்போதைக்கு இது இருக்கட்டும். என்ன? பேரு எப்படியிருந்தாலும் கூப்பிடுவதில்தான் இருக்கு அருமை எல்லாம். அந்த அருமையைப் பார்த்தே, 'எல்லாரும்' என்ன 'எல்லாரும்' உப்பி வெடிச்சுப் போகணும்!" என்றான் அவன் மீண்டும். டாக்டர் இதுமாதிரி சமயங்களில் பாமினியிடம் எப்படிச் செல்லமாகப் பேசுவாரோ அது மாதிரியே தானும் பேசிவிட்டதாக மனசுக்குள் ஒரு பாவனை!

அவள் துள்ளிக் குதித்துக்கொண்டே ஓடிவிட்டாள். வெளியிலே பாமினி அதிகாரக் குரலில், "ஏ, பொண்ணு!" என்று கூப்பிடுவது அவனுக்குக் கேட்டது.

"என்ன?" என்று அவள் போய் நின்றாள்.

"என்னவா? ஒரே குதியலும் கொம்மாளமுமாத்தான் இருக்காப்லெ இருக்கு. ஆயி செத்ததுகூட நெனப்பிலே இல்லே போலிருக்கு! அப்படித்தானே?" என்றாள் பாமினி.

"ஆயிரம் பேரு செத்தாங்க; அதிலே அவளும் ஒருத்தி! நெனச்சுக்கிட்டே இருந்திட்டா மட்டும்?" என்றாள் அவள்.

"ஓஹ்ஹோ! அத்தனைக்கு வந்திட்டியா? எல்லாம் அந்தச் சுருக்கெழுத்துக்காரர் தைரியம் போலிருக்கு!" என்று நையாண்டியாகச் சிரித்தாள் பாமினி.

"அதென்னமோ, ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு!" என்று சொல்லிவிட்டுச் சிட்டாக ஓடினாள் அந்தப் படுசுட்டிப் பெண்.

அரவிந்தனுக்கு இதைக் கேட்டதும் வாயைவிட்டே சிரிக்க வேண்டும் போலிருந்தது. "பெண்ணே, போட்டயே ஒரு போடு! கொடுத்தியே ஒரு சூடு!" என்று உள்ளிருந்தே கத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் அவன் சிரிக்கவுமில்லை; கத்தவுமில்லை. ஏனென்றால் அந்தப் பெண் அந்த வார்த்தைகளை முழு அர்த்தமும் தொனிக்கச் சொல்லியிருப்பாளா என்று சந்தேகம் வந்துவிட்டது.

திரும்பி வரும்போது பாமினி அவளை மீண்டும், "ஏ, பொண்ணு!" என்று இரைந்து அழைத்தாள்.

"இதோ பாரு, பாமு! இனிமே என்னைப் பொண்ணு, கண்ணுன்னு கூப்பிடாதே. ஆமாம். எங்க சின்ன ஐயா வந்து எனக்குத் தங்கம்னு பேரு வச்சிருக்காரு. 'எல்லாரும்' இனி அப்படித்தான் என்னைக் கூப்பிடணும்!" என்றாள் அவள்.

"அது யாருடி அது சின்ன ஐயா, உனக்கு அத்தனை அருமையா எல்லாத்தையும் விட்டுட்டுப் பேரு வச்சிருக்கிறது!" என்றாள் பாமினி.

"ஏன், உனக்கு அருமையா இல்லியோ? இல்லாட்டிப் போகட்டுமே!"

"இந்தா, இந்தா! அருமையா மட்டுமா இருக்கு? அதை அருமைக் குரலில் உங்க சின்ன ஐயாவைப் போலக் கூப்பிடணும் போலவும் இருக்கு. தெரியுமா? போய்ச் சொல்லு, அதே குரலில் கூப்பிடச் சொல்லு!"

"சரி; சொல்லிக்கிறேன், போ!" என்று சொல்லிவிட்டு, தங்கம்

கண்களைக் கசக்கிக் கொள்ளத் தொடங்கி விட்டாள். "என்னை என்ன வேணுச் சொல்லு. ஆனா அநாவசியமா எதுக்கு அவளைப்போய் எருமைன்னு சொல்லணு மாம்?" என்றாள் தழுதழுத்த குரலில்.

"அடேடே, அதான் பொறுக்கல்லியோ, உனக்கு? அருமையாப் பேரு வச்சதோட உனக்கும் அருமையாவே ஆயிட்டாரோ? தொட்டில் போட்டு, பெயர் எழுதி னப்போ என்னையும் கூப்பிட்டிருந்தால் காப்பு அரிசி வாங்கிக்க நானும் வந்திருப் பேனே!" என்றாள் பாமினி, மேலும் குத்த லாக.

தங்கத்துக்குத்தான் இந்தக் குத்த லான வார்த்தைகள் உறுத்தினவே தவிர, கூடாரத்துக்குள் உட்கார்ந்து இவ்வளவையும் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்த அரவிந்தனுக்கு, பாமினி யின் ஆத்திரமும் அசூயையும் நன்றாகப் புரிந்தன. அப்போதுதான் அவனுக்கு, புயலுக்குப்பின் ஏற்பட்டிருந்த அனு கூலத்தின் பெருமையும் புரிந்தது. முள்ளை முள்ளால் எடுக்க வேண்டுமானால், தங்கத்தையும் முள்ளாக்கிக் கொள்ள வேண்டியதுதான் என்று அவன் எண் ணிக்கொண்டான். தங்க முள், முளை முறி யாமல் இருக்கலாம்; ஆனால் எஃகு முளை யைப்போல் இல்லாமல், வளையுமே! என்ன செய்வது?

அவனுடைய பார்வையில் பாமினி இப் பொழுது முன்போலத்தான் தோன்றி னாள். அவளுடைய மிதமிஞ்சிய குறும் புத்தனம் குத்தினால் தைக்கின்ற முள் ளைப்போல, ஜடமாக அடங்கிக் கிடந் தது. அவள் யாரிடமும் முன்போல் வலு விலே போய்ப் பேசுவதில்லை. புயலுக் குப் பிறகு அவள் புதுமாதிரியாகத் தோன்றினாள். பேச்சு ஒடுங்கி விட்டது. உள்ளத்தின் வேதனையை ஊமைக் காயத் தைப் பொறுத்துக் கொள்வதுபோல் சகித்துக் கொண்டிருந்ததாக அவனுக் குப்பட்டது. தங்கம் ஒருத்திதான் அதைத் தெரிந்தும் தெரியாமலும் இட றிக் கொண்டிருந்தாள். தங்கமே அவ ளுக்கு முள்ளாகத்தான் உறுத்திக் கொண்டிருந்தாள். அந்த உறுத்தல் உண்மையாக இருந்து, வேதனையையும் கொடுத்தால்தான் அவனுக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும் போலிருந்தது.

அவளைத் தனியாகக் கண்டால் பாமினி தலையை வெறுப்போடு திருப் பிக்கொண்டு போவாள். அப்பொழுது இன்னும் யாராவதுகூட இருந்தால் அவ ளுடைய பார்வையிலே அவமதிப்பு மேலோங்கி வந்துவிடும். பாம்பும் கீரி யும்போல அவர்கள் சீறிக்கொண்டு நிற் பதை டாக்டர் கவனித்துக்கொண்டு தான் இருந்தார். அந்தப் பகையை விலக்க அவர் சிறிதும் முயலவேயில்லை. அவர்களிலே பாம்பு யார், கீரி யார் என் பதை ஆராய்ச்சி செய்வதுபோல அவர் இருந்து வந்தார்.

ஒரு பக்கம் தங்கத்துக்குச் சலுகை அதிகமாகி வந்தது. மறு பக்கம் அவ ளுக்குக் கடுமை வலுத்து வந்தது. விருப் பும் வெறுப்பும் அவளைச் சுற்றி வளர்ந்து வருவதை அவர் மௌனச் சிரிப்போடு கவனித்துக்கொண்டு வந்தார்.

பாமினி அவரிடம் வந்து, "வர வர அந்தக் குட்டிக்குத் திமிர், ராங்கி எல் லாம் அதிகமாகிவிட்டது; கவனித்தீர் களா?" என்றாள்.

"ஆமாம், ஆமாம்; சின்னப் பெண் தானே! எல்லாம் போகவேண்டும்!" என் றார் அவர்.

அரவிந்தன் தனியாக வந்து, "வர வர அந்தப் பெண்ணுக்குக் கிராமாந்தரத்து அறியாமையெல்லாம் இப்பொழுது அவ் வளவாக இல்லை. ரொம்பக் குறைந்து விட்டது. சூடிகையாக இருக்கிறாள், இல் லையா?" என்றான்.

"ஆமாம், ஆமாம்; சின்னப் பெண் தானே! போகப் போக அதுவும் சரியாகி விடும்!" என்றார் அவர்.

"அவளுடைய அட்டகாசத்தை வர வர சகிக்க முடியவில்லை!" என்றாள் பாமினி.

"அவளுடைய அடக்கமும் பணிவும் வரவர அதிகமாகிறதே தவிர, குறைய வில்லை!" என்றான் அரவிந்தன்.

டாக்டர் மையமாக இரண்டுக்கும் "ஆமாம்" போட்டு வந்தார். அந்தப் பெண்ணிடம் அந்த இரண்டு வகைக் குணங்களுமே இருந்தன போலத்தான் அவருக்குப்பட்டது. இரண்டு பேரும் ஒரே சமயத்தில் வந்து அந்தப் பெண் ணைப் பற்றி என்னவோ பேசப்போவ தில்லை. அதுவரையில் சௌகரியம் தானே? இரண்டு குழந்தைகள் இரண்டு விதமாகத்தான் இருக்கும்; பேசும். இரண் டுக்கும் தலையை ஆட்டுவதில் என்ன கஷ்டம்? தலையை ஆட்டினால், அது எப் படி சம்மதத்தோடு ஆட்டுவதாக ஆகி விடும்?

26

மேலும் இரண்டு வாரங்கள் ஆயின. சோமேசபுரத்தில் வேலைகள் மீண்டும் துவங்கிவிட்டன. முன்பு சாவடியிருந்த இடத்திலேயே டாக்டருக்கு ஒருசின்னப் பங்களாபோல் ஜாகை தயாராகிவிட் டது. சர்க்கார் கொடுத்த பணத்தில் பாமினிக்கும், தெற்கு வீதியில், பழைய இடத்திலேயே ஒரு மண்வீடு தயாராகி விட்டது. பொட்டலாகிவிட்ட சோமேச புரம் புதிய களையுடன் உருவாகி வந்தது.

ஒருபுறம் ரெவின்யூ அதிகாரிகள் நிலங் களை அளந்து, கற்களை ஊன்றி எல்லை வகுத்துக் கொண்டிருந்தார்கள். மறு புறம் பூமியில் புதைந்து கிடந்த விக்கிர கங்களைத் தோண்டிக் கண்டெடுக்கும் வேலையை டாக்டர் துவக்கியிருந்தார். பல உயிர்களைக் காவுகொண்ட மண்ட பத்தில் நுழையவே ஒருவருக்கும் மன மில்லை. ஆயினும் கோயிலின் உள்பிராகா ரங்களிலும் தூண்களிலும் உள்ள சிற்ப வேலைப்பாடுகளை வஸந்தன் தலைமையில் ஒரு பிரிவினர் ஆராய்ந்து வந்தார்கள். அரவிந்தன், வஸந்தனோடு சேர்ந்து வேலை செய்ய நியமிக்கப்பட்டிருந்தான். பலவிதத்திலும் அந்த வேலை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. மனசுக்கு ஆறுதலாயும் இதமாயும் இருந்தது. சொல் லில் அடங்காத சுவாரஸ்யமாகவும் இருந் தது. சிற்பங்களைச் சாக்கிட்டு எத்தனை எத்தனையோ சிருங்கார ரஸமான கதை கள் எழுந்தன. மேலும் புகைப்படம் எடுக்கும் நுணுக்கங்களையெல்லாம் வஸந் தன் அவனுக்கு அக்கறையோடு சொல் லிக் கொடுத்து வந்தான்.

அந்தப் பிரிவில் இளம் மேதைகளான ஸ்தபதிகளும் ஓவியர்களும் வேலை செய்து வந்தார்கள். அநேகமாக எல்லா ரும் ஒத்த வயதினர்களாக இருந்ததால் பொழுது வெகு ரஸமாகவே போய்க் கொண்டிருந்தது. பேச்சு எப்பொழுது பார்த்தாலும் கலையிலிருந்து காவியத் துக்குச் செல்லும்; காவியத்திலிருந்து ரஸங்களுக்குப் பாயும்; ரஸமென்றால் பிர தானமான சிருங்கார ரஸத்தில் பேச்சு— வெகு நேரம் அப்படியே தேங்கித் திளைத்துவிடும்.

கலையின் விஸ்தாரத்தைக் கண்டு அவர் கள் நேரம் போவது தெரியாமல் பிரமிப் பார்கள். கணிகையின் சிற்பத்திலும், காதலியின் சிற்பத்திலும் பல்வேறு உணர்ச்சிக் குழைவுகளைக் கண்டு மனத்

தைப் பறி கொடுப்பார்கள். தாதியின் சிற்பத்திலும், தலைவியின் சிற்பத்திலும் மனை தர்மத்தின் மேன்மைகளையெல்லாம் கண்டு உள்ளம் குழைவார்கள். தித்திக்கும் கதைகளும், விக்கித்துப்போகும் சரித்திர நிகழ்ச்சிகளும் அவர்களை மெய்ம்மறக்கச் செய்தன. கல்லிலே தேங்கிய கலை வடிவங்கள் எல்லாம் பழங் காலத்து வாழ்க்கையை கவின் சொட்ட விவரித்தன. மேற்குப் பிராகாரத்து மூலையில் அரவிந்தன் அழகான சிற்பம் ஒன்றைக் கண்டு வஸந்தனைக் கூப்பிட்டுக் காட்டினான்.

சிற்பத் தூணிலே, யௌவன சுந்தரி ஒருத்தியின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. அந்த ரூபவதியின் மேகலாபரணத்தை ஒரு மந்திக் குரங்கு பற்றி இழுத்துக்கொண்டிருந்தது. சுந்தரியின் உடல் பாரத்தினால் ஒருபுறம் வளைந்திருந்தது. மிகவும் தர்ம சங்கடமான நிலை. சிற்பியின் கைத்திறத்திலே உள்ளத்தின் ஹாஸ்ய உணர்ச்சியும் இழைந்திருப்பது புரிந்தது. ஆயினும் அந்தச் சிற்ப வடிவம் எதைக் குறிக்கிறது என்ற நுணுக்கம் புரியவேயில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொன்னார்கள். எல்லாரும் வேலையை மறந்து அந்தக் கம்பத்தைச் சூழ்ந்து நின்று தம்தம் கற்பனைக்குப் பட்டதையெல்லாம் கூறினார்கள். பின்னால் டாக்டர் பாமினியோடு வந்து நிற்பதை ஒருவரும் கவனிக்கவில்லை. அவர் வந்து எத்தனை நேரம் ஆயிற்று என்றும் அவர்களுக்குத் தெரியாது.

ஒருவன், "ஆங், நான் சொல்கிறேன்!" என்றான்.

"சொல்லு!" என்றான் வஸந்தன்.

"இது ஓர் உருவகச் சிற்பம்!"

"அதுதான் தெரிகிறதே.. புதிதாக நீ என்ன சொல்லப் போகிறாய்?" என்றான் அரவிந்தன்.

"இந்தப் பெண்ணை....இந்தப் பெண்ணை என்று சொல்லிக்கொண்டே வந்தவனுக்கு மேலே கற்பனை ஓடவில்லை.

"இந்தக் குரங்கு பிடித்து இழுக்கிறதாக்கும்.., அதுதானே! போடா போ!" என்று வஸந்தன் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு, "நான் சொல்கிறேன், கேளுங்கள்!" என்றான்.

எல்லாரும் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெல்ல அரவிந்தனுடைய முழங்கையில் யாரோ கிள்ளினாற்போல இருந்தது. அவன் ஒரு தடவை அதைத் துடைத்துவிட்டுப் பேச்சு சுவாரஸ்யத்தில் நின்றிருந்தான். ஆனால் மறுபடியும் கிள்ளு கொஞ்சம் அழுத்தமாக இருக்கவே, அவன் திரும்பிப் பார்த்தான். பக்கத்திலே தங்கம் நின்றிருந்தாள். கூட்டத்தோடு கூட்டமாக, அவள் குள்ளமாக நின்றிருந்ததால் பிறர் கவனிக்கவில்லை. அவள் சட்டென்று வாயைப் பொத்தி, டாக்டர் நிற்பதைக் கண் ஜாடையால் சுட்டிக் காட்டினாள்.

அரவிந்தன் சட்டென்று திரும்பாமல் அதைப் பக்கவாட்டிலே கவனித்து விட்டான். ஆனால் அதற்குள் வஸந்தனுடைய கலை விளக்கம் தொடங்கி விட்டது.

"இது வந்து.., நம்ப அரவிந்தனுடைய மாஜி காதலியில்லே.. அதுதானப்பா, அந்தத் தெற்கு வீதி அஞ்சுகம்.. ." என்னும்போதே, அரவிந்தன் ரகசியமாக அவன் கையை நறுக்கென்று கிள்ளி விட்டு எச்சரித்தான்.

வஸந்தனுக்கு இருந்த உற்சாகத்தில், "டேய், என்ன கிள்ளுகிறாய்? உள்ளதைச் சொன்னால்.." என்று சொல்லிக் கொண்டே, "ஆச்சா, அந்த அழகைக் குலைக்கும் குரங்குதான் நம்ப அர....ஸ் ஆ!" என்று மேலும் தொடர்ந்தவன், கிள்ளுப் பொறுக்காமல் திரும்பிப் பார்த்தான்.

ஐயையோ, இதென்ன டாக்டர் எத்தனை நேரமாக நிற்கிறார்? அவன் அஞ்சுகம் என்று வர்ணித்த அந்தப் பாமினியும் அல்லவா நிற்கிறாள்! வஸந்தன் மூர்ச்சித்துக் கீழே விழாமல் இருந்ததே பெரிய காரியந்தான். டாக்டர் மிகவும் சாதுபோல நின்றார். பாமினியோ அதை விடச் சாதுபோலப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். அந்த இடம் அப்படியே வெடித்து அவனை மட்டும் விழுங்கி விடக் கூடாதா என்று இருந்தது வஸந்தனுக்கு. அது எப்படி நடக்கும்? வேலை செய்யாமல் தடிப் பிரம்மசாரிகளாக் கூடி நின்று பேசுவது ஒரு தப்பு; கலை விளக்கத்துக்கு உதாரணமாக எடுத்துக் கொண்டது அதைவிடப் பெரிய தப்பு. இந்த இரண்டுக்கும் அவன் சமாதானம் என்று எதைச் சொல்லி, தப்பிப்பது? ஏதோ, இத்தனை நாள் இருந்த பழக்கத்தில் அரவிந்தனும் அவனும் வெகு நெருக்கமாகப் பழகிவிட்டார்கள். அந்தப் புதுமையின் வெறியிலே பரஸ்பரம் அவர்கள் தங்கள் தங்கள் அந்தரங்கங்களையெல்லாம் ஆத்மார்த்தமாகப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அதன் விளைவு இது! வாக்கிலே சனி இருப்பதுபோல, இவ்வளவு கையும் மெய்யுமாகவா அவன் அகப்பட்டுக்கொள்ள வேண்டும்!

ஆனால் டாக்டர் அபயம் அளித்து நிலைமையைச் சமாளித்துவிட்டார். "அது யார் அப்பா அஞ்சுகம்? எந்த நாட்டை, எந்தக் காலத்தைச் சேர்ந்தவள்?" என்று விஷயத்தை வாங்கிக் கொள்ளாதவர் போலக் கேட்டார்.

வஸந்தன் விழித்தான். அரவிந்தன் தலையைக் குனிந்துகொண்டு நின்றான். வந்தது தெரியாமல் வந்துவிட்ட தங்கம், திரும்பிப் போவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள் பாமினி.

"உம் உம்... வேலையைக் கவனியுங்கள்.. பாமினி! வா, போகலாம்!" என்று எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டுப் புறப்பட்டுவிட்டார் டாக்டர். ஆனால் வெகு நேரமாகியும் இடிந்துபோன வஸந்தன், சிலைக்குச் சிலையாக நின்று கொண்டேயிருந்தான்.

அதிர்ச்சி நீங்கியதும், "என்ன அரவிந்தா, இப்படி மோசம் செய்துப் புட்டியே! முந்தியே சொல்லப்படாது?" என்று வருத்தப்பட்டுக்கொண்டான் வஸந்தன்.

"சரியாகப் போச்சு, போ! என்ன கிள்ளியும் உனக்கு இருந்த உற்சாகத்தில் உறைத்தால்தானே?"

"பேசாமல் கையைப் பிடித்துக் கரகர வென்று இழுத்துக்கொண்டு போகிறது! கிள்ளினால் எனக்கு என்ன புரிந்து விடும்? அதை விட்டாலும்; என்னவோ எறும்பு கடிப்பதுபோலக் கிள்ளினாளும்!" என்றான்.

அதே சமயத்தில் பாமினி டாக்டரிடம், "நடுவிலே அந்தப் பெண் ஓடிவந்து கெடுத்துப்புட்டுது. இல்லாட்டி இன்னும் சுவாரஸ்யமா இருந்திருக்கும்!" என்றாள்.

"எந்தப் பெண்? தங்கமா?"

"சரிதான்; நீங்கள் கவனிக்கவில்லையா?"

"என்னவோ, எல்லாம் சிறிசுகள்... வேலை என்றால் வேடிக்கையும்தான் இருக்

கும்; விளையாட்டுந்தான் இருக்கும். இதை யெல்லாம் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளப்படாது..போ!" என்றார் டாக்டர்.

பாமினியின் நிலை அதற்குப் பிறகு ஒரு கட்டில் அடங்கவில்லை. சாப்பாடு போடும்போதும், பிளாஸ்கிலே காப்பி கொண்டுபோய் அரவிந்தனுக்குக் கொடுக்கிறபோதும் பாமினி, அந்தத் தங்கத்தை அவளறியாமல் கவனிக்கத் தொடங்கினாள். ஒன்றை ஒன்று பார்க்கும்போது, ஒளி வீசிச் சிரிக்கும் கண்களைக் கண்டபோது, அவள் உள்ளம் குமைந்தது. எங்கிருந்தோ ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. புஸ் புஸ்ஸென்று மூச்சு சீறிக்கொண்டு வெளிப்பட்டது.

மூன்றும் நாள் மாலை தங்கம் காப்பி எடுத்துக்கொண்டு வந்ததைப் பாமினி பார்த்துவிட்டாள். இரண்டு நாளாக அவள் டாக்டரை கூடப் பார்க்கப் போகவேயில்லை. டாக்டர் சொல்லியனுப்பியும் அவள் ஏதோ பொருத்தமாக ஒரு சாக்கைச் சொல்லிவிட்டாள். தெற்குப் பார்த்த மங்களாம்பிகை சந்நிதியின் படிக்கட்டில்தான் அரவிந்தன் தங்கத்தின் வரவுக்காகக் காத்திருந்தான். பாமினி, நவக்கிரகங்களின் இருட்டுப் பிராகாரத்தில் பேச்சு முழுவதும் காதில் விழக்கூடிய தூரத்தில் நின்றுகொண்டாள்.

சிறிது நேரம் அவளுக்கே தன் நிலையைக் கண்டு வெட்கமாகவும் கேவலமாகவும் இருந்தது. உண்மையில் தான் யாரை வெறுக்கிறதாக எண்ணி, நம்பியும் வந்தாளோ, அவனை அவள் உள்ளம் வெறுக்காமல் சதிசெய்துவிட்டது என்று அவளுக்கு அப்போதுதான் பட்டது. அவள் உள்ளமே அவளை வஞ்சித்துவிட்டது! அவனை அடியோடு வெறுப்பதுபோல அது அவளிடத்திலே கபட நாடகம் ஆடி, நடித்து வந்திருக்கிறது. இன்று அந்த உள்ளத்தின் பொருமலே அதை வெளிப்படுத்திவிட்டது. கரைகடந்த காதல் தாபத்தால் அந்தப் பேதை உள்ளம் துடிப்பதை இன்றுதான் அவள் தெளிவாக உணர்ந்து கொண்டாள். இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. நெஞ்சு விம்மி விம்மித் தணிந்தது. கேவலம், வயதறியாச் சின்னஞ் சிறு பெண்ணிடம் விளையாடிப் பொழுது போக்கும் அரவிந்தனுடைய கலகலவென்ற சிரிப்பொலி, அவள் காதருகே, கர்ப்பக்கிருகத்தின் கதவைத் திறப்பது போல, கதவுகளில் தொங்கிய மணிகள் 'கிணுகிணு, சிணுசிணு' என்று ஒலிப்பதுபோல ஓசையிட்டது.

அவள் தாங்கமுடியாமல் தன் இரு காதுகளையும் மூடிப்பொத்திக்கொண்டாள். அவனுடைய பேச்சும் போக்கும் கண்களை என்னவோ வேதனை செய்தன. அதை இருளோடு இருளாகப் புதையும்படி இறுக மூடிக்கொண்டாள். அப்படியே, அந்த நிலையிலேயே, அவள் சில நிமிஷ நேரம் அசைவற்று நின்றாள்.

கண்ணைத் திறந்தபோது அவள் உடல் அவள் வசத்தில் இல்லை, இருளைவிட்டு வேகம் வேகமாக அவள் இறங்கி ஓடி வந்தாள். அரவிந்தன் கையிலிருந்து வாங்கிய மூடியை தங்கத்திடமிருந்து வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள்.

"அடி குட்டி! குலாவியது போதும்; போ, வீட்டுக்கு.., உம்..ஓடு!" என்று வெறிகொண்டவள்போல விரட்டினாள்.

அரவிந்தனும் திகைத்து மலைத்துத்தான் உட்கார்ந்திருந்தான். அந்தப் பெண்ணோ, அவனைப் பரிதாபத்தோடு பார்த்து, "அப்ப நான் போகட்டுமா, அண்ணா?" என்றாள்.

பாமினி கண்கள் எல்லாம் சிவக்கக் காலை உதைத்துக்கொண்டு, "அண்ணா! உறவு கொண்டாடுகிற ஒழுங்கைப் பாரு—அண்ணா! போடி தெரியும்...உம்.,போ!" என்றாள்.

தங்கத்தினால் அதற்குமேல் அங்கே நிற்க முடியவில்லை. ஏதோ ஒரு நெருக்கடி ஏற்பட்டு, அதன் அவசர நிர்ப்பந்தத்தில் ஓடவேண்டியதாகிவிட்டது அவளுக்கு அவள் கண்ணுக்கு மறைந்து போனாள். பாமினி ஆவேசத்துடன் அரவிந்தனுடைய கையைப்பற்றி, "உள்ளதைச் சொல்லுங்கள். என்மீது உங்களுக்கு ஆசையோ, அன்போ இருப்பது உண்மைதானா?" என்றாள்.

அவளுடைய படபடப்பு அவனையும் பற்றிக்கொண்டு விட்டதுபோல் இருந்தது. ஆயினும் நிதானமாக, பலவீனமாகக்கூட, "ஏன், அதிலென்ன திடீரென்று சந்தேகம் வந்துவிட்டது உனக்கு?" என்றான்.

"சொல்லுங்கள். உண்மையாகச் சொல்லுங்கள்!" அவன் கையை அவள் வார்த்தைக்கு வார்த்தை குலுக்கி எடுத்துவிட்டாள்.

"உண்மைதான்."

"இன்னமும்?"

"இன்னமும் உண்மைதான்!"

"உறுதியாக? சத்தியமாக?"

"சத்தியமாக, உறுதியாக! இதெல்லாம் என்ன பேச்சு?"

"அப்படியானால் நான் ராத்திரி புறப்பட்டு உங்கள் ஜாகைக்கு வருவேன். நீங்கள் என்னோடு புறப்படத் தயாராக இருக்கணும். சாகப் போவதானால்கூடத் தயங்காமல் புறப்படணும்..பன்னிரண்டு மணிக்கு மேல் ஒரு மணிக்குள்..."

"என்ன பாமினி?"

"எனக்குத் தெரியாது. நீங்கள் தயாராக இருக்கணும்!" என்று சொல்லிக் கொண்டே அவன் பதிலை எதிர்பாராமல், திரும்பிப் பாராமல் அவள் கோயிலை விட்டு வெளியிலே ஓடி மறைந்து போனாள்.

(தொடரும்)

பழமொழிச் சித்திரம்

கையில் வெண்ணெய் இருக்க, நெய்க்கு அலைவானேன்?

கருத்துரை:—கையில் வேலையைக் கொடுத்துத் தலையில் பெண்ணைக் கட்டுவது!

நாராயணீயம்

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

10 ஹயக்ரீவாஸுர வதமும் வேதரக்ஷணமும்

स्वतुङ्ग शृङ्गक्षत वक्षसं तं
निपात्य दैत्यं निगमान् गृहीत्वा ।
विरिञ्चये प्रीतहृदे ददानः
प्रभञ्जनागारपते प्रपायाः ॥

ஸ்வதுங்க ச்ருங்கக்ஷத வக்ஷஸம் தம்
நிபாத்ய தைத்யம் நிகமான்
க்ருஹீத்வா
விரிஞ்சயே ப்ரீதஹ்ருதே ததான:
ப்ரபஞ்ஜனாகாரபதே ப்ரபாயா:

பதவுரை:— ப்ரபஞ்ஜனாகாரபதே—ஹே குருவாயூரப்பா, ஸ்வதுங்க—தங்களுடைய உயர்ந்த, ச்ருங்க—கொம்பினால், க்ஷதவக்ஷஸம்—பிளக்கப்பட்ட மார்பையுடைய, தம் தைத்யம்—அந்த ஹயக்ரீவாஸுரனை, நிபாத்ய—கீழே தள்ளிவிட்டு, நிகமான்—வேதங்களை, க்ருஹீத்வா—எடுத்து, ப்ரீதஹ்ருதே—சந்தோஷத்தையடைந்த மனமுடைய, விரிஞ்சயே—பிரும்மதேவனின் பொருட்டு, ததான:—கொடுக்கின்ற தாங்கள், ப்ரபாயா:—காப்பாற்ற வேண்டும்.

கருத்துரை:— "ஹே குருவாயூரப்பா! மத்ஸ்ய ரூபியான தங்களுடைய பெரியதான கொம்பினால், ஹயக்ரீவ அரசனுடைய மார்பைப் பிளந்து அவனைக் கொன்று கீழே தள்ளினீர்; வேதங்களை மறுபடியும் சந்தோஷத்தை அடைந்த பிரம்மதேவனிடம் திருப்பிக் கொடுத்த தாங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று ஸ்ரீ நாராயண நம்பூதிரி ஸ்ரீ குருவாயூரப்பன் சன்னிதியில் ஸ்ரீ பகவானைப் பார்த்துப் பிரார்த்தித்துக் கேட்க, ஸ்ரீ பகவானும் அங்கீகாரம் செய்து தலையை அசைத்தாராம்.

விளக்கவுரை:— ஸ்ரீ பகவான் ஸர்வக்ஞன். ஆகையால் மத்ஸ்யாவதாரம் செய்தார். மத்ஸ்ய உருவத்துடன் வந்தால் தான் இந்தப் பிரளய ஜலத்தில் ஓடத்தில் ஸப்த ரிஷிகளையும், ஸத்யவ்ரதனையும் வைத்துக் கொம்பினால் இழுத்துக் காப்பாற்ற முடியும். அவர்களைக் காத்தால்தான், அடுத்த வைவஸ்வத மன்வந்தரத்திற்கு வேண்டிய சிருஷ்டி காரியங்களைச் செய்ய முடியும். அத்துடன் ரிஷிகள்மூலமாகத் தருமத்தையும் நிலைநாட்ட வேண்டும். ஹவிஷ்மான், வீரகன், ஸுமேதஸ், உத்தமன், மது, அதிநாமா, அஸஹிஷ்ணு என்ற இவர்கள்தான் சாக்ஷுஷ மன்வந்தரத்தில் இருந்த ஸப்த ரிஷிகளாவார்கள். இவர்களுடைய பெயர்கள் ஹரி வம்சத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் பாகவதத்தில்

" हविष्मत्वीरकादयः "

(ஹவிஷ்மத்வீரகாதய:) ஹவிஷ்மான், வீரகன் முதலிய ஸப்தரிஷிகள் என்று மட்டும் கூறியிருக்கிறது. அவர்களே தற்போதைய வைவஸ்வத மன்வந்தரத்தில் உள்ள கச்யபர், அத்ரி முதலிய ஸப்த ரிஷிகள் ஆவர். ஹயக்ரீவனால் வேதங்கள் அபஹரிக்கப்படுவதை முன்னதாகவே அறிந்து, பகவான் மத்ஸ்ய ரூபியாய் வந்து, வேதங்களை ரக்ஷித்ததனால் ப்ரும்மதேவன் மிகவும் சந்தோஷமடைந்ததை

विरिञ्चये प्रीतहृदे

(விரிஞ்சயே ப்ரீதஹ்ருதே) என்பதால் கூறுகிறார்.

ஸ்ரீமத் பாகவதத்தில்—

संवादं महदाख्यानं श्रुत्वा मुच्येत
किल्बिषात् ।
अवतारो हरेर्योयं कीर्तयेदन्वहं नरः॥
सङ्कल्पास्तस्य सिध्यन्ति स याति
परमां गतिम् ॥

ஸம்வாதம் மஹதாக்யானம்
ச்ருத்வாமுச்யேத கில்பிஷாத்
அவதாரோ ஹரேர்யோயம்
கீர்த்தயேதன்வஹம் நர:
ஸங்கல்பாஸ்தஸ்ய ஸித்யந்தி
ஸ யாதி பரமாம் கதிம்

ராஜ ரிஷியான சத்யவ்ரதனுக்கும், ஸ்ரீ பகவானுக்கும் நடந்த, ஸம்வாத ரூபமான, பெருமையுடன் கூடிய இந்த மத்ஸ்யாவதாரக் கதையைக் கேட்டவர்களும் (படிப்பவர்களும்) பாபத்திலிருந்து (ஸம்ஸார ஸாகரத்திலிருந்து) விடுதலை அடைவார்கள். மேலும், எந்த பகவானுடைய மத்ஸ்யாவதாரம் உண்டோ, அதை எந்த மனிதர்கள் தினந்தோறும் சொல்லுவார்களோ, அவர்களுடைய எல்லா விருப்பங்களும் சித்தியாகின்றன என்று ஸ்ரீ சுகாசாரியார் கூறியிருக்கிறார்.

(மத்ஸ்யாவதாரம் முற்றும்)

★

33-வது தசகம்
அம்பரீஷ சரித்திரம்

கொச்சியைச் சேர்ந்த திருச்சூர் என்னும் நகரத்திலிருந்து சுமார் 20 மைல் தூரத்தில் குருவாயூர் திவ்ய க்ஷேத்திரம் உள்ளது. அந்த ஊரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ குருவாயூரப்பனின் மகிமையும், பெருமையும் சொல்லில் அடங்காதவை. ஸ்ரீ குருவாயூரப்பனின் கோவிலில் ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தை நாராயண ஸரஸ் என்று பக்தர்கள் அழைக்கிறார்கள். அந்தக்குளத்தில், நாள் கணக்காகவும், வாரக் கணக்காகவும், மாதக் கணக்காகவும் பக்தர்கள் ஸ்நானம் செய்து, தங்களுடைய உடலிலும், உள்ளத்திலும் உள்ள அழுக்கைப் போக்கி ஸ்ரீ குருவாயூரப்பனின் ஸன்னிதியில் நிற்கும்போது, அந்த பக்தர்கள் களங்கமில்லா உள்ளத்துடன் ஸ்ரீ குருவாயூரப்பனின் பிம்பத்தை உள்ளூரக் கண்டு ஆனந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்ற வாக்குப்படி, லோகத்தில் கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டித்து வாழ்க்கை நடத்துவதற்கு ஆஸ்திகப் பெரு மக்களுக்கு நேர்மையான முறையில் பல கோரிக்கைகள் நிறைவேற வேண்டியிருக்கின்றன. அக்கோரிக்கைகளை ஸாத்வீக முறையில் பகவானிடம் முறையிட்டுக் கேட்டுக்கொண்டால் நமது அபீஷ்டங்கள் கண்டிப்பாக நிறைவேறும் என்று நிரூபிப்பதுபோல், ஸ்ரீ குருவாயூரப்பன் தனது பக்தர்களின் அபீஷ்டங்களை இக்கலியிலும் அதி ஆச்சரியமான முறைகளில் நிறைவேற்றி வைத்துக்கொண்டிருக்கிறார்.

சுமார் 400 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ குருவாயூரப்பன் ஸன்னிதியில் பரம பக்தரான நாராயண பட்டதிரி என்னும் நம்பூதிரி வம்சத்தைச்சேர்ந்த அந்தணர், தனது வாதரோக நிவர்த்தியின் பொருட்டு ஸ்ரீ குருவாயூரப்பனின் பெருமையை ஸ்ரீமத் பாகவத ஸாரமான ஸ்ரீ நாராயணீயம் என்னும் கிரந்தத்தின்மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அதன் மூலம் அவருக்கு ஸ்ரீ குருவாயூரப்பன் அருள் கிடைத்து, வாதரோகம் நிவர்த்தியானதோடு, கர்மபந்தங்களிலிருந்தே விலகி, ஸ்ரீ குருவாயூரப்பனுடன் ஒளி வடிவாய் ஐக்யமாகிவிட்ட கதை மிக அற்புதமானது. பக்திப் பிரவாஹமான ஸ்ரீ நாராயணீயம் என்ற அந்தக் கிரந்தத்தை தவறாது தினந்தோறும் பாராயணம் செய்பவர்களும், ஸ்ரீ நாராயணீய ப்ரவசனங்களைக் கேட்பவர்களும், தங்களுடைய தீராத குறைகளெல்லாம் தீர்ந்தவர்களாகி, நிம்மதியான உள்ளத்துடன், அமைதியான வாழ்க்கையைத் திருப்தியுடன் நடத்தி வருகிறார்கள் என்பது நாம் நிதர்சனமாகக் காணும் உண்மை. ஸ்ரீ நாராயணீயத்தைப் பாராயணம் செய்தும், ஸ்ரீ நாராயணீய ப்ரவசனத்தைத் தவறாது சிரவணம் செய்தும் பலவித நன்மைகளை அடைந்த பல பக்தர்கள் நமக்குக் கடிதம் மூலமும், நேரிலும், தங்களுடைய ஆச்சரியமான அனுபவங்களை எழுதியும், சொல்லியும் வருகிறார்கள். அத்தகைய பக்தர்களில் ஒருவரின் அனுபவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.

பாலக்காட்டைச் சேர்ந்த நூரணி என்ற கிராமத்தில் கிருஷ்ணய்யர் என்ற பக்திமான் வசித்து வருகிறார். நல்ல திடகாத்திர சரீரத்துடனும், ஆரோக்யத்துடனும் வாழ்ந்து வந்தார். விதிவசத்தால் க்ஷயரோகம் (டி. பி.) என்ற கர்ம வியாதி அவரைப் பற்றிக்கொண்டது. நிறையப்

பணம் செலவுசெய்து வைத்தியங்கள் பல செய்துகொண்டார். ஆஸ்பத்திரியிலேயே பல நாட்கள் தீவிரமாக வைத்திய சிகித்ஸைகள் செய்துகொண்டார். அவை ஒன்றும் பயன்படவில்லை. 140 பவுண்டு எடையுள்ள அவருடைய உடல் துரும்பாக இளைத்து, 60 பவுண்டுக்குக் குறைந்துவிட்டது. ஆஸ்பத்திரியில் அவருக்கு இனி சிகித்ஸை செய்து பயனில்லை என்று அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். இனி தெய்வம் ஒன்றுதான் தனக்குக்கதி என்று அறிந்துகொண்ட அந்த பக்தர், ஸ்ரீ குருவாயூரப்பனை அல்லும் பகலும் நினைத்து, மனங் கனிந்து வணங்கி வழிபட்டார். ஸ்ரீ நாராயணீயப் பிரவசனம் நடந்தபோது, அதைத் தவறாமல் சிரவணம் செய்து பாராயணம் செய்யவேண்டுமென்ற அவா அவருக்கு எழுந்தது. அவ்வாறே பாராயணமும் செய்து பக்தி பாவசமாகிக் கண்ணீர் உகுத்தார். ஸ்ரீ குருவாயூரப்பனின் கருணைப் பார்வை பக்தரின் மேல் விழுந்தது. அப்பனின் கருணை நிறைந்த மனம் பக்தரின் கர்மவினையைப் பார்த்து உருகியது. கலியுக வரதனாக நின்று பக்தர்களைக் காத்துவரும் அந்தத் தெய்வத்தின் அனுக்கிரஹத்தால் இன்று அவர் பூர்ண சுகமடைந்து முன்பு எவ்வளவு தென்புடன் விளங்கினாரோ, அதேபோல் விளங்கிக்கொண்டிருக்கிறார். அவர் எடை முன்பு இருந்ததுபோல் அதே 140 பவுண்டுக்கு ஏறிவிட்டது. தினமும் ஸ்ரீ குருவாயூரப்பனின் பெருமையையும், ஸ்ரீ நாராயணீயத்தின் மகிமையையும் அறிந்து ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார். தவறாது இன்னும் ஸ்ரீ நாராயணீயத்தைப் பாராயணம் செய்து வருகிறார்.

ஸ்ரீ சுகர் பக்திப் பிரவாஹமாய் ஸ்ரீமத் பாகவதத்தைச் சொல்லிக்கொண்டுவரும்போது, ஸ்ரீ ராம சரித்திரம் சொல்ல வேண்டிய ஸந்தர்ப்பம் ஏற்பட்டது. பக்தர்கள் ஸ்ரீ ராம சரித்திரத்தைக் கேட்ட மாத்திரத்தில் புளகாங்கிதராகி, வேறு எந்தக் கதைகளையும் கேட்க விரும்பமாட்டார்கள். அத்தகைய அற்புதமான ஸ்ரீ ராம சரித்திரத்தைத் திடீரென்று ஆரம்பித்துவிடக்கூடாது என்பதற்காக ஸ்ரீ சுகர், ஸ்ரீ ராமனுடைய வம்சமான இக்ஷ்வாகு குலம் உதித்த சூர்யவம்சத்தைப் பற்றி விரிவாகப் பேச ஆரம்பிக்கிறார். ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் சரித்திரத்திற்குத் தகுந்த முறையில், பூர்வாங்கமாக முன்னுரை கூறுவதுபோல் அம்பரீஷ சரித்திரம் அமைந்திருக்கிறது. ஸ்ரீமத் பாகவதத்தை அனுசரித்து, அந்த பாகவதத்தில் ஸ்ரீ சுகர் வர்ஷித்திருக்கும் பக்தி என்னும் அமிருததாரையின் ஸாரத்தை, ஸ்ரீ நாராயண நம்பூதிரி ஸ்ரீ குருவாயூரப்பன் சன்னிதியில் ஸ்ரீ நாராயணீயம் என்னும் கிரந்தமாக அதியற்புதமாய்ச் செய்திருக்கிறார். ஸ்ரீ ராம சரித்திரத்தின் பெருமையை ஸ்ரீ சுகர் உணர்ந்தவாறே, ஸ்ரீ நாராயண நம்பூதிரியும் உணர்ந்திருப்பது அம்பரீஷ சரித்திரத்தின் மூலம் வெளிப்படுகின்றது.

ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்தவர். இக்ஷ்வாகு வம்சம் சூர்யகுலத்தைச் சேர்ந்தது. இக்ஷ்வாகு வைவஸ்வத மனுவின் புத்திரன். வைவஸ்வத மனுவுக்கு 10 புத்திரர்கள். அவர்களில் இக்ஷ்வாகு ஒருவர். அம்பரீஷனின் பாட்டனாரான நபகன் ஒருவர். இக்ஷ்வாகுவைப் பற்றிப் பேசு முன் இக்ஷ்வாகு வம்சத்தைப்பற்றியும், இக்ஷ்வாகுவின் குலத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? அந்த இக்ஷ்வாகுவின் தம்பி நபகன் என்னும் அரசன். நபகனின் புத்திரன் நாபாகன். நாபாகனின் புத்திரன் அம்பரீஷன். அம்பரீஷன் மகா பக்திமான். விரதங்களை மிகுந்த சிரத்தையுடன் அனுஷ்டித்து வந்தவன். ஏகாதசி துவாதசி விரதங்களை ஆழ்ந்த பக்தியுடன் அனுஷ்டானம் செய்து முக்தியடைந்த மகா பாகவதோத்தமன். அந்த விரதங்களின் மேன்மையை உலகத்திற்கு வெளிப்படுத்திய மகா புருஷன். அந்த மகாபுருஷனின் திவ்யமான கதையை நம்பூதிரி மிகுந்த பக்திச் சுவையுடன் ஸ்ரீ நாராயணீயத்தில் 33-வது தசகத்தில் அருளியிருக்கிறார். ஞானிகளைக் காட்டிலும் பக்தர்களே மேம்பட்டவர்கள் என்பது அம்பரீஷ சரித்திரத்தின்மூலம் வெளிப்படுகின்றது. ஸ்ரீமத் பாகவதத்தின் ஜீவநாடி பக்தி. அந்த பாகவதத்தின் ஸாரமே ஸ்ரீ நாராயணீயம். பக்தி நீரோட்டம் ஓடிக்கொண்டிருக்கும் ஸ்ரீ நாராயணீயத்தில், அம்பரீஷ சரித்திரம் பக்தியின் மேன்மையை விளக்கும் சிறந்ததொரு சரித்திரம்.

துர்வாஸ முனி சிறந்த ஞானி. அம்பரீஷன் மகா பக்திமான். துர்வாஸ முனியின் கோபம் ஒரு சமயம் அம்பரீஷனைத் தாக்குகின்றது. ஆனால், ஞானியின் கோபம் பக்தனை ஒன்றும் செய்ய முடியவில்லை. கடைசியில் துர்வாஸர் அம்பரீஷனிடம் பணியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

1. அம்பரீஷனின் பக்தி வாழ்க்கை

वैवस्वताख्यमनुपुत्रनभागजात
नाभागनामकनरेन्द्रसुतोऽम्बरीषः ।
सप्तार्णवावृतमहीदयितोऽपि रेमे
त्वत्सङ्गिषु त्वयि च मग्नमनाः सदैव ॥

வைவஸ்வதாக்ய மனுபுத்ர நபாகஜாத
நாபாக நாமக நரேந்திரஸுதோ
அம்பரீஷ:
ஸப்தார்ணவாவ்ருத மஹீதயிதோபி
ரேமே
த்வத்ஸங்கிஷு த்வயி ச மக்னமனா:
ஸதைவ

பதவுரை:—வைவஸ்வதாக்ய—வைவஸ்வதன் என்ற பெயருள்ள, மனுபுத்ர—மனுவின் பிள்ளையான, நபாகஜாத—நபகன் என்ற அரசனுக்குப் பிறந்த, நாபாக நாமக—நாபாகன் என்ற பெயருடைய, நரேந்திர—அரசனுடைய, ஸுத—பிள்ளையான, அம்பரீஷ:—அம்பரீஷன், ஸப்தார்ணவாவ்ருத—ஏழு சமுத்திரங்களால் சூழப்பட்ட, மஹீதயித: அபி—பூமிக்கு அதிபனாயிருந்தபோதிலும், த்வத்ஸங்கிஷு—தங்கள் பக்தர்களிடத்திலும், த்வயிச—தங்களிடத்திலும், ஸதைவ—எப்பொழுதும், மக்ன மனா:—ஆழ்ந்த மனத்தை உடையவராக, ரேமே—ரமித்துக் கொண்டிருந்தார்.

கருத்துரை:—"ஹே குருவாயூரப்பா! வைவஸ்வத மனுவின் பிள்ளை நபாகனும். நபாகனின் பிள்ளை நாபாகன் என்னும் அரசனும். நாபாகனின் புத்திரன் அம்பரீஷ சக்ரவர்த்தியாம். ஏழு சமுத்திரங்களாலும் சூழப்பட்ட பூமி முழுவதற்கும் அம்பரீஷன் அதிபதியாயிருந்தபோதிலும், தங்களிடத்திலும், தங்களுடைய பக்தர்களிடத்திலும் தன் முழு மனதையும் எப்பொழுதும் ஈடுபடச்செய்து, ரமித்துக்கொண்டிருந்தானுமே" என்று ஸ்ரீ நாராயண நம்பூதிரி ஸ்ரீ குருவாயூரப்பனைப் பார்த்துக் கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் தலையை அசைத்து "ஆம்" என்று அங்கீகாரம் செய்தாராம்.

(தொடரும்)

ரமணவிலாசனி வடிகா

மிகச் சிறந்த நிவாரணி தளர்ச்சியடைந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, ஜீவசக்தியையும் பலத்தையும் அதிகரிக்கிறது வாழ்க்கையின் பூரண இன்பங்களை ரஸிக்க **நிரந்தர** யௌவனத்தை அளிக்கிறது

டப்பி ரூ. 1—4—0.

மதன் மஞ்சரி பார்மஸி

ராம்வாடி, கல்பாதேவி ரோட், பம்பாய்-2

ஏஜண்டுகள்:—சேலம்: மாடர்ன் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ். பெங்களூர்: ஸிடி மெடிகல் ஸ்டோர்ஸ். சிக்பேட். மற்றஇடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

விக்கிரமாதித்தன்

உலகியல் கதைகள்

கவிதைச் சித்திரத் தொடர்

சாலிவாஹனன்

விக்கிரமாதித்தன் பிறந்த கதை

★

நந்தியாபுர நகரில் நற்கலைகள் வல்லவனும்
சந்திரவாணடினனும் சற்குணவானொருபார்ப்பான்
அதிகவித்தையாசையினால் அலைந்துகற்றான் மந்த்ரங்கள்
உண்ணாமல் உறங்காமல் ஓராறு மாதங்கள்

அயர்வும் பசியுமிகவயர்ந்துவிட்டான் வழிவீட்டில்
வீட்டுக் கரசியொரு விலைமாது வடிவழகி
பாட்டும் பரதநடம் பழகு கலையலங்காரி
வீட்டுக்குட் புகுந்ததுமே வியர்த்துத் திகைத்துவிட்டாள்

மூச்சொன்றே உடலறியும் முழுவுயிரும் அபாவறியும்
அலங்காரவல்லியவள் அதிமோகப் பணிவிடையில்
நாளெட்டிலந்தணனின் நல்லவுயிர்பிழைத்ததவள்
"மணவாளராக வும்மை மணபபதுதா னென்றுரைசை"

என்றுரைக்க அந்தணனும் ஏற்காமல் வழக்குரைத்தான்
உரைத்த வழக்கிதிலேவுலகறுயத் தாஸியுடன
மன்னர்மகள் ரேகை மந்திரத்துப் புரோகிதரின்
கன்னிப்பெண்செட்டிமங்கை கலியாணஞ்செய்துவைத்தார்

புரோகிதர்பெண் கல்யாணி பெற்றெடுத்தாள் வல்லவனை
மன்னன்மகள் விக்ரமாதித்தன்தனைப் பெற்றாள்
செட்டிப்பெண்பட்டியெனும் சேயொன்றின் தாயானாள்
அலங்காரவல்லிக்கு அவதரித்தான் பத்ரகிரி

பத்ரகிரிக்கொரு முனிவர் பரிசளித்தார் மாதுளையை
மாதுளத்தில மையல்கொண்டு மன்னன்தன்மனைக்கீந்தான்
அந்தக்கனி மறுநாள் அரண்மனையின் தாதிதலைக்
கூடையிலே கண்டுடனே கூப்பிட்டான் பணிப்பெண்ணை.

(தொடரும்)

மணி

துறவி

அறிவு நூல்களையெல்லாம் கற்ற துறவியொருவரின் குருகுலத்தில் கல்வி கற்று வந்தார் போதிசத்துவர். அந்தத் துறவிக்கு மற்ற சீடர்கள் இருந்தாலும், நல்ல ஞானம் படைத்த போதிசத்துவரே முக்கிய சிஷ்யராக இருந்தார். குருவுக்கு போதிசத்துவர் மீதே அளவற்ற அன்பும் மதிப்பும் இருந்தது.

ஒரு நாள் மாலை வேளை. அடர்ந்த ஒரு காட்டின் வழியே குருவும் சிஷ்யரும் சென்றுகொண்டிருந்தனர். அடுத்த ராஜ்யத்திற்குச் செல்லவேண்டிய ஏதோ காரியம் இருந்ததால்தான் அவர்கள் அவ்வழியே சென்றுகொண்டிருந்தனர்.

அந்த சமயத்தில் ஒரு கொள்ளைக் கூட்டம் வந்து அவர்களை மடக்கிக்கொண்டது. "மடியில் இருப்பதை அவிழ்த்து வை!" என்று குருவைப் பிடித்து உலுக்கி மிரட்டினான், கொள்ளைக் கூட்டத்தின் தலைவன்.



பாவம், அந்தத் துறவியின் மடியில் என்ன இருக்க முடியும்? ஒன்றும் இல்லை! ஆகவே, துறவி 'திருதிரு' வென்று விழித்தார். குருவிடமே ஒன்றும் இல்லாதபோது சிஷ்யரிடம் என்ன இருக்கப் போகிறது? போதிசத்துவரிடத்திலும் அவ்வளவுதான்!

ஆனால் அந்தக் கொள்ளையர் சும்மா இருக்கவில்லை. துறவியைப் பிடித்துக் கைகளில் விலங்கிட்டு வைத்துக்கொண்டு விட்டார்கள். "பணம் கொண்டு வந்து கொடுத்தால்தான் உனது குருவை மீட்டுச் செல்ல முடியும். குறித்த நாளுக்குள் நீ வரவில்லையானால், உனது குருநாதர் மோக்ஷம் அடைந்துவிட்டார் என்று நிச்சயம் செய்துகொள்ளலாம்! ஆகவே, குருவின் உயிர், அவருடைய பரமானந்த சிஷ்யனாகிய நீ கொண்டு வந்து தரும் பணத்தில்தான் இருக்கிறது!" என்று போதிசத்துவருக்கும் கடுமையான எச்சரிக்கை செய்துவிட்டனர், அந்தக் கொடும் கொள்ளைக் கூட்டத்தினர்.

"அப்படியே ஆகட்டும். வெகு விரைவிலேயே பொன் கொண்டு

வந்து கொடுத்து, எனது உயிருக்கு உயிராகிய குருநாதரை விடுவித்துச் செல்கிறேன். தயவு செய்து அவருக்கு மட்டும் ஒரு துன்பமும் செய்யாதீர்கள்" என்று கொள்ளைக் கூட்டத் தலைவனிடம் வேண்டிக்கொண்டார் போதிசத்துவர்.

இதைச் சொல்லி முடித்த ஒரு கணத்துக்கெல்லாம் போதிசத்துவருக்கு எதுவோ நினைவுக்கு வந்தது. அந்த நினைவு ஏற்பட்டதுமே ஒரு விநாடி அவருக்கு திகைப்பாக இருந்தது. பிறகு சமாளித்துக்கொண்டு, ஒருவாறாகத் துறவியை அணுகினார். அவரிடத்தில் விஷயத்தைச் சொல்லி, தவறு செய்துவிடாமலிருக்குமாறு எச்சரிக்கை செய்துவிட வேண்டும் என்ற எண்ணத்திலேயே குருவை அணுகினார் போதிசத்துவர்.

குருவுக்கே சிஷ்யன் எச்சரிக்கை செய்து உபதேசம் செய்யும் அளவுக்கு அதென்ன அப்படிப்பட்ட விஷயம்?

ஆமாம்! பெரிய விஷயந்தான் அது. ஆகாயத்திலிருந்து ரத்தினங்களையும், வைடூரியங்களையும் மழைபோலப் பொழிவிக்கக்கூடிய பெரிய விஷயம்! அந்தத் துறவிக்குத் தெரிந்த மகா மந்திரம் ஒன்றால் அப்படி ரத்தின வைடூரிய மழையைப் பெய்விக்க முடியும்! அதுவும் அன்றுதான்—குறிப்பிட்ட சில கிரகங்கள் ஒன்று கூடும் பௌர்ணமி தினமாகிய அன்று, வருஷத்தில் ஒரே ஒரு முறை, அந்த நாளன்றுதான்—அப்படிச் செய்ய முடியும்!

இந்த விஷயம் நினைவுக்கு வந்ததும்தான் குருவுக்கு எச்சரிக்கை செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது, போதிசத்துவருக்கு. 'இப்பொழுது பணம் கொடுத்தால் தானே தப்பிக்கலாம்' என்ற எண்ணத்தில், ரத்தின, வைடூரிய மழையைப் பெய்வித்து, கொள்ளைக் கூட்டத்தினரின் கொட்டத்தை அதிகமாக்கிவிடப் போகிறாரே என்ற பயத்தில்தான் அவருக்கு எச்சரிக்கச் சென்றார் போதிசத்துவர்.

தாம் நினைத்தபடியே குருவின் காதோடு காதாக எச்சரிக்கவும் செய்தார் போதிசத்துவர். குருவும், "சரி' அப்படியே ஆகட்டும். நீ விரைவில் பணம் கொண்டுவந்து கொடுத்து என்னை விடுவித்துவிடு" என்று கூறி அவருக்கு விடை கொடுத்தார்.

சிஷ்யர் பணம் கொண்டுவரச் சென்றுவிட்டதும் குருவுக்கு யோசனையாகிப் போய்விட்டது. 'ஒருக்கால் குறிப்பிட்ட நாளுக்குள்



நம்மை மீட்க போதிசத்துவர் வராவிட்டால்...' என்று நினைத்ததுமே அவருக்கு மிகவும் பயமாக இருந்தது. 'அடுத்தபடி தலைபோக வேண்டியதுதானே...' என்று சஞ்சலப்பட்ட அவர், மனத்தில் திடமாக ஒரு உறுதி செய்துகொண்டு கொள்ளையர் தலைவனை அருகில் அழைத்தார்.

"அப்பா, என் கைகளைப் பிணைத்திருக்கும் விலங்கை விலக்கி என்னை விடுவித்து விடு. எதிரில் உள்ள சுனையில் நீராடிவிட்டு வந்து மந்திரம் ஜபித்து உனக்கு ரத்தின வைடூரிய மழையாகவே பெய்யச் செய்கிறேன்" என்று அந்தத் தலைவனிடம் வேண்டிக் கொண்டார் துறவி.

அப்போது முழுச் சந்திரன் கிழக்குத் திக்கில் உதயமாகிக்கொண்டிருக்கும் நேரம். அன்று, அந்தப் பௌர்ணமி யன்று, குருவின் மந்திரத்திற்கு உரிய எல்லா கிரகங்களும் ஒன்றுசேரக்கூடிய அந்த சமயத்தில், துறவி தலைமேல் விடுவிக்கப்பட்ட இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, 'ஓம்' என்று சொல்லி ஏதோ மந்திரத்தை முணுமுணுத்தார்.

அவர் மந்திரத்தை உச்சரித்து முடித்ததுதான் தாமதம், ஆகாயத்தினின்றும் 'பளபள' வென்று மின்னும் பல ரத்தினக் கற்கள் 'சோ' வென்று பொழிந்தன! வகை வகையான வைடூரியக் கற்கள் காட்டுச் சருகுகளுக்கு இடையே விழுந்து சலசலத்தன!

இவ்வளவு பெரிய அதிருஷ்டத்தைத் தமக்களித்த துறவியின் மீது பேரன்பு கொண்ட அக் கொள்ளையர் தலைவன், அவரை அவர் செல்லவேண்டிய ராஜ்ய எல்லைவரை பத்திரமாகக் கொண்டு போய் விடத் தீர்மானித்து, தனது கூட்டத்தினருடன் துறவியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

இவ்வாறாக எல்லோரும் சென்றுகொண்டிருக்கும்போது, அவர்களையும் விடப் பெரிய திருடர்கள் கூட்டம் ஒன்று எதிர்ப்பட்டது. ஒவ்வொருவரும் பெரும் பெரும் மூட்டையாகச் சுமந்து செல்வதைக் கண்ட அவர்கள், அவற்றைக் கவர்ந்துவிட எண்ணி, கொள்ளையர் தலைவனிடம் "மரியாதையாக எல்லா மூட்டைகளையும் எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். இல்லாவிட்டால் அத்தனை பேரும் அதோகதிதான்!" என்று பயமுறுத்தினர்.

தப்பிக்க வேறு வகை அறியாத கொள்ளையர் தலைவன் துறவியைக் காட்டி, "இவர்தான் மந்திரம் உச்சரித்து எங்களுக்கு நவரத்தின மழை பொழிவித்தார். நீங்களும் இவரை அப்படிச் செய்யச் சொல்லிப் பயனடையுங்கள்" என்று சொல்லித் துறவியை அவர்களிடம் ஒப்படைத்தான்!

பாவம், துறவி என்ன செய்வார்! திருடர்கள் என்ன பயமுறுத்தியும், "நான் என்ன செய்வேன்? இனிமேல் அடுத்த வருஷம் தான் இது சாத்தியமாகும்"என்று பன்னப் பன்னக் கூறினார் அவர்!

இதனால் பெரும் ஏமாற்றமும் அவமானமும் அடைந்த அந்தத் திருட்டுக் கூட்டத்தினர், துறவியைக் கொன்று தீர்த்து விட்டு, மற்ற கொள்ளையரின் மீது பாய்ந்து பயங்கரமாகச் சண்டை போட்டனர்.

இந்தக் கொடூரமான சண்டையில் அந்தக் கூட்டத்தினரில் இருவரைத் தவிர மற்ற யாவரும் செத்து ஒழிந்தனர். அத்தனை ரத்தினக் குவியலும் அந்த இரண்டு பேருக்கே சொந்தமாகி விட்டது!

மூட்டை மூட்டையாகக் குவிந்திருந்த நவரத்தினக் குவியலிடையே உட்கார்ந்திருந்த இருவரில் ஒருவன் எழுந்து, மற்றொருவனிடம், "அன்ப, எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. அருகிலுள்ள என் குடிசைக்குப் போய் கொஞ்சம் சோறு தின்று வருகிறேன். வரும்போது உனக்கும் கொண்டு வருகிறேன். அதுவரை இதைக் காவல் செய்துகொண்டிரு" என்று கூறிவிட்டு எழுந்து சென்றான்.

குடிசைக்குச் சென்று சோறு தின்ற அவன், இன்னொரு பாத்திரத்தில் சிறிது சாப்பாடு எடுத்துக்கொண்டு, அதில் கொஞ்சம் கடுமையான விஷத்தைக் கலந்து வைத்தான். 'இந்தச் சோற்றைத் தின்றதும் அவன் மாண்டு போவான். அப்புறம் அத்தனைப் பொக்கிஷமும் நமக்கேதான்!' என்று மனத்துக்குள்ளாகவே சந்தோஷப்பட்டுக் கொண்டான் அவன்!

சோற்றைக் கொண்டுபோய் மற்றவனுக்கு எதிரில் குனிந்து கீழே வைத்துக்கொண்டிருந்த அவனது தலையை, மற்றவன் தனது உடைவாளை உருவிச் சீவித் தள்ளிவிட்டான்! "பங்காளி பரலோகம் போய்ச் சேர்ந்தான். இனி நமக்கு பயமில்லை. இத்தனை செல்வத்துக்கும் நான்தான் ராஜா!" என்று வாய்விட்டுச் சொல்லியவாறே, மனது நிறைந்த திருப்தியுடன் சோற்றை எடுத்து உருண்டை செய்து 'ஜம்' மென்று வாயில் போட்டுக் கொண்டான், அவன்!

ஆனால் பாவம், கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவன் தலை கிறுகிறுத்தது. கண்கள் பயங்கரமாக ஆந்தை முழி முழித்தன. கைகால்களெல்லாம் உதறலெடுத்தன. அடுத்த கணம் ஆள் காலி!

அடுத்த நாள் போதிசத்துவர் குருவை மீட்கப் பணத்துடன் திரும்பி வந்தார். வந்து காட்டில் நடந்திருந்த இந்த அவலத்தையெல்லாம் கண்டார். கும்பல் கும்பலாக எங்கும் பிணக் குவியலாக இருந்த அந்த கோரத்துக்கு நடுவில், தனது குருநாதரும் உயிரற்றுக் கிடப்பதைக் கண்ட அவர் நெஞ்சு துக்கத்தால் துடித்தது.

'எத்தனைதான் கற்றிருந்தும், செய்யக்கூடாதது எது, செய்யக்கூடியது எது என்று தெரியாமல் தவறு இழைத்துவிட்டாரே குருநாதர்' என்று போதிசத்துவரின் உள்ளத்தில் ஏக்கமாக இருந்தது. 'தீயவர்களுக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுத்து, மற்றவர்கள் பொறாமைப்படும்படியாக இருக்க விடக்கூடாது. அப்படிச் செய்தால்—துறவி செய்த மாதிரி அப்படிப்பட்ட பெருந்தவறைச் செய்தால்—ஒருவரை ஒருவர் வெட்டி மடிந்து உலகமே பிணக்காடாக ஆவதுதான் பலன்!' என்ற நீதியை போதிசத்துவருக்கு உணர்த்திற்று அந்தக் கோரக் காட்சி. இந்த உதாரணத்தைக் கொண்டே உலகெல்லாம் உபதேசம் செய்து வந்தார் போதிசத்துவர்.

(புத்த ஜாதகக் கதைகளில் ஒன்று இக்கதை.)



ஐயோ ஆசிரியரே!

அல்பாயுஸ்

'பழைய சோறு' ஆசிரியருக்கு எழுத்தாளர் 'கஜினி' எழுதிய கடிதம்.

"போன்புடையீர்,

வணக்கம்.

'பழைய சோறு' என்ற புதுமை குலுங்கும் பெயருடன், தாங்கள் பத்திரிகை ஆரம்பிக்கவிருப்பதை 'தினம் ஒரு முறை' ஏட்டில் ஒரு விளம்பரத்தில் கண்டறிந்தேன். நமது கலாசார மாபையும், நாகரிகத் தொன்மையையும் தாங்கள் பாதுகாப்பீர்கள் என்பதற்கு இந்தப் பெயரே சான்று. 'பழைய சோறு' உடலை வளர்ப்பதுபோல் தங்கள் இலக்கிய இதழ் தமிழை நிச்சயம் வளர்க்கும்.

நிற்க, இத்துடன் ஒரு கதை இணைத்துள்ளேன். 'இது பழைய கதை' என்று பல ஆசிரியர்கள் வந்தனத்துடன் திருப்பியனுப்பிவிட்டதை நான் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். பழையது என்ற அதே காரணத்திற்காக நீங்கள் இதை அங்கீகரிப்பீர்கள் என்று நம்புகிறேன். 17-ந் தடவையாக இந்தக் கதையை பிரதியெடுத்து அனுப்புவதால், 'கஜினி' என்னும் புனைப்பெயர் தரித்தேன்.

புதுமை என்பது புரட்டு; இமயமலைக்குச் சுண்ணும்பு அடிக்கும் கதைதான் அது. பழைமையும் 'பழைய சோறு'ம் வளர முன்னைப் பழம்பொருளானவன் அருளட்டும்.

அன்பன்,
'கஜினி' "

★

'பழைய சோறு' ஆசிரியருக்கு நியூஸ் ஏஜண்ட் வேணுகோபால், நாகர் கோவில் எழுதியது:

"அன்புள்ள ஐயா,

வணக்கம்.

இப்பவும் பல முதிய வம்சங்களுடன் தங்கள் பத்திரிகை வெளிவரவிருப்பதாக விளம்பரம் பார்த்தேன். பல வருஷங்கள் தொடர்ந்து சரித்திர நாவல் ஏதும் வெளிவரும் என்று இதிலிருந்து எதிர்பார்க்கிறேன். அப்படியானால், எனக்கு ஏஜன்ஸி நிபந்தனை பாரங்கள் அனுப்பி வைக்கவும். டெபாஸிட் ஏதும் கட்ட இயலாது.

இப்படிக்கு,
வேணுகோபால்."

★ ★ ★

'தினம் ஒரு முறை' ஆசிரியருக்கு 'பழைய சோறு' ஆசிரியர் எழுதிய லிகிதம்:

"அன்புடையீர்,

நமஸ்காரம்.

'பல புதிய அம்சங்களுடன்' என்ற வாசகத்துடன் நான் கொடுத்திருந்த விளம்பரத்தை, 'பல முதிய வம்சங்களுடன்' என்று பிரசுரித்திருக்கிறீர்கள். இதன் விளைவாக மிகுந்த சிரமம் ஏற்பட்டுவிட்டது. 'கொண்டு வா, ஒரு நீண்ட சரித்திரத் தொடர் கதையை' என்று ஒரு ஏஜண்ட் கோருகிறார். செய்த தவறுக்குப் பரிகாரமாக, யாராவது 'பாளையக்காரர்கள்' பாக்கியிருக்கிறார்களா, அல்லது 'கோட்டை', 'தீவு' ஏதாவது விடுபட்டுப் போய்விட்டதா என்று விளக்கக் குறிப்பு அனுப்பி உதவுங்கள். தவிரவும் விளம்பரக் கட்டணத்தை வஜா செய்வதே நியாயமென்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

தங்கள் பதிலை எதிர்நோக்கும்
அன்புள்ள,
'பழமைச்சித்தன்'. "

★

"நண்பர் 'பழமைச் சித்த'ருக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் கோரிய குறிப்புகள் ஏதேனும் இருந்தால், நாங்களே வாராந்திர சஞ்சிகைப் பகுதியில் நாவல் துவங்கியிருக்க மாட்டோமா?

விளம்பரப் பிரதியின் 'ப்ரூப்' தங்களுக்கு அனுப்பியிருந்தோம். தாங்கள் சரிபார்த்து அனுப்பியிருக்கிறீர்கள். ஆகவே, தவறு எங்களுடையது அல்ல.

தங்களுக்கு ஒரு நல்ல கம்பாஸிடர் தேவைப்படலாம் என்ற நம்பிக்கையில், எங்கள் காரியாலயத்தில் ஆட்குறைப்பு காரணமாக விலக்கப்பட்ட துலுக்காணம் என்ற நபரைத் தங்களிடம் அனுப்புகிறேன். ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏழு வருஷ அனுபவத்தில் ஒரே ஒரு முறைதான், ரேடியோப் பகுதியில் 'எக்ஸ். ஓய். விமலா-பாட்டு' என்பதற்கு மாருக 'எக்ஸ். ஓய். விமலா பாட்டி' என்று இவர் போட்டார். அச்சுப் பேயை விரட்டியடிப்பதில் இவரது திறமைக்கு இன்னும் என்ன எடுத்துக் காட்டு வேண்டும்.

இணைப்பு:— விளம்பர 'பில்'

என்றும் தங்கள்,
....
(கையெழுத்து புரியாது")

★

'பழமைச் சித்தர்' இதற்கு அளித்த பதில்:

"வணக்கம்,

தங்கள் கடிதமும் விளம்பர 'பில்'லும் வந்தன. துலுக்காணம் வந்தார். வேலையில் அமர்ந்துவிட்டார். தமது அனுபவத்தில் இரண்டாவது பிழையை நேற்று செய்தார் என்பதையும் குறிப்பிடலாமா?

ராகங்களின் பெயரைத் தலைப்பாகக் கொடுத்து, கதை எழுதும் புது மோஸ்தரை ஒட்டி, அன்பர் ஒருவர் 'சுரடி' என்ற கதை அனுப்பியிருந்தார். இதைப் பதினெட்டு பாயிண்ட் டைப்பில் 'கரடி' என்று கம்போஸ் செய்தார். இனிமேல் இதுபோன்ற அச்சுக் கரடிகள் தலைகாட்டாவென்று நம்புகிறேன்.

இன்னென்று. 'புதிய அம்சம்' என்பதை 'முதிய வம்சம்' என்று அச்சுக்கோத்தவர் உண்மையிலேயே இயல்பான கவிதையுள்ளம் படைத்தவராக இருக்கவேண்டும். எனவே, 'கம்பாஸிடர் இலக்கியம்' என்ற எங்கள் புதிய தொடர் அம்சத்தின் கவிதைப் பகுதிக்கு அன்னாரது விஷயதானத்தை (பூதான், ஸம்பத்துதான் வர்க்கத்தில் இது ஒன்று) எதிர்பார்க்கிறேன்.

விளம்பரக் கட்டணத்துக்காக இத்துடன் 'செக்' ஒன்று இணைத்துள்ளேன். 'செக்'கை அடுத்த மாதம் முதல் வாரத்தில் பாங்கியில் கட்டலாம்.

இணைப்பு.—ஒரு 'செக்'.

தங்கள்,

'பழமைச்சித்தன்'.

பி. கு.— இத்துடன் இன்னொரு விளம்பரப் பிரதி அனுப்பியுள்ளேன். இதை எடுப்பான இடத்தில் போட வேண்டுகிறேன். 'ப்ரூப்' அனுப்பவேண்டாம்.

"ப. சி."

விளம்பர நகலின் வாசகம்:—

"பத்திரிகை உலகில் பரபரப்பை உண்டுபண்ண 'பழைய சோறு' விரைவிலேயே சுடச்சுட வெளிவரும். முற்றிலும் இது உங்கள் பத்திரிகை. ஜனநாயக ரீதியில் நடைபெறவிருக்கும் இதன் லாப நஷ்டத்தில் உங்களுக்குப் பங்கு உண்டு. எனவே, என்னென்ன புதிய பகுதிகள் சேர்க்கலாம் என்பது பற்றிச் சமீபத்தில் நடன அரங்கேறிய சிறு பாப்பாக்களிலிருந்து முதியோர் வரை, வாழ்வின் எல்லாத் துறைகளிலுமுள்ளவர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்கக் கோருகிறோம்."

★ ★ ★

மக்களின் மனதை இந்த விளம்பரம் கவர்ந்தது. ஏராளமான கடிதங்கள் வந்தன. அவற்றில் மின்னலிட்ட பல புதிய கருத்துக்களை இங்கு காணலாம். ஆனால், இந்தப் புதிய தொடர் அம்சங்கள் மக்கள் மன்றத்தில் 'பேடண்ட்' செய்யப் பட்டவையாதலால் வார, மாத ஏடுகள் இவற்றை வெளியிட முனையவேண்டாம்.

ஒரு மாணவனின் யோசனை:—

"எதிர்காலம் எங்கள் கையில்தான் என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள். ஆகவே, தங்கள் பத்திரிகையைப் படிக்கும் சுவை மாணவ சமூகத்திடையே பரவி வேரூன்றினால், அதன் வெற்றி திண்ணம். எனவே, எங்களுக்காக ஒரு பகுதி துவங்கி, அதில் மாதிரிக் கேள்வித் தாள்கள், நல்ல 'நோட்ஸ்'களிலிருந்து சில பகுதிகள் இவற்றைத் தொகுத்துப் பிரசுரிக்க வேண்டும். ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல், இந்தக் கேள்வித் தாள்களில் சேர்க்கும் வினாக்கள் பரீட்சைத் தாளில் அமைந்தால்கூட நாங்கள் எல்லோரும் 'பழைய சோற்றை' நாடுவோம்."

பெண் பெற்ற ஒரு நடுத்தர வகுப்பினர் சொல்கிறார்:—

"பல்லிடுக்கில் எதுவும் சிக்கிக்கொண்டால் நாக்கு அதையே துழாவிக்கொண்டிருக்குமாப்போல, பெண்பெற்ற எங்களுக்கு . . காலம் வெகுவாக மாறிப்போயிருந்தும்..எப்பொழுதும் மனமென்னும் மாடு கல்யாண நினைவென்னும் செக்கையே சுற்றிச் சுற்றி வருகிறது. (மாப்பிள்ளை வீட்டார் கோரும் 'செக்' அல்ல இது) பத்திரிகைகளைப் படிக்க ஒரு ஆவலோ, நேரமோ அவற்றை வாங்க வசதியோ இல்லாமல் போகிறது. தாங்கள் 'சா(ஜா)தகச் சாஸரம்' என்ற ஒரு பகுதியை ஆரம்பித்தால் சாதகமாகும். சந்தாதார்களின் குமாரத்திகள்—குமாரர்களின் ஜாதகங்களை இதழுக்கு மூன்று நான்கு வெளியிடுவது பலன் மிகுந்த பணி. இப்படிக் குதிரும் கல்யாணங்களில் பெண்ணைப் பெற்றவர்கள் நன்றியுணர்ச்சியுடன் 'பழைய சோறு'க்கு சக்திக்குத் தகுந்தாப்போல் . . குறைந்த பட்சம் இரண்டு ஆண்டு . . சந்தா கட்டலாம்."

தமிழ் மொழியைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து சுவை காணும் ஒரு அன்பர் உவந்து சொன்ன ஆலோசனை:

"எங்கள் 'பழைய சோறு' ஒரு இலக்கியப் பகுதியைத் தாங்கி வரவேண்டும். ஆனால், இது புளித்துப் போனதாக இருக்கக்கூடாது. பழைய மதுவை புதிய கோப்பையில் ஊற்றிக் கொடுக்கும் உத்திகளும் வேண்டாம், புதுமைக்குக் கடலேபோல் வானம்போல் எல்லை விரிந்திருக்க, புன்மை எதற்காக? 'தமிழ் இலக்கியத்தில் சுவை மிகுந்த பகுதிகள்' என்ற தலைப்பில் நானே இத் தொடரை எழுத முன்வருகிறேன். மாளாமல் எழுதலாம். மறுபடியும் மறுபடியும் தேனையும், பாலையும், கன்னலையுமே சாப்பிடவேண்டாம், தமிழென்றதும். நல்ல மோர்க் குழம்பே சாப்பிடலாம், வாருங்கள். நற்றிணையில் ஒரு பாடல். இதில் தலைவி தலைவனுக்கு மோர்க் குழம்பு பரிமாறுகிறாள். கெட்டித் தயிர் கடைந்து செய்ததால், கையில் ஒட்டிக்கொண்டு மணம் வீசுகிறது. இந்தப் பாடலில் இதுவரை எல்லோரும் தலைவன்—தலைவியின் நேயத்தைப் பற்றியே கூறியிருக்கின்றனர். இது மண்ணுலகில் கால் பாவாத, மக்கள் வாழ்வுக் கெட்டாத ரசனை. நாம் அந்த மோர்க் குழம்பின் சுவையை நுகர்வோமே, அது போலவே, வீமன் பகாசுரனுக்காக ஓட்டிச்சென்ற உணவு வண்டியில் என்னென்ன தின்பண்டங்கள் இருந்தன என்று ஆராயலாம். இதிலிருந்து சமையற் திறனில் அந்நாள் மக்கள் பெற்றிருந்த நுண்ணிய புலமை புலப்படுவதை விளக்கலாம். மீண்டும் மீண்டும் வீமனின் வீரத்தையே கூறுவானேன்?

'வீமன் ஒரு வண்டி உணவை ஜீரணித்தான்; நீங்களும் ஜீரணத்தை

சுலபமாக்க எங்கள்—மாத்திரையை உட்கொள்ளுங்கள்' என்று விளம்பரக்காரர்கள் காட்டும் புதுமையைக்கூட நாம் இலக்கியத்தில் புகுத்தவேண்டாமா?"

மேடைக் கலை அபிமானியின் கருத்து:—

"ஜனநாயக அரசியலமைப்பில் வாக்கு வன்மையின் சக்தியைச் சொல்லித் தீர முடியாது. எனவே சொற்பொழிவாற்றும் திறனை வளர்க்க நமது 'பழைய சோறு' இதழுக்கு இரண்டு பக்கங்களேனும் ஒதுக்கவேண்டும்.

தவிர, சமூகப் பிரமுகர்கள் பலரும் பல விழாக்களுக்குத் தலைமை வகிக்க நேருகிறது. அந்த சந்தர்ப்பங்களில் நாலு வார்த்தை பேச அவர்கள் நடுநடுங்கி, நாக்குழறுவது நகைப்பூட்டுகிறது. ஒரு பயிற்சிப் பகுதிபோல 'பழைய சோறு' இந்த அம்சத்தை அமைக்கலாம். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கான மாதிரிப் பிரசங்கங்களை வெளியிடலாம். உதாரணமாக, இலக்கிய விழாக்களில் தலைமையுரைக்கு இப்படி ஒரு பேச்சு அமையலாம். (கோடிட்ட இடங்களில் நூலாசிரியர், நூற்பெயரைத் தகுந்தாற்போல இட்டு நிரப்பிக் கொண்டு, பரிமேலழகர் விழா முதல் பன்னூன் அழகர் விழாவரை எதற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். நூலைப் படிக்கவேண்டியதில்லை என்பதைக் கூறவும் வேண்டுமோ!):—

வாழ்க்கை ஒரு ஆலயமென்றால்... அதன் கோபுரவாயில். வாழ்க்கை ஒரு பூஞ்சோலை என்றால்...அங்கு மணம் வீசும் ஜாதி மல்லிகை. வாழ்க்கை ஒரு கடலென்றால்..அதைக் கடக்க உதவும் கப்பல். (மேலேயுள்ள கோடுகளில் நூற்பெயரைச் சேர்த்துக்கொள்க.)

...நமது நண்பன், நல்லாசான், வழிகாட்டி...புகழோடு தோன்றிய பெருமகன். ...நமது கலை மரபில் (அல்லது மரத்தில்) கனிந்த பழம், (மேலே உள்ள கோடுகளில் நூலாசிரியர் அமரட்டும்)

சிறு கதைகள் எழுத நேயர்களுக்குப் பயிற்சியளிக்கும் பகுதியொன்று சேர்க்கவேண்டி ஒரு முன்னாள் எழுத்தாளர் ஆலோசனை கூறினார், உதாரணமாக, சில அப்பியாஸங்களையும் அனுப்பியிருந்தார். அவற்றுள் ஒன்று வருமாறு:-

"உணர்ச்சி மேலோங்கி அவன் தொண்டையை அடைத்தது. கண்களில் அரும்புகள் துளிர்த்தன. நாத் தழுதழுத்தது"...

இந்த வாக்கியங்களை முடிவில் அமைத்து, ஒரு கதை எழுதுக. அதற்குத் தலைப்பு என்ன கொடுக்கலாம்? ஒரு நிபந்தனை. 'மனித தெய்வம்' என்னும் தலைப்பு கூடாது.

தமிழிலக்கணப் பாதையும், காதல் பாதையைப்போலவே கரடு முரடானது என்ற எண்ணம் பரவியிருப்பதைக் கண்டு வருந்தும் ஒரு தமிழாசிரியர் யோசனை:—



" 'இலக்கண இன்பம்' என்ற தலைப்பில் நமது பத்திரிகையில் ஒரு பகுதி அமைத்தல் அவசியம் என்று கூறவும் வேண்டுங்கொல்! இதனைச் சிறுவர்களும் சுவைத்துக் கற்க சிறு சிறு பாடல் வடிவில் விதிகளையும் விளக்கங்களையும் கூறுவோமாக! உதாரணம்:

நாவிற்குச் சுவை வடுமாங்காய்
பாவிற்குச் சுவை தேமாங்காய்
அர்த்தம் கெட்டது வசைச்சொல்
அர்த்தம் அற்றது அசைச்சொல்

இதுபோலவே அணிகளையும் விளக்கலாம்:

அப்பா போடுவது கோட்டு
அக்கா பாடுவது பாட்டு

இதில் அப்பா போடும் கிழிசலைக் கோட்டு எனக் குறித்தும் அக்கா போடும் கூச்சலைப் பாட்டெனச் சொன்னதும் உயர்வு நவிற்சி அணிக்கு எடுத்துக் காட்டுகள்.

ஒரு கவிதை அனுதாபியின் கடிதம்:-

"விசேஷ தினங்களிலேயே கவிதைகள் வெளியிடுவது பத்திரிகைகளின் பழக்கமாகிவிட்டது. எனவே, கவிஞர்களுக்கு உதவியாக ஒரு காலண்டர் தொகுத்து அனுப்பியுள்ளேன். விவரம்:

ஜனவரி – பொங்கல், குடியரசு தினம், ஸர்வோதய தினம்.

ஏப்ரல் – தமிழ்ப் புத்தாண்டு.

ஆகஸ்ட் – சுதந்திர தினம்.

அக்டோபர் – காந்திஜி ஜன்ம தினம், தீபாவளி (இது சில ஆண்டுகள் நவம்பரிலும் வரும்).

நவம்பர் – நேருஜி ஜன்ம தினம்.

ஒரு சைத்ரிகர் 'இலக்கிய பரமபத சோபான படம்' ஒன்று அனுப்பிவைத்தார். ஏணி வந்தால் ஏற்றம்; பாம்பு வந்தால் வீழ்ச்சி. 'ஆசிரியர் வீட்டுக்குச் சென்று அளவளாவுதல்' கட்டத்தில் ஏணி துவங்கி, 'அடுத்தடுத்து பிரசுரம்' கட்டத்தில் நின்றது. 'பணம் கேட்டு நினைவுக் கடித'த்தில் பாம்பின் வாய் துவங்கி, 'பாராமுகம்; நிராகரிப்பு' கட்டத்தில் வால் வளைந்து நின்றது. இதுபோல் பல கட்டங்கள்.

★ ★ ★

இத்தனை புதிய அம்சங்களையும் சுமந்து வந்த "பழைய சோறு" கற்சட்டி 1, கரண்டி 1–ஐக் கண்டதும் எழுத்தாளர் 'கஜினி'க்குக் கோபம் மூண்டது. ஆம். முதல் கரண்டியில் அவரது கதை வரவில்லை. உடனே அவர் பேனாவைக் குத்தகைக் குழம்பில் தோய்த்து எழுதிய கடிதம். (அவர் மனைவி அன்று வைத்திருந்த வற்றல் குழம்பிலேயே தோய்த்து எழுதியிருக்கலாம்.)

"பேரன்பு திகழும் ஆசிரியருக்கு,

வணக்கம். வியத்தகு பல புது அம்சங்கள் பொலியும் தங்கள் பத்திரிகையைப் பார்த்தேன். அதில் ஆசிச் செய்தி ஒன்றில் 'கூர்மையும் தாய்மையும் நிறைந்த முறையில் தங்கள் பத்திரிகை பணியாற்றட்டும்' என்று கண்டேன். 'நேர்மையும் தாய்மையும்' என்றுதான் அசல் செய்தியில் இருக்கும் என ஊகிக்கிறேன். எனவே, புதுப்புது அம்சமாக அடுத்த இதழ் முதல் 'பிழை திருத்தம்' பகுதியொன்று சேர்த்துக்கொள்ளுங்கள்.

தங்கள்,
'கஜினி'"

★

ஆரம்பத்தில் கூறிய நாகர்கோவில் நியூஸ் ஏஜண்ட் வேணுகோபால் எழுதிய கடிதம்:–

"ஐயா,

தங்கள் பத்திரிகை வந்தது. எதற்காக என் பெயர் விலாசத்தை 'வேணுகோல், நாகர்கோவில்' என்று போட்டிருக்கிறீர்கள். என் பெயர் விஷயத்தில் நான் கண்டிப்பான பேர்வழி. இதை யாரும் 'வேணு' என்றுகூட சிதைப்பதை நான் அனுமதிப்பதில்லை. அடுத்த இதழில் கொட்டை எழுத்தில் ஆரம்பப் பக்கங்களில் ஒன்றில் சரியானபடி பெயர் விலாசம் போடாவிட்டால், பொல்லாதவனாக இருப்பேன்.

அடுத்த இதழிலேனும் ச ('த' என்று போட்டுவிடாதீர்கள்) ரித்திரத் தொடர் கதை துவங்குமா?

தங்கள்,
வேணுகோபால், நாகர்கோவில்."

★ ★ ★

இரண்டாவது காண்டியை (இதழை)ப் பார்த்ததும் நியூஸ் ஏஜண்ட் வேணுகோபால் எழுதிய கடிதம்:

"ஐயா,

நான் தோற்றுவிட்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். முதல் பக்கத்தில், பெரிய எழுத்தில்,

'நமது ஏஜண்ட்
வேணுகோல்,
நாகர்கோல்.'

என்று என்ன துணிச்சலாகப் போட்டிருக்கிறீர்கள். என் பெயரில் விட்டுப்போன 'பா'வையும், என் ஊர் பெயரில் விட்டுப்போன 'வி'யையும் சேர்த்து தங்களுக்கு 'பாவி' என்ற பாராட்டுரை வழங்குகிறேன். ஏஜன்ஸியை ரத்து செய்யவும்.

—வேணுகோபால்."

★ ★ ★

'பழைய சோறு' மூன்றும் காண்டி. 'இன்னும் வரக் காணோமே!' மூர்மார்க்கெட்டில் போய்ப் பார்க்கலாமா?

குடித்தனக் குறிப்புகள்

★

(ஜனககுமாரி)

நம் நாட்டில் சாம்பிராணி தூபம் போடுவது பண்டைய காலம் முதல் வழங்கி வருகிறது. நம் பெரியோர்கள் கர்ப்பூர தூபதீப ஆராதனையைச் செய்துவருவதை சாஸ்திர யுக்தமாகப் பார்ப்போமானால் வைசூரி, விஷசுரம், வாந்திபேதி முதலியவைகளுக்குக் காரணமாய் இருக்கிற விஷக்கிருமிகள் இப்புகை பட்ட மாத்திரத்தில் ஒழிந்து போகின்றன. மேல் நாடுகளில் நோயாளிகளின் அறையில் சர்க்கரையை நெருப்பின்பேரில் எரித்துப் புகையை உண்டாக்குகிறார்கள். டிரில்பெர்ட் என்பவர் இதை ஆராய்ச்சி செய்து பார்த்தார். சர்க்கரைப் புகையில் எப். ஏ. ஹெச். (**Formise Acetylene Hydrogen**) என்னும் வாயு உண்டாகிறது. இக்காற்றில் சிற்றணுக்கள் வாழ்வதில்லை. பாஸ்டர் ஆராய்ச்சிசாலையிலே 5 கிராம் சர்க்கரையை 10 குவார்ட் பிடிக்கும் ஜாடியை தலைகீழாய்ப் பிடித்து எரித்து அது குளிர்ந்த பிறகு, விஷபேதி, விஷசுரம், க்ஷயம் முதலியவைகட்கு காரணமாயுள்ள விஷ அணுக்களைத் தனித்தனியாய் கண்ணாடிக் குழாயில் வைத்துப்பார்க்க, இருபது நிமிஷங்களில் அவைகள் மடிந்து போயிற்றும். நாற்றமெடுக்கும் இடங்களில் சர்க்கரைப் புகை போட்டுப் பார்த்ததில் துர்நாற்றம் உடனே அற்றுப்போகிறது. நோயாளிகள் அறையில் சர்க்கரைப் புகையிடுவது மிகவும் நல்லது.

சுவருக்கு நீலம்

வெய்யில் அடிக்கும்போது நம் கூடத்து எதிர்ப்புறமுள்ள வெள்ளை அடித்த சுவர்களைக் கண்ணால் பார்க்கவே முடியாது. வெய்யிலின் உக்கிரத்தால் கண் தெறித்து விடும்போல இருக்கும். கண் குளிர்ச்சியாக இருப்பதற்குக் காயும் வெய்யிலில் உள்ள சுவர்களுக்குச் சிலர் நீல நிறம் பூசுவார்கள். அதிக விலை கொடுத்து நீலப் பவுடர் வாங்கிப் பூசுவதை விட செலவில்லாமல் சுவருக்கு நீலம் பூசலாம். தேங்காய் ஓட்டை (கொட்டாங்கச்சி) பதமாகச் சுட்டுக் கரியாக்கிச் சுண்ணாம்பில் நன்றாகக் கலந்துவிடுங்கள். நீங்கள் விரும்பியபடி நீல நிறம் உண்டாகிறது.

விளக்கு பிரகாசிக்க!

விளக்கு பிரகாசமாக எரிய வேண்டுமானால், கிரோசின் எண்ணெயில் கொஞ்சம் சாதாரண உப்பும், கர்ப்பூரம் அதே அளவும் (சமனெடை) பொடி செய்து கலந்துவிடவேண்டியது. எப்படிப்பட்ட மட்டரகத்தில் எண்ணெயாயிருந்தாலும், துர்க்கந்தமான நாற்றத்தை மாற்றிச் சிம்னியில் புகையேறாமல் அதிகப் பிரகாசமான ஒளியைத் தருகிறது.

விளக்கு கெடாதிருக்க!

மாதத்திற்கொருமுறை மண்ணெண்ணெய் விட்டிருக்கும் அடிப்பாத்திரத்தையும், பர்னரையும் சோடா கலந்த தண்ணீர் விட்டுச் சற்று நேரம் கொதிக்கவைக்கவேண்டும். பின்பு அவைகளை எடுத்து நன்றாய்த் துடைத்து வெய்யிலில் காயவைக்கவேண்டியது.

விளக்கை அணைத்தவுடனே வர்த்தியைச் சற்று உள்ளுக்கிழுக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் எண்ணெய் பர்னருக்குள் கசிந்துகொண்டிருக்கும். மறு நாள் விளக்கேற்றின பிறகு எண்ணெய் வாசனை வரும்போது நம்மால் சகிக்கக்கூடாத நெடியாக இருக்கும்.

காப்பி கெட்டில்

காப்பி கெட்டில் அல்லது பில்டர் கசந்துபோய்விடுகிறதல்லவா? அதற்கு செங்கற் பொடியைப் போட்டு தேய்த்துக் கையெல்லாம் தேய்ந்து அவதிப்படுவார்கள்! நான்கு ஸ்பூன் சோடா உப்பை கெட்டிலில் போட்டு, குளிர்ந்த தண்ணீரை நிரப்பி அடுப்பிலேற்றி, நிதானமாகக் கொதிக்கவையுங்கள். வெந்நீரால் பல முறை அலம்பிவிடுங்கள். காபி போட்டுக் குடித்துப்பாருங்கள். பிறகு நீங்களே வாரம் ஒரு முறை இந்த சிகிச்சையைச் செய்யத் தவறமாட்டீர்கள்!

அம்மைத் தழும்பு அகல!

வைசூரி போட்டு முகமெல்லாம் தழும்புகளால் விகாரமாயிருக்கிறதே என்று அங்கலாய்த்துக்கொள்வார்கள்! வெளிச்சத்தில் அவர்கள் அதிகமாகப் போகக் கூடாது. தழும்புகள் மீது நெற்றிக்கு இட்டுக்கொள்ளும் சாந்தை குழைத்து பொட்டு பொட்டாகவைத்து நாள் முழுவதும் சூரிய வெளிச்சம் தழும்புகள் மீது படாது தடுக்கவேண்டும். பசலைக் கீரையை நன்றாக அலம்பிவிட்டு ஜலம் விடாமல் அரைத்து, வெண்ணெயில் குழைத்து இரவில் தடவிவரவேண்டும். ஒரே மாதத்தில் அம்மைத் தழும்புகள் மாயமாக மறையும்!

தலைப்பொடுகு நீங்க !

பித்த மிகுதியால் தலையில் பொடுகு வந்து சகோதரிகள் சதா கஷ்டப்படுகிறார்கள். இதை மிகவும் எளிதில் போக்கிவிடலாமே! மருவு இதழ்களைப் போட்டு நல்லெண்ணெயை நன்றாகக் காய்ச்சி இறக்கிவைத்து, ஒரு மூடி எலுமிச்சம் பழ ரசத்தைப் பிழிந்து மயிர்க்கால்கள் இடுக்குகளில் ததும்பத்தடவி, அரை மணி நேரம் ஊறவேண்டும். மொடக்கத்தான் கீரையை கல்லுரலில் 'கொட கொட'வென்று அரைத்து சீயக்காய் தேய்ப்பதுபோல் தலையிலுள்ள எண்ணெயைத் தேய்த்துக் கசக்கவேண்டும். மூன்று நாட்கள் இவ்விதம் தொடர்ந்து செய்தால் வருடக்கணக்காய் பொடுகுத் தொல்லையால் அவதிப்பட்டதிலிருந்து விடுபட்டு சுகமடையலாம்!

★

மோக முள்

தி. ஜானகிராமன்

"படே வித்வான்...இவர் கேட்கட்டும்" என்று காதில் கைவைத்து ஜாடை காட்டி, ரங்கண்ணா ராமுவை மறுபடியும் அறிமுகப்படுத்தினார். "என்னடா சிரிக்கிறே பாபு, நான் பேசற பாஷை சரியாயில்லியா?"

வடக்கத்திப் பாடகன் மறுபடியும் ராமுவுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் பாட ஆரம்பித்தான். மந்த்ர பஞ்சமத்தில் ஒரு நிமிஷம் நின்றுவிட்டு, கீழே இறங்கி மந்த்ர ஷட்ஜத்திலும் ஒரு நிமிஷம் நின்று ராகச் சாயைக் காண்பித்ததைக் கேட்டு ராமுவின் அலட்சியப் புன்சிரிப்பு உதட்டுக்குள் ஒளிந்துகொண்டது.

"இது என்னடா சாரீரம்! அதள பாதாளங்களெல்லாம் போறது! மேலே போனா, சத்யலோகம் எல்லாம் போறது! த்ரிவிக்ரமாவதாரத்திலே, பகவானுடைய தலை எங்கிருக்குன்னு தெரிஞ்சுக்க முடியலியாம் சிவப்பிரம்மாதிகளாலே. இவன் போய் எட்டிப்பிடுவான் போலிருக்கே!" என்று கண் அகல வியந்தார் ரங்கண்ணா.

பதினைந்து நிமிஷம் மீண்டும் பாடி நிறுத்தினான் அவன்.

"சாரீரம் எப்படியிருக்கு பார்த்தியா ராமு?"

"அவாள்ளாம் கொடுத்துவச்சவா அண்ணா" என்று பதில் கொடுத்தார் ராமு.

"கொடுத்துவக்யவாவது? அப்படிப் பாடுபட்டிருக்கான். பட்டபாட்டுக்குப் பலன் கிடைச்சிருக்கு."

ராமுவுக்கு முக்கால் கட்டைக்கு மேல் சாரீரம் எழும்பாது. சற்று அசைப்பில் கேட்டால் காக்காய்கள் ஒன்றின் மூக்கில் இன்னொன்று மூக்கைவிட்டுக் குழலும் போது கேட்கும் தொனி மாதிரி இருக்கும். ஆனால் அதை ஒரு தினுசாகப் பக்குவப்படுத்தி, தன் ஞானபலத்தினால் ஒப்பேற்றி, ஜனங்களின் காதுக்கு அதை பழக்கப்படுத்திப் பேரடைந்தவர் ராமு. பத்திரிகைக்காரர்களையும் பலவாறாக அண்டி, இதுதான் உயர்ந்த சங்கீதம் என்று அவர்களில் சிலர் எழுதி, ஜனங்கள் அதை ஏற்று ஒரு மாதிரியாக உச்சஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டவர்.

"எழுபது வருஷமா நான் சங்கீதம் கேக்கறேன். சங்கீதத்தைப் பத்தி தியானம் பண்றேன். சிந்தனை பண்றேன். ஏதோ பகவான் க்ருபையினாலே அந்த சமுத்ரத்திலே கொஞ்சம் காலையும் நனைச்சிண்டு நிக்கறேன். ஆனா இந்த மாதிரி சாரீரத்தை நான் கேட்டதில்லை ராமு. இது பரம ஆச்சரியமான சாரீரம்."

அவர்கள் யாத்திரைக்கு வந்ததைப் பற்றியும் கோயில் கண்ட இடங்களில் உள்ளே சென்று அவர்கள் பாடுவதையும் ஷண்முகத்தினிடம் தெரிந்து கொண்டதை மீண்டும் சொன்னார் ரங்கண்ணா.

அதைத் தவிர மேலே ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் பேசுகிற பாஷை புரியவில்லை.

"ஆளைப் பாத்தா காக்கா புடிக்கிற மாதிரி இருக்கான். கந்தர்வனைப் பொழிகாரனே...ம்!" என்று அவனையே பார்த்தார் ரங்கண்ணா.

"உங்க குரு யார்?" என்று ஜாடை செய்து கேட்டார் ராமு.

"விச்வம்பர் கானே."

"கானேயா...? கேள்விப்பட்டதில்லியே....அப்படி பெரிய இடத்து சிஷ்யன் இல்லே போலிருக்குண்ணா."

"எதாயிருந்தா என்ன? சாரீரம் மர்மாவை எல்லாம் சிலிர்க்க அடிக்கிறது. கேக்கறபோதே மயிர்க்கூச்செறியறது. அமிர்தத்தாலே காது, உடம்பு, மனசு, ஆத்மா எல்லாத்தையும் நனைச்சுப்பிடறான். எந்த இடத்து சிஷ்யனாயிருந்தா என்ன? பெரிய இடத்து சிஷ்யாளுக்கெல்லாம் சாரீரம் வாய்ச்சுப்பிட்டுதா என்ன? பெரிய இடம்னு நாலு பேர் தூக்கிவச்சா பெரிய இடம்" என்றார் ரங்கண்ணா.

ராமு புன்சிரிப்பு பூத்தார். சற்றுக் கழித்து, "இவ்வளவு சாரீரம் இருக்கே, ஆனா அவா சங்கீதம் என்ன இருந்தாலும் நம்ம சங்கீதம் மாதிரி வருமா அண்ணா?" என்றார்.

"அதைக் கேட்டுப் பழகினா அது நன்னாயிருக்கும். கழுதையைப் போய்க் கேட்டா, கழுதை கத்தறதுதான் ரசம்னு சொல்லும். வெள்ளைக்காரனுக்கு நம்ம சங்கீதம் புரியுமோ? அதுமாதிரி இது நமக்கு என்னமோ போலிருக்கு. அதிலே ஊடாடினாத்தான் அதிலே இருக்கற அழகு தெரியும். நமக்கு நம்ம சங்கீதம் தானே தெரியும்."

"அது வாஸ்தவம் தாண்ணா..ம். உடம்பு ரொம்ப இளைப்பா இருக்கே?" என்று பேச்சை வேறு திசைக்குக் கொண்டு போனார் ராமு. பாபுவுக்கு வியப்பாகத்தானிருந்தது.

"இளைப்பு என்ன? இனிமே இப்படிப் போக வேண்டியதுதானே. வயசு என்ன கொஞ்சமா ஆச்சா?"

"அப்படி சொல்லலாமாண்ணா? உடம்பைப் பாத்துக்கணும்."

"உடம்பு, உடம்புன்னுதான் பிறந்ததே புடிச்சு நான் வேற பாத்துக்கறேன். கண்ணாடியிலே வேற பாத்துக்கறேன். பாத்துக்கறதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே... அது சரி, உன் கதையைச் சொல்லு. பட்டணம் சௌகர்யமா இருக்கோல்லியோ?..."

"இருக்குண்ணா, எல்லாம் அண்ணா எழுதினது தானேண்ணா."

"ஆமாம். நான் எழுதினேன்! காக்காய் உக்காந்துது. பனம் பழம் விழுந்தது.. அவனவனுக்கு புத்தியில்லியா, மேதையில்லியா? உன்னைப்பத்திப் பேபர்லெல்லாம் வரது. பாத்திண்டிருக்கேன்.."

ராமு குனிந்துகொண்டார்.

இரண்டு நிமிஷம் இருந்துவிட்டு "வரேண்ணா, சாவகாசமா வந்து பார்க்கறேன்", என்று எழுந்து கொள்ள வாயெடுத்தார் ராமு.

"எங்கே தங்கியிருக்கே?"

"இவா நம்ம சிநேகிதா. எக்ஸ்டென்ஷன்லே இருக்கா. அவாளோட தங்கி இருக்கேன்" என்று அவர்களை அறிமுகப்படுத்திவிட்டு, "ரண்டு நாள் இருப்பேண்ணா. செவ்வாய்க்கிழமைதான் போப்போறேன். வரேன் சாவகாசமா" என்று சொல்லிக்கொண்டு கிளம்பினார் ராமு. எழுந்து கூடத்திலிருந்த கிழவிக்கும் நமஸ்காரம் செய்து, ஒரு நிமிஷம் பேசிவிட்டுக் கிளம்பி, மீண்டும் ரங்கண்ணாவிடம் சொல்லிக்கொண்டு காரில் போய் ஏறினார் அவர். கார் நகர்ந்தது.

"மோட்டார்லே வந்திருந்தானே ராமு?" என்று கேட்டவாறே கிழவி எழுந்து வந்தாள்.

"ஆமாம். மோட்டார்லேதான்."

"அவன் மோட்டார்லே வந்தா என்ன? புஷ்பக விமானத்திலே வந்தா என்ன? அண்ணா ஆறு குடகாரங்களுக்கு மேலே போறமாட்டார்னு புள்ளி போட்டிருக்கானே. நல்ல சமத்து" என்று அண்ணாவின் முன் இருந்த அரை டஜன் குடகாரங்களைப் பார்த்தாள் கிழவி.

"சாவகாசமா வரேன்னு போயிருக்காண்டி. அப்ப குருதட்சிணை ரண்டு டஜனாயிடும். உரிச்சுத் திங்கலாம். கவலைப்படாதே" என்று சிரித்துக்

தொடர் நாவல்

கொண்டே பாபுவைப் பார்த்தார் ரங்கண்ணு.

"சாவகாசம் ஏது அவனுக்கு? அவன் இப்பவாவது வந்து தலையைக் காட்டிவிட்டுப் போனானே."

கிழவி கொடுத்த 'டீ'யையும் வாழைப் பழங்களையும் சாப்பிட்டுவிட்டு வடக்கத்தியார்கள் விடைபெற்றுக்கொண்டார்கள். கூடவே பாபு எழுந்தான்

"நானும் போய்ட்டு வரேண்ணு. எனக்குத் தெரிஞ்சவா இந்த பாஷை பேசறவா இருக்கா. அங்கே அழச்சிண்டு போய் இவா யாரு என்னன்னு எல்லாம் தெரிஞ்சுக்கறேன்."

"அதுவும் நல்லதுதான் போய்ட்டு வா", என்றார் ரங்கண்ணு.

அவலையும் புஷ்பங்களையும் எடுத்துக்கொண்டு கிளம்பினான் பாபு.

ஃ ஃ ஃ

குளிர்கால முன்னிருள் கவிந்துவிட்டது. பெரிய கடைத் தெரு வழியாக அவர்களை அழைத்துக்கொண்டு வந்தான் பாபு. ஜவுளிச் சரக்குகளுக்குப் பஞ்சம். கூட்டத்திற்கு மட்டும் பஞ்சமில்லை. தீபாவளிக்கு எப்படியாவது புதிது வாங்கிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு, சிமிணி விளக்குகளைக் காகிதம் போட்டு இருட்டடித்து, தெருவில் கடை பரப்பியிருந்த நாட்டு வேஷ்டிக்காரர்கள் முன் கும்பல் கும்பலாக ஜனங்கள் சலசலத்துக்கொண்டிருந்தார்கள். நாட்டு வாணங்களுக்கும் மத்தாப்புகளுக்கும் பஞ்சமில்லாமல் கூட்டம் முண்டி அடித்துக்கொண்டிருந்தது.

மராட்டியர்கள் தமக்குத் தெரியாத ஹிந்தி பாஷையில் பாபுவை எதையோ கேட்க, அவனும் எதையோ சொல்லிக்கொண்டு வந்தான். அவர்களும் விழித்துவிட்டு, புரிகிறாற்போலவும், புரியாதது போலவும் முகத்தை வைத்துக்கொண்டு பராக்கு பார்த்துக்கொண்டே வந்தார்கள்.

யமுனா வீட்டின் திண்ணையருகே அவர்களை நிற்கவைத்துவிட்டு அவன் நடையுள் புகவும், யமுனா காலோசை கேட்டு வெளியே வரவும் சரியாக இருந்தது.

"பாபு வா..வா." என்று வாசலில் நின்றவர்களைப் பார்த்தாள் யமுனா.

"உங்காளவர்கள்தான். எதோ புனாப் பக்கமாம், பாடகர்களாம். யாத்திரை செய்கிறவர்களாம். அழச்சிண்டு வந்திருக்கேன். பாஷை தெரியலே. நீதான் கேட்டுச் சொல்லணும்."

"உள்ளே கூப்பிடேன்", என்று சொல்லிவிட்டு கம்பளத்தைக் கூடத்தில் விரித்தாள் யமுனா.

எல்லோரும் உட்கார்ந்தார்கள். கம்பளம் வெதவெதவென்று குளிருக்கு இதமாகத்தானிருந்தது.

"பாட்டு வாத்யார் வீட்டிலே இவர் பாடினார். இவர் பிள்ளையாம் இந்தப் பையன். நான் இந்த மாதிரி பாட்டையே கேட்டதில்லே, யமுனா, நான்தான் கேட்கலேன்னு நினைச்சண்டிருந்தேன். எங்க வாத்யாருக்கு எண்பது வயசாகப் போறது. அவரும் கேட்டதேயில்லே இந்த மாதிரி சாரீரத்தைன்னு சொன்னார். பரவசமாப் போய்ட்டார் அவர்.

இவா யாரு, யாரு கிட்ட சொல்லிண்டா, எப்படி சொல்லிண்டா, எல்லாம் தெரிஞ்சுக்கணும். அதான் இங்கே அழச்சிண்டு வந்தேன்", என்றான் பாபு.

பார்வதி வந்திருந்தவர்களிடம் என்னமோ சொல்லிவிட்டு உள்ளே போனாள். யமுனா பேச ஆரம்பித்தபோது பாபுவுக்கு கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. அவள் சொல்வதைக் கேட்டு அவர்கள் சிரிக்கிறார்கள். பதிலைக் கேட்டு அவள் சிரிக்கிறாள். 'ச'வும் 'ண'வும் 'ள'வும் அந்த பாஷையில் அதிகம் என்ற ஒன்றைத் தவிர ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. யமுனா ஒரே ஹாஸ்யமாகப் பொழிகிறாள் போலிருக்கிறது. அவர்கள் சிரித்த சிரிப்பில் அப்படித்தான் தோன்றுகிறது!

கால்மணி ஆயிற்று. பார்வதியும் எல்லோருக்கும் டீயை வைத்துவிட்டு அந்த சிரிப்பில் சேர்ந்துகொண்டாள்.

"என்ன யமுனா, நீயே பேசிண்டேயிருந்தா? நீ சிரிக்கிறே. அவா சிரிக்கிறா."

"நீயும் புரிஞ்சாப்பல சிரியேன்."

"தஞ்சாவூரிலே மராத்தியிலே ஒருத்தர் காலட்சேபம் பண்ணினார். எல்லாரும் சிரிக்கிறபோது, நானும் சிரிப்பேன். அப்ப வேடிக்கையாயிருந்தது. அது மாதிரி சிரிக்கணும் போலிருக்கு இப்பவும்".

"சிரியேன்.".

"இவா யாராம்?"

"இவங்க சாதாரண பாடகங்கதானாம். முதல் க்ளாஸ்கூட இல்லியாம். ரண்டாவது க்ளாஸ்னுதான் சொல்லணுமாம். யாத்திரை போறாங்களாம். கொஞ்சம் சொத்து இருக்காம்."

"இ வ் வ ள வு தா னா? எதுக்காக சிரிச்சே?"

"என் மராட்டியைப் பாத்து இவங்களுக்கு அந்த வார்த்தைகள் எந்த வார்த்தையாயிருக்கலாம்னு கண்டுபிடிச்சு அப்புறம் புரிஞ்சுக்க வேண்டியிருக்கு. அதான் சிரிக்கிறோம்."

"தேவலையே!"

"இன்னொரு பாஷையைக் கேட்டாலே சிரிப்பு வரும். நம்ம பாஷையே இன்னொரு பாஷை மாதிரி இருந்துதுன்னா கேக்கணுமா?" என்றாள் யமுனா.

பாபு சிரித்துவிட்டு, "எனக்கு எல்லாம் ஒண்ணுத்தான் இருக்கு...இவா பாட்டு ஒண்ணைத் தவிர ஒண்ணும் புரியலே."

யமுனா மேலும் சில விவரங்களைச் சொன்னாள். அவர்கள் மகாராஷ்டிரப் பிராந்தியத்தில் மங்கள்வாடி என்ற சிறு ஊரைச் சேர்ந்தவர்கள். டோண்டிலிருந்து மண்மாடுக்குப் போகும் ரயில் பாதையில், நடுவில் ஒரு சிறு ஸ்டேஷனில் இறங்கி மூன்று மைல் நடந்து பஸ் ஏறி, மறுபடியும் இருபது மைல் போக வேண்டுமாம் அந்த ஊருக்கு. கூடப் பாடுகிறவன் பிள்ளை. மற்ற இருவரும் சீடர்கள். நாலைந்து வருஷமாகச் சொல்லிக்

தமாஷ் தம்பதி

★

"என்ன, முதல் முதலா ஆகஸ்டு சுதந்திரம் கொண்டாடியது எந்த வருஷம்?"

"1947-ல்."

"அதை எப்படி இவ்வளவு கரெக்டாக ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"அதுவா, இந்தியாவுக்கு அந்த வருஷம் தான் சுதந்திரம் வந்தது. எனக்கு அந்த வருஷம்தான் சுதந்திரம் பறிபோனது ...அந்த வருஷம் தானே நம்ப கல்யாணம் நடந்தது?"

கொள்கிறார்களாம். குரல் பயிற்சி இன்னும் போதாததால் அவர்களைப்பாட அனுமதிப்பதில்லை அவர். அவர் பையனுக்குக் கூட அவ்வளவு தேறிய பயிற்சி என்று சொல்லமுடியாதாம். ஆனால் ஏழு வயதிலிருந்து சொல்லிக்கொள்கிறானாம். கற்றுக்கொள்ள ஆரம்பித்த நாளிலிருந்து குரல் பயிற்சி செய்கிறான் அவன். போனால் போகிறது என்று அவனைப் பாட அனுமதித்திருக்கிறார் அவர். பாபுவுக்கு வேடிக்கையாக இருந்தது. அந்தப் பையன் பேசும்போது சின்னக் குரலாக மிருதுவாக இருந்தது. பாடக் கிளம்பினால் குரல் விச்வரூபம் எடுத்தது போல பருமன் கொண்டு இனிமையில் தோய்ந்து கம்பீரமாகப் பொழிந்தது. அண்டாத ஆழத்திலும் எட்டாத உயரத்திலும் ஆயாசமில்லாமல் திரிந்தது.

"விச்வம்பர் கானேயைப்பற்றி இங்கு யாரும் கேள்விப்பட்டதேயில்லையே. ஏன்?" என்று கேட்டான் பாபு. யமுனா கேள்வியையும் பதிலையும் மொழிபெயர்த்துக்கொண்டே வந்தாள்.

"எதற்காகக் கேள்விப்பட வேண்டும் நீங்கள்?"

"இல்லை. பெரிய வித்வான்கள் சிலரின் பேர் இங்கெல்லாம் தெரிந்திருக்கிறதே என்று கேட்டேன்."

"இங்கே பேர் தெரிந்துவிட்டால் பெரிய வித்வான்களாகத்தான் இருக்க வேண்டும் என்று அவசியமுண்டா?"

என்று பதில் கேள்வி கேட்டார் பெரியவர்.

பாபு புன்னகை செய்வதைத் தவிர ஒன்றும் சொல்லமுடியவில்லை.

"மேலும், பெரிய வித்வான்கள் என்று சொல்லப்படுகிறது என்பது சாரீரத்தையும் ஞானத்தையும் மாத்திரம் பொறுத்திருக்கவில்லை. இதற்கு சம்பந்தமில்லாத பல தகுதிகளும் வேண்டும் அதற்கு. மனிதர்களை அலுக்காமல் சலிக்காமல் போய்ப் பார்க்க பொறுமை வேண்டும். காலில் பலம் வேண்டும். நேரம் வேண்டும். அந்த நேரத்தில் கொஞ்சமாவது குரலைச் சாதகம் பண்ணலாமே, இன்னும் கொஞ்சம் ஞானத்தைச்சேர்த்துக்கொள்ளலாமே என்று அநாவசியமாக வருந்தக்கூடாது. நாம் போய்ப் பார்க்கிற மனிதர்கள் சங்கீதம் அரைகுறையாகத் தெரிந்தவர்களாக இருக்கலாம். தெரியாமலேயே இருக்கலாம். ஆனாலும் அவர்கள் சொன்னால் அதை உடனே மறுக்காமல் இருக்க வேண்டும். மறுத்தால் மறுக்கிறோம் என்று தெரியாத வகைக்கு மறுக்க வேண்டும். அதையும் அவர்கள் கண்டுபிடித்து ஒப்புக்கொள்ளாவிட்டால், அவர்கள்

சொல்வதுதான், சரி என்று ஒப்புக்கொள்ளவேண்டும்" என்றார் பெரியவர்.

"எல்லாப் பெரிய மனிதர்களுமா அப்படியிருக்கிறார்கள்?"

"அப்படியில்லாத ஒன்றிரண்டு பேர்களைப்பற்றி நான் பேசவில்லை."

சற்றுக் கழித்து பாபு கேட்டான். "இந்தப் பக்கத்து சங்கீதம் கேட்டீர்களா?"

"கேட்டேன். ரொம்ப நன்றாக இருக்கிறது."

"சங்கீத வித்வான்களைப் பார்த்தீர்களா?"

"நான் ஸ்வாமி பார்க்க அல்லவா வந்திருக்கிறேன்!"

"அதுதான் உங்கள் முக்ய நோக்கமாச்சே. யாரையாவது பார்த்தீர்களோ என்று கேட்டேன்."

"இரண்டு மூன்று பேரைப் பார்த்தேன்."

"எப்படி?"

"நன்றாகத்தான் பாடுகிறார்கள். ரொம்பவும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் யாரும் சிரமப்பட்டுப் பாடவே இல்லியே. எப்படியாவது தப்பித்துக்கொண்டு ஓடிவிட ஆசைப்படுவது போலிருக்கிறது குரலைக் கேட்டால்?"

"யாரு தப்பிச்சிண்டு ஓடறது?"

"குரல்."

"ஏன்?"

"ஆமாம். குரல் ஏமாற்று வித்தை காட்டுகிறது. கஷ்டமான இடந்தான் அருகிலேயே போவதில்லை. போனாலும், தானுக்குப் பண்ணி, ரயிலில் டிக்கட்டு வாங்காமல் போனால், செக்கிங் அதிகாரியைக்கூடப் பார்க்காமல் விர்ரென்று போவார்களே, அது மாதிரி வேகமாக ஓடிவிடுகிறது."

"அதிகாரி யாரும் இல்லை என்கிறீர்களா?" என்று பாபு சிரித்தான்.

"இந்த ரயிலுக்கு நாம்தான் அதிகாரி" என்றார் அவர்.

"அப்படியென்றால் தங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறார்களா?"

"ஆமாம். இதுதான் கஷ்டம். பிறரை ஏமாற்றுவதைவிட தன்னை ஏமாற்றிக்கொள்வது பாபமில்லையா?"

"என்ன பாபம்? அப்பாடா, தப்பிந்துவிட்டோம் என்று நிம்மதி ஏற்பட்டுவிடுகிறதே!"

"அது நிம்மதியில்லை. திருடிவிட்டு தப்பித்துக்கொண்டால், தப்பித்துக்கொண்ட திருப்திதான் இருக்கும். திருடிவிட்ட குற்றம் நெஞ்சக்குள்ளேயே இருக்கும்." அவரும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டுதான் வந்தார்.

"பாபு, ஒரு பாட்டு பாடேன்", என்றாள் யமுனா.

"ஐயோ வாண்டாம்".

"நீ நன்னாப் பாடுவேன்னு சொல்லியிருக்கேன்", என்று அவர்களிடம் ஏதோ சொன்னாள் அவள்.

"நீங்களும் ஒரு பாட்டுப் பாடுங்களேன்" என்றார் அவர்.

"நீங்கள்தான் பாடவேண்டும். இவர்கள் கேட்கவேண்டாமா? உங்களவர்கள்" என்றான் பாபு.

"நாங்கள் இத்தனை நேரம் பாடினோமே. எங்களுக்கும் கொஞ்சம் ஓய்வு வேண்டாமா? நாகேச்வர் மந்திருக்குப் போகப் போகிறோம். அங்கு வந்தால் அவர்கள் கேட்கலாம். நீங்கள் இப்போது ஒரு சின்ன பாட்டு பாடுங்கள்."

"பாடு பாபு."

"இப்படி வெட்கப்பட்டா நீ வித்வானாகப்போறே?" என்றாள் பார்வதி.

பாபு பாடினான். ஐந்து நிமிஷமாயிற்று. பெரிய மலையின் பக்கத்தில் ஒரு சிறு கல் கிடக்கிறமாதிரி இருந்தது அவனுக்கு.

"நன்றாக இருக்கிறது. குரல்கூட இனிமையாக நன்றாக இருக்கிறது. நாலைந்து வருஷம் உழைத்தால் நன்றாக இருக்கும்... ஆனால் இந்த ஊருக்கு இது போதும்", என்று நிறுத்தினார் அவர்.

"இந்த ஊர் திருப்திதானா நமது லட்சியம்?" என்று கேட்டான் பாபு.

"எந்த ஊர் திருப்தியும் நமக்கு லட்சியமில்லை. நம்முடைய திருப்திதான் நமது லட்சியம்."

பாபு விறுக்கென்று ஏதோ கேட்டான். "இவ்வளவு ஞானியாக இருந்து, ஏன் இந்த கோயில் தெய்வத்தைத் தேடித் தேடி அலைகிறீர்கள்?"

அவர் சிரித்தார். "கோயில் தெய்வத்தைத் தேடி அலையவில்லை. வெளியே சுற்ற ஏதாவது சாக்கு வாண்டாமா? கால் அலையத்தானே இருக்கிறது. இல்லாவிட்டால் எங்கள் ஊரிலுள்ள காசல் மண்ணையும், வேப்ப மரங்களையும், கருவை, புளிய மரங்களையும்தானே பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பார்த்த இடம் எல்லாம் பச்சை காண்கிற இந்த தேசத்தை எப்படிக் காணமுடியும்? புனாவிலிருந்து குதிரைப் பந்தயத்துக்காக மதராஸ் வருகிறார்களே பல பேர்! நான் வேடிக்கை பார்க்க வரக்கூடாதா?"

"நாலைந்து வருஷம் உழைத்தால் நன்றாக இருக்கும்" என்று அவர் சொன்னது உள் மனத்தில் குறுகுறுத்துக்கொண்டே இருந்தது பாபுவுக்கு.

"என் குரல் நன்றாகவில்லை இல்லையா?" என்று கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லவே இல்லியே. மன்னிக்க வேண்டும். நாலைந்து வருஷம் சிரமப்பட்டால் உங்கள் குரல், ஞானம் எல்லாம் சேர்ந்து பிரமாதமாயிருக்கும் என்றுதான் சொன்னேன்."

"நான் எப்படிச் சாதகம் செய்தால் நன்றாயிருக்கும்?"

"அது பெரிய விஷயம். யாத்திரை வழியில் போகிறபோக்கில் சொல்கிற காரியம் இல்லை. ஐந்து வருஷம், பத்து வருஷம் என்று பழகுகிற வித்தை. கேள்விமாதிரி சுலபம் இல்லை பதில்."

"அசுர சாதகம் பண்ணி குரலைத் தகரக் குவளையாகச் செய்துகொண்டு விட்டார்களே சிலர்" என்றான் பாபு.

"எல்லாம் வழியோடு போனால்தான் உண்டு. தேகப் பயிற்சி செய்கிறேன் என்று முட்டியை உடைத்துக்கொள்ளலாமா? மண்டை சிதறலாமா? ரத்தக் குழாயை வெடிக்க விடுவதா?" என்று கனிந்த குரலில் மிருதுவாகச் சொன்னார் அவர்.

பாபுவுக்கு நிராசை கவ்விக்கொண்டது. 'நாலைந்து வருஷமா! குரலைப் பதப்படுத்தவா!' என்று பிரமித்துப்போய் உட்கார்ந்திருந்தான்.

ஃ ஃ ஃ

சிறிது நேரம் கழிந்து அவர்களோடு நாகேச்வரன் கோயில் வரையில் தொடர்ந்து வந்து, கோயில் வாசலில், "இதுதான் நாகேச்வர மந்திர். நீங்கள் போங்கள். நான் இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கடலங்குடித் தெருவைப் பார்க்க விரைந்தான் பாபு. யமுனாவும், பார்வதியும் அவர்களுக்குச் சாப்பாடு தயார் செய்துவிட்டு தாங்களும் வருவதாகச் சொல்லியிருந்தார்கள்.

முன் உள்ளில் ராஜம் படித்துக்கொண்டிருந்ததைப் பார்த்து, "ராஜம்" என்று கூப்பிட்டான் பாபு.

"யாரு?"

"நான் தாம்பா."

"பாபுவா? உள்ளே வாயேன்."

"நீ வா.. எழுந்திரேன்."

"என்ன விசேஷம்?"

"ஒன்னுமில்லே. வா. ஒரு பெரிய கந்தர்வன் வந்திருக்கான். வா. பார்த்துட்டு வரலாம்".

"யாரு?"

"கந்தர்வன்."

"கந்தர்வனா!"

"ஆமாம். வாயேன். சட்டைதான் போட்டுண்டிருக்கியே. புறப்படேன். அப்பா இருக்காரா?"

நிருபரின் யுக்தி

ஒரு பத்திரிகை நிருபரைப் பற்றி அவர் காரியாலயத்துக்கு ஏராளமான குற்றச்சாட்டுகள் வந்தன. "பொறுப்பில்லாமல் எழுதுகிறார்" என்றும், "நேரில் பார்க்காமலே கயிறு திரிக்கிறார்" என்றும், "செய்திகள் தயாரிப்பதில் கூட வேண்டியவர் வேண்டாதவர் பார்க்கிறார்" என்றும் குற்றச்சாட்டுகள் வந்து குவிந்தன. பத்திரிகை முதலாளி தன் நிருபரைக் கூப்பிட்டனுப்பினார். வேலை போய்விடும் என்று தான் தோன்றிற்று நிருபருக்கு. வேலையைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு யுக்தி செய்தார்.

அந்தப் பத்திரிகை முதலாளி நாய்களிடம் மிகவும் பிரியமுள்ளவர். அவருடன் எப்போதும் இரண்டு நாய்களாவது இருக்குமென்று நிருபருக்குத் தெரியும். தன் பைகளில் நாய்களுக்குப் பிரியமான தின்பண்டங்களாக நிரப்பிக்கொண்டு முதலாளியின் அறைக்குள் போனார் நிருபர். அங்கிருந்த நாய்கள் இரண்டும் தின்பண்டங்களை மோப்பம் பிடித்துக்கொண்டு அன்புடன் அந்த நிருபர் மேல் பாய்ந்து விழுந்து விளையாடின. இதைக் கண்ட பத்திரிகை முதலாளிக்கு மனது இளகிவிட்டது. நாய்கள் இப்படி உறவு கொண்டாடுகிற ஒருவன் எப்படி நல்ல நிருபனாக இல்லாதிருக்கமுடியும்!

வேலை போவதற்குப் பதில் நிருபருக்குச் சம்பள உயர்வு கிடைத்ததாம்!

—எஸ் ராஜா

"இல்லே. வெளியிலே பே.யிருக்கார்."

"சாப்பிட்டாச்சா?"

"ஆச்சு."

"அப்பயன்னு அவர் வந்தவுடன் நாகேச்வரன் கோயிலுக்கு வரச் சொல்லிப்பிட்டு வா."

"நாகேச்வரன் கோயிலா?"

"ஆமாம். அங்கேதான் அவன் பாடப் போருன்."

"தின்னு சொல்லேன். என்னமோ பறக்கறியே."

பாபு அவசர அவசரமாகச் செய்தியைச் சொன்னன். "உங்கம்மாவையும் அழச்சிண்டு வரச் செர்ல்லு."

ராஜம் அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தான்.

எப்பொழுதும் போல நாகேச்வரன் கோயில் வெறிச்சிட்டுக் கிடந்தது. உற்சவ நாட்களில் கூட ஏழை வீட்டுக் கலியாணமாக இருக்கும் அங்கு, இப்போது ஒளி யுத்த எதிரிக்குப் பயந்து இருளில் ஒன்றிக்கிடந்தது. அன்று கிருஷ்ணபட்ச பஞ்சமி. பழம் பித்தளேத் தட்டைப்போல சந்திரன் எழவும் இன்னும் ஐந்தாறு நாழிக்கு மேலிருந்தது. நட்சத்ரங்களேத் தவிர வேறு ஒளிகள் இல்லே. கோயிலுக்குள் மட்டும் அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மின்சார விளக்குகள் கறுப்பு உடை அணிந்திருந்தன. அவர்களே எங்கும் காணவில்லே.

உள் மண்டபத்தில் இருந்தார்கள் நால்வரும். அவர்கள் போகும்போது குருக்கள் அவர்களுக்கு விபூதி கொடுத்துக்கொண்டிருந்தார். அதை நெற்றியிலிட்டுக்கொண்டு கீழே உட்கார்ந்தார்கள்

குடும்பத்தின் இச்சிறிய அர்சன் தன் விருப்பங்களே மனப்போக்கினுலும், சொற்களாலும் வெளியிடுகினுன்—தன் பணிவில் இருக்கும் பெற்ருேர்களேயும், பெரியவர்களேயும் கம்பீரமான புன்னகைகளினுலும், தோற்றங்களினுலும், வெறுப்புக்காட்டும் பார்வைகளினுலும் கட்டளேயிடுகிருன்—ஆனுல் வார்த்தைகளினுலல்ல. இதோ இங்கு ஒரு உறுதியான தோற்றம்—சந்தேகத்திற்கிடமின்றி ஏற்கும் தோற்றம்.

(பெற்ருேர்கள் கவனிக்க:)

இந்த சிறிய அரசன் ஒரு மகிழ்ச்சி கலந்த பார்வையுடன் சொல்கிருன்......

எவ்வளவு அதிசயிக்கும்படி நல்லது இந்த புதிய பேபி பீடர்

*புதிது — ஏனெனில் அது உடையாதது. கழுவ எளிது. சுகாதாரமானது, போலிநின் சிசா—தெரிந்த எல்லா ரசாயன சாதனங்களாலும் பாதிக்கப்படாதது

Dey's

டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ்
பிரைவெட் லிமிடெட்
கல்கத்தா–16
பம்பாய் • டில்லி • மதருஸ்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும், கடைகளிலும் கிடைக்கும்.

சென்னே ஸ்டாக்கிஸ்டுகள்:

R. L. கௌடர் • சாந்திலால் • ஸ்பென்ஸர் & கோ • ஜி.வி.கே.ஸி. & கோ.

நால்வரும். ராஜத்தை அறிமுகப்படுத்தி வைத்தான் பாபு.

சுருதி சேர்த்துவிட்டு மீட்டின பொழுது கோயில் மண்டபத்தில் தம்புராவின் நாதம் ஒரேயடியாக எதிரொலித்து வந்தது. பெரியவர் சுருதி சேர்த்துக்கொண்டு பாட ஆரம்பித்தார்.

ஆரம்பித்து ஒரு நிமிஷத்திற்கெல்லாம் ராஜம், 'ஆகா ஆகா' என்று மெய்ம்மறந்துவிட்டான்.

"எப்படி?" என்ற பாவனையில் பாபு பார்த்தான் அவனை.

"உண்மையாகவே கந்தர்வர்கள்தான் இவர்கள்!"

அந்த கனமும் கம்மலும் நிறைந்த இனிமை மண்டபத்தில் மேளம் கட்டி உள்ளத்தை மிதக்கவைத்தது. அந்த கானம் பட்டுப் பரவசமடைந்து ஆகாகாரம் செய்வதுபோல், மண்டபம் சூழ நின்ற ஒவ்வொரு கணத்தையும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

சற்று விழித்து அசைப்பில் திரும்பிய போது, யமுனாவும், பார்வதியும் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்தான் பாபு.

யமுனாவின் கண் மூடியிருந்தது. சிறிது நேரம் சென்று மீண்டும் பார்த்தபோது தூணில் பின் தலையைச் சாய்ந்து கண் மூடி நின்றாள் அவள். ஏழெட்டு தடவை அவளைப் பார்த்தபோதெல்லாம் அதே நிலையில்தான் இருந்தாள் அவள். நமக்கு மட்டும் இல்லை. எல்லோரையுமே இது மெய்மறக்கச் செய்கிற இசை, குரல் என்று உணர்வு வந்தது பாபுவுக்கு.

இந்த சூழ்நிலை முற்றிலும் புதிதாக இருந்தது. கோயில், அங்கு யமுனா, மோகிக்கச் செய்கிற சங்கீதம், பாடுகிறவர்களின் தன்மறதி, யமுனா லயித்து நின்றது—எல்லாம் புது அனுபவமாக இருந்தன. பாபுவை வழக்கம்போல் உணர்ச்சி வசப்படுத்தின. தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது அவன் கன்னத்தில்.

சுமார் ஒரு மணிக்குப் பிறகு இசை ஓய்ந்தது. யாரும் எழுந்திருக்கவில்லை. பேசவும் இல்லை. அப்படியே மௌனமாக சற்று நேரம் உட்கார்ந்திருந்தார்கள், மயக்கம் தெளியாததுபோல.

யமுனாவிடம் சென்றான் பாபு.

"என்ன யமுனா?"

"ம்" என்று உட்கார்ந்திருந்த யமுனா நிமிர்ந்தாள். முகம் சோகம் படர்ந்து கிடந்தது. அவள் புன்னகை பூத்த பிறகு தான் பாபுவுக்குச் சிறிது தைரியம் வந்தது.

யமுனா மெதுவாகச் சொன்னாள்:

"நெஞ்செல்லாம் வலிக்கிறது பாபு."

"ஏன்?"

"எனக்கு அழுகையை அடக்கி அடக்கிப் பழக்கம்... நீ வெட்கப்படறதில்லே."

"நான் எதையுமே அடக்கிக்கறதில்லியே."

"இவர் ஏன் இப்படிப் பாடறார்? எனக்குப் பைத்யம் புடிச்சுப்போயிடும் போலிருக்கு, பாபு" என்றாள் யமுனா.

அவள் உதட்டில் புன்னகை தவழ்ந்தது. ஆனால் கண் மாத்திரம் சாதாரணமாக இல்லை. வெறிபிடித்ததுபோல் எங்கேயோ பார்த்தது.

பாபு பேசாமல் அவளைப் பார்த்தான்.

"வாங்கின கடனை திருப்பிகொடுக்க வழியில்லே. போர்டு மாத்திரம் பிரமாதமா வெளியிலே மாட்டியிருக்கீரே?"

"நானே உம்மிடம் கடன் வாங்கினேன் என்றால் உமக்கு எவ்வளவு பெருமை!"

"இவ்வளவு பரவசமாய் பாடினால், என்னால் கேட்க முடியவில்லையே. உடம்பெல்லாம் என்னமோ பண்றது?" என்று மீண்டும் கண்ணை மூடித் தூணில் பின் தலையைச் சாய்த்துக்கொண்டாள் யமுனா. ஏதோ இல்லாத படுக்கையில் படுத்து ஆச்வாசம் செய்துகொள்வது போலிருந்தது அவளைப் பார்த்தால். "உடம்பெல்லாம் கூட பறக்கிறது" என்று கண்ணைத் திறந்து மீண்டும் சொன்னாள் அவள்.

அருகில் யாரோ வருவதை உணர்ந்து கண்ணை நன்றாகத் திறந்துகொண்டாள் யமுனா.

"பாபு, எனக்கும் சங்கீதம் தெரிஞ்சிருந்தா, இப்படி காலம் என் கழுத்து மேலே உட்கார்ந்துண்டு நெறிக்காம இருக்கும். இவர் மாதிரி அறுபது நாழியும் சாதகம் பண்ணிண்டிருந்திருப்பேன். ஓய்வு இல்லாம இருந்திருக்கும்."

பாபு ஒன்றுமே பேசவில்லை.

பார்வதி அருகே நின்றுகொண்டிருந்தாள். தம்புராவுக்கு உறை போட்டுக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார்கள் நால்வரும். குருக்கள் உள்ளே போய் கற்பூரம் ஏற்றிக் காண்பித்ததைப் பார்த்து எல்லோரும் எழுந்து நின்றார்கள். 'ஜேய் மகாதேவ், ஜேய் சங்கர், நாகேச்வர் கீ ஜெய்' என்று அவர்கள் கோஷமிட்டார்கள்.

"பாபு, என் உடம்பைத் தொட்டுப்பார்" என்றான் ராஜம்.

"என்ன?"

"பாரேன். எப்படி அதிர்றது பார். என் உடம்புகூட சங்கீதத்துக்கு இசைய ஆரம்பிச்சுப்பிட்டுது. அப்படின்னா இது சங்கீதமாத்தான் இருக்கணும்" என்றான் ராஜம்.

கோயிலில் ஆங்காங்கு நின்றுவிட்டு அருகில் வந்து பாட்டுக் கேட்ட நாலைந்து பேர் பாடினவரையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

"எங்கே தங்கியிருக்கார்களாம்?" என்று கேட்டான் ராஜம்.

"ரயிலடி சத்திரத்திலேயாம்."

"இன்னும் ரண்டு நாள் இருப்பாளா?"

"ஒண்ணும் அவசரப்படறவங்களாத் தெரியலெ."

"எங்கே இப்படிப் போகிறே?"

"இன்னிக்கு யமுனா வீட்டிலே சாப்பாடு."

"ராஜம், நீங்களும் வந்து சாப்பிடலாம்" என்று அழைத்தாள் யமுனா.

"இல்லை. நான் சாப்பிட்டாச்சு. போய் வரேன். காலமே அவர்களை சத்திரத்திலே பார்க்கலாம். நீ வறியா பாபு?"

"நான் கேக்கலாமான்னு இருந்தேன் உன்னை. காலமே எட்டு மணிக்கு வாயேன் அங்கே."

"சரி, அப்ப நான் வரட்டுமா?"

"சரி."

ராஜம் போய்விட்டான்.

அன்றிரவு சாப்பாடான பிறகு அவர்களை ரயிலடி வரையில் போய் சத்திரத்தில் கொண்டுவிட்டு வந்தான் பாபு. அன்றோடு விடவில்லை. மறு நாள் முழுவதும் அவர்களுடனேயே கழித்தான். ராஜமும் பாபுவும் இழுத்த இழுப்புக்கு வந்துகொண்டிருந்தார்கள் அவர்கள். ராஜத்தின் வீடு, பாபுவின் அறை, சாரங்கபாணி கோயில், சோமேச்வரர் கோயில்—எல்லாவற்றிற்கும் கால் சோரச் சோர நடந்தார்கள். சாம்பன் வீட்டுக்குப் போனார்கள். ஷண்முகத்தின் வீட்டில் ஒரு மணி. கேட்ட இடத்தில் பாடிக்கொண்டே இருந்தார்கள் தகப்பனும் பிள்ளையும்.

மறு நாள் காலையில் அவர்கள் தஞ்சாவூர் புறப்பட இருந்தார்கள். அவர்களை மாலை வரையில் இருத்தி, கல்லூரி முடிந்ததும்முண்டா அடித்து டிக்கட்டுவாங்கிக் கொடுத்து, அவர்களைப் பாபநாசத்திற்கு அழைத்துச் சென்றான் பாபு. அன்று இரவு பதினொரு மணி வரையில் பாட்டு ஓயவில்லை. ஒன்றும் பேசத்தான் முடியவில்லை. அவரவர்கள் பாஷையை ஜாடையாகவே பேசி ஒரு வழியாகச் சமாளித்துக்கொண்டார்கள்.

அன்று முழுவதும் பாபுவுக்குத் தாகம் வருவது சிரமமாகத்தானிருந்தது. அவர் சாமான்யமான ஆசாமி இல்லை. பெரிய வித்வானென்று சொல்லிக்கொள்ளவும் இல்லை. மற்றவர்களுக்கு அளித்த ஸ்தானம் தனக்குக் கொடுக்கப்படவில்லையே என்று அழவும் இல்லை. எதையும் எதிர்பார்க்காமல் பாடிக்கொண்டிருந்தார். அந்த மனிதனின் முகத்திலும் நெஞ்சுரப்பும் அழுத்தமும் உறுதியும் அசைக்க முடியாதபடி வேரூன்றிக் கிடந்தன. அதனால் அவருக்குக் கோபமே வரவில்லை போலிருக்கிறது. நிதானம் இழக்காமல் எதற்கும் புன்சிரிப்புப் பூக்க முடிகிறது அவரால். இங்கு பெரிய கூட்டத்தின் முன் பாடவேண்டும் என்று ஏன் அவர் விரும்பவில்லை? ராஜத்தின் அப்பா கொடுத்த பத்து ரூபாய், ரங்கண்ணா வைத்த நூறு ரூபாய்—எதையும் அவர்கள் ஏற்கவில்லை. திண்ணையில் எல்லோரும் படுத்துக்கொண்டிருந்தனர். பாபு ஒரு ஓரமாகப் படுத்திருந்தான்.

வெகு நேரம் வரையில் பெரியவரின் உருவம் உட்கார்ந்த நிலையிலேயே தலையைக் குனிந்துகொண்டிருந்தது. வெகு நேரம் கழித்துத்தான் படுக்கையில் சாய்ந்தது.

செவ்வாயன்று காலையில் அவரை பஸ் ஏற்றிவிடப்போகும்போது அப்பாவும் கூட வந்தார். போலீஸ்காரனிடம் சொல்லி தஞ்சாவூருக்கு நாலு டிக்கட் வாங்கிக்கொடுத்துவிட்டான் பாபு. பெரியவர் ஹிந்தியில் சொல்வது புரிந்தது அவனுக்கு. அவனுக்குத்தான் பேசமுடியவில்லை.

"பாபு, நீங்கள் பட்டே வித்வானாகி எப்போதாவது புனாவுக்கு வருவீர்கள். வந்தால் உங்களை வந்து பார்ப்பேன். வரும்போது எனக்கு எழுதுங்கள். விலாசம் தான் கொடுத்திருக்கிறேனே. அப்படியே எங்கள் ஊர் கரிசல் மண், வேப்பமரம், எங்கள் வீடு எல்லாவற்றையும் பார்த்து விட்டுப் போகலாம்."

பாபு சிரித்தான். அவனுக்குப் பிரிவது சதையைப் பிய்ப்பது போலிருந்தது. அவன் முகம் கலங்குவதைப் பார்த்து, கையைத் தடவிக்கொடுத்து கூட வந்திருப்பவர்களிடம் கனிந்து ஏதோ சொன்னார் அவர். அதற்குப் பதிலாக மூவரும் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்கள்.

"புனா பக்கம் வேறு காரியமாக வந்தாலும் எனக்கு எழுதுங்கள். என் பையன் வந்து உங்களை அழைத்துக் கொண்டு வருவான் எங்கள் ஊருக்கு."

"ஓ" என்று தலையசைத்தான் பாபு. "நீங்கள் திரும்பிப் போகும்போது வந்துவிட்டுப் போங்கள்."

"நாங்கள் ராமேச்வரம் போய்விட்டு, திருச்சி, ஸ்ரீரங்கம், அப்படியே மைசூர் போய் அப்படியே ஊர் போவோம். அப்படிப் போகவில்லையானால் வருகிறேன்."

"இப்படி வந்தால் கட்டாயம் வரணும்."

அரை நிமிஷத்திற்கெல்லாம் பஸ் கிளம்பிவிட்டது. சூன்யம் பிடித்தாற் போல அது போன திசையைப் பார்த்துக் கொண்டு நின்றான் பாபு.

"மகாபுண்யசாலிகள். சங்கீதம் சங்கீதம்னு ஒரு வித்தைக்காகவே ஆயுஸ் முழுக்க கழிக்கிறாங்கள். உடம்பிலேயும் தெம்பு இருக்கு. எந்த ஊராயிருந்தாலும் சரீரம் ஈடு கொடுக்கறது...என்னடா சாரீரம்! இப்படியா பாடுவன்! அமிர்தமாப் பொழியறானே!" என்று ஆச்சரியக் குறிகளாகவே சொல்லிக்கொண்டிருந்தார் வைத்தி.

கால் மணி கழித்து கும்பகோணம் பஸ் வந்தது. பாபு ஏறிக்கொண்டான். வழியிலெல்லாம் அந்த சங்கீதம்தான் கேட்டுக் கொண்டிருந்தது அவனுக்கு. யமுனா, ராஜம், ரங்கண்ணா எல்லோரையும் ஆட்டி விட்டது அது. இருக்காச் சொன்னால்கூட இன்னும் ஒரு மாதம் இருந்திருப்பார். நமக்கு ஏன் தோன்றவில்லை என்று வருத்தினான் பாபு.

கிட்டத்தட்ட இந்தப் பிரிவு ஒரு ஏக்கமாகவே இருந்தது. கலியாண அமளி ஓய்ந்த வீடுபோல உள்ளத்தில் பழங் கணக்குகளும், சூன்யமும், அலுப்பும் நிறைந்து கிடந்தன. இந்த நிலையிலிருந்து மீள இரண்டு மூன்று நாள் ஆகும் போலிருந்தது.

இந்த சூன்யமும் ஏக்கமும்தான் அவனை நேராக யமுனா வீட்டுக்கு இழுத்துப் போயின.

"எங்கேருந்து வரே, பாபு? கையிலே பையோட வறியே."

"ஊரிலேர்ந்து வரேன்" என்று அவர்களோடு போய் வந்ததெல்லாவற்றையும் சொன்னான் அவன்.

"இவ்வளவு நல்லாப் பாடினா எனக்கு பயமாயிருந்தது. மாரை மாரை வந்தடைச்சுது. அழுகை அழுகையா வந்துது. அவர் நிறுத்தினதால்தானோ என்னவோ. நிறுத்தாம பாடிட்டே இருந்திருந்தார்னா நானும் அங்கேயே உட்கார்ந்து பிராணனை விட்டிருப்பேன்" என்றாள் யமுனா.

"என்ன யமுனா, என்னென்னமோ சொல்றியே."

"ஆமாம் பாபு, நல்லதா ஒண்ணை அனுபவிச்சதுக்கப்பறம் உசிரோடே இருக்கலாமா? மறுபடியும் மண்ணிலேதானே வந்து புரளவேண்டியிருக்கு."

"உன்னைப் பாத்தாலே என்னமோ பயமாத்தான் இருந்துது எனக்கு."

"எனக்கும் பயமாத்தானிருந்துது. கீழே கொண்டுவந்து விட்டிட்டாரேன்னு."

பாபுவுக்கு தனக்கு ஏன் இந்த உணர்ச்சி ஏற்படவில்லை என்று வியப்பாக இருந்தது.

பார்வதியும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாள். அவன் புறப்படும் போது "பாபு, மறந்தே போயிட்டேனே. அன்னிக்கி ஏதோ பொட்டளத்தை வச்சிட்டுப் போயிட்டியே. பூவை எடுத்து இவ வச்சுக்கிட்டா. பொட்டளம் இருக்கு. நீதான் கொண்டு வந்தே போலிருக்கே."

"அதுவா? உங்களுக்குத்தான்."

"எங்களுக்கா?"

"ஆமாம்."

"யார் கொடுத்தா?"

"உங்க பெரியம்மாதான், யமுனா?"

"யாரு!"

"நந்தமங்கலத்துப் பெரியம்மா."

"பெரியம்மாவா?"

"ஆமாம்."

"எப்ப கொடுத்தா?"

"நான் போனேன்."

"நந்தமங்கலத்துக்கா?"

"ஆமாம்."

"எப்ப?"

"சனிக்கிழமை."

"என்ன காரியமாப் போனே?"

"ரண்டிலே ஒண்ணு தீர்த்துப்பிடலாம்னு போனேன்."

"எங்க காரியமாத்தானா?" என்று கேட்டாள் யமுனா.

"என் காரியமா யிருக்கப்படாதா அது?"

"என்ன சொன்னான்?" என்றாள் பார்வதி.

பாபு எல்லாவற்றையும் சொன்னான்.

"ஏன், வீட்டை வேணும்னாலும் எடுத்துக்கட்டுமே" என்றாள் பார்வதி. அவள் கண் கலங்கி நீர் பெருகிற்று.

பாபு விடைபெற்றுக்கொண்டபோது, "பாபு, நீ ஒரு முட்டாள்" என்று வாசலில் வந்து சொன்னாள் யமுனா.

"ஒரு வழியில் இல்லையே" என்று ஒப்புக்கொண்டான் பாபு.

"மற்றதிலே இல்லை. என் சம்பந்தப் பட்டவரையில் நீ முட்டாள்தான்."

"————"

"நந்தமங்கலத்தை பத்தி நினைக்காதேன்னு அன்னிக்கே சொன்னேனே. நீ ஏன் கேட்கலை?"

"எனக்கு ஏதோ சபலம்."

"முட்டாள்தனம்."

"சரி."

"இனிமே, என்னைக் கேட்காமல் எதையும் செய்யாதே."

"சரி."

"இதை நினைக்கிறபோது, அந்தப் பாட்டைக் கேட்டுண்டு அப்படியே கல்லாயிருக்கப்படாதான்னு தோணுது."

"நான் வரேன், யமுனா" என்று சொல்லிக்கொண்டு படி இறங்கினான் பாபு. அவள் சொன்னது சரிதான். நான் முட்டாள்தான். நந்தமங்கலத்துக்குப் போனதில்லை. அவள் நிம்மதியாக இருக்கும் போது இதைச் சொன்னதுதான்.

அதற்கப்புறம் பி. ஏ. பரிட்சை முடிகிற வரையில் அவள் வீட்டுப் படியேறவில்லை அவன்.

(தொடரும்)

அசோகா ப்ளவர் ஆப் ஹெவன் டால்கம் பௌடர் & ஸ்னோ

அழகும், கவர்ச்சியுடன் நறுமணமும்தரும். சருமத்திற்கு சமனமூட்டி, விஷம் பரவாமல் தடுக்கும். முதல்தரமான புதிய பொருள்களைக்கொண்டு சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்படுவதால் உங்கள் மேனி புதுமைப் பொலிவுடன் பிரகாசிக்கும். ப்ளவர் ஆப் ஹெவன் டால்கம் பௌடர் & ஸ்னோவினால் சருமத்தை பாதுகாருங்கள். மிக நூதனமான, அபிவிருத்தி பெற்ற அழகு சாதனங்கள்.

விஜயா கெமிகல்ஸ், சென்னை-7

தற்காப்பு

தன்னையோ அல்லது மற்றொரு வரையோ காப்பாற்ற அல்லது பாது காக்க ஒருவருக்கு உரிமையுண்டு. அதே போல தன் சொத்தையோ பிறர் சொத் தையோ திருட்டு, கொள்ளை முதலிய வற்றிலிருந்து காப்பாற்றவும் உரிமை யுண்டு.

சூழ்நிலை காரணமாக, தன் தாயின் தொண்டையைத் தகப்பன் அமுக்கினுர் என்று எண்ணித் தன் தகப்பனுரை சுட் டான் மகன். தகப்பனுர் இறந்துவிட்டார். மகன் செயல் புரிந்தது தற்காப்புக்காக என்று தீர்மானிக்கப்பட்டு ஒரு வழக்கில் அவன் விடுதலை செய்யப்பட்டான்.

தன் நிலத்தில் அத்துமீறி வந்து மேய்ந்துகொண்டிருந்த பசுக்களைப் பிடித்துக் கட்டிப்போட்டான் வேலன். பசுக்களின் சொந்தக்காரனை சடையன் அவைகளை மீட்க, தக்க ஆட்களுடனும் ஆயுதங்களுடனும் தன்னை வந்து தாக்கு வான் என்று எண்ணி, தன் பலத்திற் காகச் சில ஆட்களைச் சேர்த்து வைத்துக் கொண்டான், வேலன். எதிர்பார்த்தபடி சடையனுடைய கோஷ்டியார் தாக்கினர். இரு தரப்பாருக்கும் சண்டை மூண்ட தில் பலர் காயமடைந்தனர்; சிலர் மாண்டனர். வேலன் செயல் புரிந்தது தற்காப்புக்காக என்று தீர்ப்புக் கூறப் பட்டது.

ஒருவர் குற்றம் செய்ய முற்படின்— குற்றம் புரிபவர் அது குற்றம் என்று தெரியாமல் செய்ய முற்படினும், தற் காப்பு உரிமை பாதிக்கப்படமாட்டாது.

கருப்பன் ஒரு பைத்தியம். அவன் வெள்ளையைக் கொலை செய்ய எத்தனிக் கிறுன். கருப்பன் புரிவது சட்டப்படி குற்றமல்ல. அவனுக்கு, தான் செய்வது என்ன என்றும் தெரியாது. இருப்பினும், வெள்ளைக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எல்லா உரிமையும் உண்டு.

தனக்கு உள்ளே செல்ல சகல உரிமை யும் உள்ள ஒரு வீட்டிற்குள் இரவில் நுழைகிறுன் முனியன். திருடன் என்று எண்ணி அவனைத் தாக்குகிறுன் கந்தன்.

கந்தன் அவனைத் தாக்கியதற்குச் சூழ் நிலையே காரணமென்றாலும், முனியனுக் குத் தற்காப்பிற்கு உரிமையுண்டு.

சோரநட்பிற்காக இரவில் வழக்க மாகப் போகும் வீட்டிற்குப் போகிறுன் வேலாண்டி. தாக்கப்பட்டபோது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தற் காப்பு உரிமையை உபயோகிக்கிறுன்; படுகாயப்படுத்துகிறுன். இங்கு வேலாண் டிக்குத் தற்காப்பு உரிமை கிடையாது. ஏனெனில், அவன் அந்த வீட்டிற்கு வந்ததே குற்றம் புரியத்தான் என்று ஒரு தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் தற்காப்பு உரிமையை உபயோகிக்கக்கூடாது.

கோர்ட் அமீனு சொத்தை ஜப்தி செய் வதற்காகப் போனுர். குறிப்பிட்ட காலம் தவறிவிட்டதால் அந்த வாரெண்ட் செல்லுபடியாகாததாக இருந்தது. சொத் தின் சொந்தக்காரர் ஜப்தி செய்வதைத் தடுத்தார். அடிதடி ஏற்பட்டு ஒருவரைப் படுகாயப்படுத்தினுர். வழக்கு நடந்தது. அவர் செய்தது தற்காப்பிற்காக என்று வாதாடியதை நீதிபதி ஒப்புக்கொள்ள வில்லை. வாரெண்ட் செல்லாது ஆயினும் ஜப்தி செய்ய வந்தது தற்காப்பு உரி மையை உபயோகப்படுத்தும்படியான குற்றமல்ல என்று தீர்ப்பில் கூறப்பட் டது.

மரணம் அல்லது படுகாயம் ஏற்படும் என்று சாதாரணமாக ஒரு அச்சத்தை ஏற்படுத்தாத ஒரு செய்கையை, ஒரு அதிகாரி, தனக்கு அதிகாரம் உண்டு என்ற நினைப்பில் செய்தாலும் அல்லது செய்யமுற்பட்டாலும், அச்செய்கை சட்டவரம்பிற்கு உட்படாவிடினும், தற் காப்பிற்கு உரிமையில்லை.

ஒரு போலீஸ் அதிகாரி தனக்கு ஒரு வரைக் கைது செய்ய அதிகாரமுண்டு என்று நியாயமாக எண்ணி, தன் அதி கார ஹோதாவில் அவரைக் கைது செய் கிறுர். கைது செய்யப்பட்டவருக்குப் போலீஸ் அதிகாரி செய்வது தவறு என்று தெரிந்திருப்பினும் தற்காப்பிற் காக அதிகாரியைத் தாக்கக்கூடாது. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் தற்காப் பிற்கு உரிமையில்லை.

தற்காப்பு உரிமையுண்டு என்றாலும், போலீஸ் உதவி முதலியன நாடுவதற்கு நேரமும் சந்தர்ப்பமும் இருப்பின் அதை நாடவேண்டும். மேலும் ஒருவரைப் பாது காப்பதற்காக பொதுநல ஊழியர்களாக மாறிவிடக்கூடாது.

தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண் டிய அளவுக்குத்தான் வலிமையை உப யோகிக்கலாமே தவிர, அதைக் காரண மாகக்கொண்டு ஒருவரைத் தாக்கக் கூடாது. அவ்விதம் தாக்குவது, தற்காப்பு உரிமையை மீறிவிட்டதா இல்லையா என்பது ஒவ்வொரு நிகழ்ச்சியின் தன் மையையும் அப்பொழுது இருந்த சூழ் நிலையையும் பொறுத்திருக்கும்.

பக்கச்சுவரில் கன்னம் வைத்து இரவில் நுழைந்து கொண்டிருந்த திருடனை பாதி உள்ளிருந்தபொழுது, மேலும் உள்ளே வராமல் தடுக்க அவன் முகத்தைக் கீழே வைத்து வீட்டுக்காரர் அழுத்தி னுர். திருடன் இறந்துவிட்டான். ஒரு வரை ஈட்டியால் தாக்கியதற்கு அவர் தன் கையிலிருந்த பெரிய தடியால் திருப்பி அடித்தார். ஈட்டிக்காரன் இறந்துவிட்டான். மேற்படி இரு வழக்கி லும் தற்காப்பை மீறவில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இரவில் திருடிய ஒரு பலஹீனமான கிழவனைத் தாக்கிக்கொன்றதும், திருட னைப் பிடித்த பின் அவன் தப்பி ஓடாமல் இருக்க கட்டப்பாறையால் தாக்கிக் கொன்றதும் தற்காப்பை மீறியவை என்று தீர்ப்பாயிற்று.

இங்கிலாந்தில் நடந்த ஒரு வழக்கில், தன் எஜமானனுக்குச் சொந்தமான ஒரு நிலத்தில் விறகு திருடிய ஒரு சிறுவனைக் காவலாளி ஒரு குதிரையின் வாலில் கட்டி அடித்தான். குதிரை மிரண்டு சிறு வனையும் தன்னுடன் இழுத்துக்கொண்டு ஓடியது. சிறுவனுடைய தோள் முறிந்து அவன் இறந்தான். இது கொலை என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

கீழ்க் குறித்த சந்தர்ப்பங்களில் தற் காப்பிற்காகக் கொலை கூடச் செய்ய லாம்:—

தாக்கியவர் தன்னைக் கொலை செய்யும் நோக்கத்துடனே அல்லது கடுமையான காயம் உண்டுபண்ணும் நோக்கத்துடனே தாக்கியதாக நியாயமாகத் தோன்றினுல்; கற்பழிக்கும் நோக்கத்துடன் அல்லது இயற்கைக்கு மாறான புணர்ச்சி செய்யும் நோக்கத்துடன் தாக்குதல்; கடத்திச் செல்லும் நோக்கத்துடன் தாக்குதல்; அதிகாரிகளுக்குத் தெரிவித்து விடுதலை பெறமுடியாத வகையில் காவலில் வைத்துவிடுவதற்காகத் தாக்குதல்.

சொத்தைப் பாதுகாக்கவும் சில சந்தர்ப்பங்களில் தற்காப்பிற்காக கொலைகூடச் செய்யலாம். அவை வரு மாறு:—

வழிப்பறி; இரவில் வீட்டிற்குள் அத்து மீறி வருதல்; கட்டிடம், குடிசை முதலிய மனித இருப்பிடத்திற்கு அல்லது பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் இடத்திற்கு தீவைத்தல் முதலியன.

சில சந்தர்ப்பங்களில் தன்னைப் பாது காக்க எடுக்கும் முயற்சியில் குற்றமற்ற வர்களுக்குத் தீங்கிழைக்க நேரிடினும் அதனுல் தற்காப்பு உரிமையைக் கைவிட வேண்டியதில்லை.

மாயனை பெரிய கும்பல் ஒன்று கொலை செய்யும் நோக்கத்துடன் தாக்குகின்றது. மாயன் தன்னைப் பாதுகாத்துக்கொள் வதற்குக் கும்பலில் சுடவேண்டும். அவ் வாறு சுட்டால் கூட்டத்தில் கலந்திருந்த சிறுவர்களுக்குத் தீங்கு ஏற்படலாம். மாயன் சுட்டதால் சிறுவர்களுக்குத் தீங்கு ஏற்படினும் அவன் குற்றம் புரிந்த வனுகமாட்டான்.

—வழக்கறிஞர்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாத வாரி எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்வி களுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

கலா மண்டபம்

சினிமாச் செய்திகள்

படங்களின் நீளம், செய்திப் படங்கள், படங்களின் பெயரைப் பதிவு செய்தல், வெளிநாட்டுப் படங்கள் இந்திய பாஷைகளில் 'டப்' செய்யப்படுதல் போன்ற பல விஷயங்களைப்பற்றி சென்ற வாரம் சென்னையில் கூடிய இந்திய பிலிம் பெடரேஷன் நிர்வாகக் கமிட்டி ஆலோசித்தது. இறுதியில், வெளிநாட்டுப் படங்களை இந்திய பாஷைகளில் டப் செய்வதால் எவ்வித பாதகமும் ஏற்படாது என்றும், தணிக்கை முறை இந்தியப் படங்களுக்கு உள்ளது போலவே அவைகளுக்கும் இருக்கவேண்டும் என்றும் கருதப்பட்டது.

செய்திப் படங்களை தியேட்டர்களில் திரையிடும் பொருட்டு அவைகளை இலவசமாகக் கேட்க, சம்பந்தப்பட்ட மந்திரியுடன் நேரில் பேசி விவாதிக்கலாம் என்று அது அபிப்பிராயப்பட்டது. படங்களின் பெயர்களை பதிவு செய்வது சாத்யமா என்பதையே தீர்மானிக்க முடியவில்லை கமிட்டியினல். எனினும் இம்மாதிரி ஏற்பாடு அவசியமென ஒருமுகமான அபிப்பிராயம் நிலவுகிறது என்பதை கமிட்டியும் ஒப்புக்கொண்டது.

படங்களின் நீளத்தைக் குறைக்க தற்போது வழியில்லை. ராஜ்யத்துக்கு ராஜ்யம் காட்சி நேரம் வித்தியாசப்படுகிறது. இதை நாடெங்கும் ஒரே அளவில் நிர்ணயித்தாலொழிய படங்களின் நீளம்பற்றி விவாதிப்பதில் அர்த்தமில்லை என்று கமிட்டி கருதியது.

சர்வதேச பிலிம் விழாக்களுக்கு படங்களைத் தேர்ந்தெடுக்க கமிட்டி அமைக்க பெடரேஷன் தலைவருக்கு அதிகாரமளித்தது.

மத்திய அரசாங்கப் பரிசுகளுக்காக சிறந்த படங்களைத் தேர்ந்தெடுக்கும் கமிட்டியில் ஸ்ரீ டி. ஆர். சுந்தரம் அங்கம் வகிக்க சௌகரியப்படாததால் அவருக்குப் பதில் ஸ்ரீ டி. ராமானுஜம் அங்கத்தினராக இருப்பார்.

சென்னை சினிமா ரசிகர் சங்கம் இவ்வருஷம் முதல் சிறந்த வட இந்தியப் படம் ஒன்றுக்கும், ஆங்கிலப் படம் ஒன்றுக்கும் பரிசளிப்பதென்று தீர்மானித்துள்ளது. ஆகவே 1955-ம் வருஷத்தில் வெளிவந்த சிறந்த ஹிந்திப் படம் ஒன்றையும் ஆங்கிலப் படம் ஒன்றையும் இப்போது தேர்ந்தெடுக்க வேண்டும். வாசகர்கள் தங்களுக்குப் பிடித்த படத்தின் பெயரை காரியதரிசி, சென்னை சினிமா ரஸிகர் சங்கம், 56, அம்மையப்ப முதலி தெரு, சென்னை-14 என்ற விலாசத்துக்கு இம்மாதம் 14-ம் தேதிக்குள் அனுப்பி வைக்கலாம்.

தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்கத்தார் சுதந்திர தினத்தன்று கதம்ப நிகழ்ச்சியொன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். தியாகராயநகர் வாணி மஹாலில் நடைபெறவிருக்கும் இதில் சிவாஜி கணேசன், என். டி. ராமராவ், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலானோர் நடிப்பரென்றும், ராகினி கோஷ்டியார் நடனமாடுவரென்றும், ஜிக்கி, லீலா, கண்டசாலா போன்ற பிரபல பின்னணிப் பாடகிகளும், பாடகர்களும் இசை விருந்து அளிப்பரென்றும் தெரிகிறது.

இம்மாதக் கடைசியிலும் அடுத்த மாதத்திலும் வரப்போகும் படங்களில் இரண்டு சிறந்த படங்கள் உள்ளன. ஒன்று 'சரணதாஸி'; மற்றொன்று 'தாய்க்குப்பின் தாரம்'. "சரணதாஸி" மகா கவி தாகூரின் "புயல்" என்ற நாவலை அடிப்படையாகக்கொண்ட கதை. பிரபல நட்சத்திரங்கள் யாவரும் இதில் தோன்றுகின்றனர். இரு திருமண ஜோடிகள் படகில் போகும்போது படகு கவிழ்ந்து, மணப்பெண்கள் மாறிவிடு

ஜூபிடரின் 'தங்கப்பதுமை'யில் 'சிற்பி செதுக்காத பொற்சிலை'யாக, லலிதா.

கின்றனர். இதிலிருந்து ஆரம்பமாகிறது கதை. உருக்கமான சம்பவங்கள் பல இதில் உள்ளன.

"தாய்க்குப்பின் தாரம்" சிறந்த படமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அதனால்தான் அதன் உரிமையை விஜயா ப்ரொடெக்ஷன்ஸார் வாங்கிவிட்டனர். அடுத்த மாதத்தில் இப்படம் வெளிவந்துவிடும்.

'காத்தவராயன் கதை'யிலிருந்து விலகிக்கொண்டதைப் போலவே, டி.என். ஆர். ப்ரொடக்ஷன்ஸ் 'லலிதாங்கி'யிலிருந்தும் எம். ஜி. ராமச்சந்திரன் விலகிக்கொண்டுவிட்டார். தற்போது அவர் நடித்துக்கொண்டிருக்கும் இதர படங்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை, சிவகாமி பிக்சர்ஸ் "புதுமைப் பித்தன்", தேவர் பிலிம்ஸாரின் "தாய்க்குப்பின் தாரம்", ஸதர்ன் மூவீஸ் தயாரிக்கும் 'பாக்தாத் திருடன்'. இவை தவிர ஒய். வி. ராவ் டைரக்ஷனில் தயாராகும் சியாமளாவின் "சிலம்புக் குகை"யில் அஞ்சலியுடன் நடிக்கிறார். "தாய்க்குப்பின் தார"த்தில் ஒரு ஜல்லிக்கட்டுக் காளையுடன் அவர் சண்டைபோடவேண்டிய காட்சியொன்று வருகிறது. முதலில் இந்தச் சண்டை போடலாமா, வேண்டாமா என்று அவர் வெகுவாக யோசித்தாராம். பிறகு அக்காட்சிக்கு வேண்டியதைச் செய்வதென ஒப்புக்கொண்டு இப்பொழுது 'அந்தக் காளையுடன் சண்டை போட்டுப் பழகி வருகிறாராம்.

ஆர்.ஆர்.பிக்சர்ஸாரின் "காத்தவராயன் கதை"யில் சிவாஜி கணேசன் நடிக்க ஆரம்பித்துவிட்டார். சென்ற வாரம் பாலையா, கணேசன் நடிக்கும் காட்சிகளை டைரக்டர் ராமண்ணா வாஹினி ஸ்டுடியோவில் படமாக்கினார். இப்படத்தில் தங்கவேலு, பாலையா, கணேசன், பி. எஸ். சரோஜா, இ. வி. சரோஜா, சகாதேவன் ஆகியோர் நடிக்கின்றனர். துறையூர் மூர்த்தி வசனங்களை எழுதியுள்ளார்.

'உத்தமபுத்திரனை' எடுக்கப்போவதாக போட்டி போட்டுக்கொண்டு இருவர் அறிவித்தனர். எம். ஜி. ஆர்.—கண்ணதாஸன் கோஷ்டி ஒன்று, சிவாஜி கணேசன் கோஷ்டி மற்றொன்று. "கணேசன் எடுப்பதானால் வேறு படம் எடுத்துக் கொள்கிறேன். இதிலென்ன போட்டி?" என்று எம். ஜி. ஆர். கூறிவிட்டாராம். ஆகவே 'உத்தமபுத்திரனை' சிவாஜி கணேசனே தயாரிப்பார். அத்துடன் அவர் சொந்தத்தில் ஹிந்தியில் ஒரு படத்தை எடுக்கப்போவதாகவும் தெரிகிறது. அப்படத்தில் அவர் நடிக்க மாட்டாராம். பூராவும் வட இந்திய நடிகர்களைக்கொண்டே சென்னை ஸ்டுடியோ ஒன்றில் அதைத் தயாரிப்பாராம்.

'மர்மவீரன்' என்ற படத்தை மிக வெற்றிகரமாகத் தயாரித்த நடிகர் ஸ்ரீராமும் தயாரிப்பாளர் கோவிந்தராஜனும் அடுத்தபடியாக 'கட்டபொம்மன்' கதையைத் தயாரிக்கலாம் என்று உத்தேசித்துள்ளனர். அப்படி இப்படம் தயாரிக்கப்பட்டால் இதில் சிவாஜி கணேசனும் நடிப்பார்.

ஜெமினியின் அடுத்த தமிழ் படத்தின் 'ஷூட்டிங்' வேலைகள் சென்ற வாரம் ஆரம்பமாகிவிட்டன. ஜெயில் காட்சியொன்று படமாக்கப்பட்டது. அதில் ஜெமினி கணேசனும், துரைசாமியும் நடித்தார்கள். இப்படத்தில் லலிதா, பத்மினி ஆகியோருடன் சுந்தரிபாயும் நடிக்கிறார். குமாரி துளசியும் நடிக்கக்கூடும். மற்றும் டி. கே. ஷண்முகம், வீரப்பா, டி. கே. ராமச்சந்திரன் ஆகியோரும் நடிக்கின்றனர். தமிழில் மட்டுமின்றி ஹிந்தியிலும் இப்படம் எடுக்கப்பட்டுவருகிறது. தமிழ்ப் படத்தை கே. ஜே. மகாதேவனும், ஹிந்திப் பதிப்பை எஸ். எஸ். வாஸனும் டைரக்ட் செய்துவருகிறார்கள். ஹிந்தியிலும் கதாநாயகன், கதாநாயகியாக கணேசனும் பத்மினியும் நடிக்கிறார்கள். இவர்களோடு லலிதாவும் நடிப்பார். மற்றும் பிரான், ஆகா இன்னும் சில வட இந்திய நடிகர்களும் இதில் நடிப்பராம்.

ஜெமினி கணேசன் நடித்த முதல் ஹிந்திப் படமான "தேவதா" (கணவனே கண்கண்ட தெய்வம்) இந்த வாரம் வடநாடெங்கும் வெளியாகியிருக்கிறது. ஜெமினியின் மேற்கூறிய ஹிந்திப் படத்தைத் தவிர ஏவி. எம். 'மிஸ் மேரி'யிலும் ஜெமினி கணேசன் நடிப்பது குறிப்பிடத்தக்கது. 'மிஸ்மேரி'யில் அவரோடு மீனா குமாரியும் நடிக்கிறார்.

சென்ற வாரம் ரேவதி ஸ்டுடியோவில் நடராஜ் பிக்சர்ஸாரின் 'சமய சஞ்சீவி' படத்திற்கான சில காட்சிகளை டைரக்டர் ராகவன் படமாக்கினர். இக்காட்சியில் வித்யாவதி, டி. ஆர். ராமச்சந்திரன், பட்டு ஆகியோர் நடித்தனர். 'சமய சஞ்சீவி'யை சிறந்தொரு ஹாஸ்யப் படமாகவும், அதே சமயம் நீதிகள் உள்ளதாகவும் தயாரிக்க தயாரிப்பாளர் ராஜகோபாலும், கதாசிரியர் பட்டுவும் முயற்சி செய்து வருகின்றனர். இப்படத்தில் ஸந்தியா, சாரங்கபாணி ஆகியோரும் முக்கிய பாகங்களில் தோன்றுகின்றனர்.

அஞ்சலிதேவி சொந்தத்தில் தயாரித்துவரும் படம் முக்கால் வாசிக்குமேல் முடிவடைந்துவிட்டது. இப்படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளில் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழில் அஞ்சலியுடன் ஜெமினி கணேசன் நடிக்கிறார். சாகசங்கள் நிறைந்த ராஜா-மந்திரி கதை இது.

டைரக்டர் எம். வி. ராமன் தயாரித்துவரும் "அதிசயப் பெண்" என்ற படத்தில் வைஜயந்தியின் நடனங்கள் கேவாகலரில் எடுக்கப்படும். இக்காட்சிகள் பம்பாயில் படம் பிடிக்கப்படுமாம். இப்படத்தில் கதாநாயகனாக நாகேஸ்வரராவ், மற்றும் மாதுரிதேவி, குமுதினி, சாரங்கபாணி, தங்கவேலு, மனோகர் ஆகியோரும் நடிக்கின்றனர். ஜாவர் சீதாராமன் வசனங்கள் எழுதியுள்ளார்.

பீபிள்ஸ் பிலிம்ஸாரின் முதல் தயாரிப்பான 'அவன் அமரன்' என்ற படத்துக்காக சமீபத்தில் நியூடோன் ஸ்டுடியோவில் ஒரு கனவுக்காட்சி படமெடுக்கப்பட்டது; புது மாதிரியான கோஷ்டி நடனமொன்றும் இந்தக் கனவுக் காட்சியில் இடம் பெற்றுள்ளது. கே. ஆர். ராமசாமி, ராஜசுலோசனா, பாலையா, எஸ். வி. சுப்பய்யா, கண்ணம்பா, 'பிரெண்ட்' ராமசாமி, எம். எஸ். திரௌபதி முதலானோர் நடிக்கும் இப்படத்தின் கதையும் புது மாதிரியானதாம்.

தெல்மா பிக்சர்ஸின் முதல் தயாரிப்பான 'ஜங்கிள் கேர்ல்' (வன வனிதை) என்ற சிங்களப் படத்துக்கான ஒலிப்

கல்யாண் குமாரை ஆட்டிவைக்கிறார் ஜானகி, தெலுங்கு 'சதாராமா'வில்.

சர்வதேச சினிமா விழா

தி. மா. ராமச்சந்திரன்

செக்கோஸ்லோவாகியா தேசத்திலிருக்கும் அழகிய ஊரான கார்லவி வாரி என்னுமிடத்தில், ஒன்பதாவது சர்வ தேச சினிமா விழா சென்ற மாதம் 12ந் தேதி ஆரம்பித்து 23-ம் தேதி வரை நடைபெற்றது. இதற்கு இந்தியா உள்பட மொத்தம் 43 தேசங்களிலிருந்து சினிமாப் பட முதலாளிகளும், டைரக்டர்களும், நடிக நடிகைகளும், பத்திரிகையாளர்களும் வந்திருந்தார்கள்.

பல தேசங்களிலுள்ள ஜனங்களிடையே இணைபிரியாத நட்பும் ஒற்றுமையும் ஏற்படுத்துவதுதான் இந்த சினிமா விழா நடத்தப்பட்டதன் நோக்கம். இவ்விழாவை நடத்தி வைத்த செக்கோஸ்லோவாக் ராஜாங்க பிலிம் ஸ்தாபனத்தார் மிகவும் திறமையாகப் பணியாற்றினார்கள். அவர்களுடைய நோக்கம் இவ்விழாவின் மூலம் கணிசமாகப் பூர்த்தியாகுமென்று சொல்லலாம்.

அகில-உலக சினிமா விழாக்கள் அநேக வருஷங்களாக ஐரோப்பாவில் அநேக இடங்களில் நடந்து வருகின்றன. ஒரு தேசமாவது, இதுவரையில், இந்தியாவிலிருந்து சினிமாப் பத்திரிகையாளர்களை அழைத்ததில்லை. இவ்வருஷம் செக்கோஸ்லோவாகியா சர்க்கார் முதன் முதலாக, இந்தியாவிலிருந்து இரு சினிமாப் பத்திரிகையாளர்களை (உங்கள் நிருபரையும், ஒரு பம்பாய்ப் பத்திரிகை நிருபரையும்) கூப்பிட்டதோடு என்னை, 'சர்வதேச பிலிம் தேர்வுக்குழு'விலும் அங்கம் வகிக்க அழைத்திருந்தார்கள்.

மேற்சொன்ன சினிமா விழாவில், மொத்தம் 145 படங்கள் காண்பிக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து பிமல்ராயின் 'தேவதாஸ்', தேவகிபோஸின் 'பலபோஷா' என்ற படங்களும், இந்திய சர்க்கார் பிலிம்ஸ் டிவிஷனின் 'நாளை நமதே' (டுமாரோ இஸ் அவர்ஸ்), 'குட்டித் தூதர்கள்' (லிட்டில் அம்பாஸடர்ஸ்), 'பாரத் தர்ஷன்' என்னும் படங்களும் காண்பிக்கப்பட்டன. இப்படங்களுக்கு இவ்வூர் ஜனங்களிடையேயும், வெளி தேசங்களிலிருந்து வந்திருந்த பட முதலாளிகளிடையிலும், பத்திராதிபர்களிடையேயும், மிகவும் நல்ல பெயர் கிடைத்திருக்கிறது. இந்த விழாவில் பங்கெடுத்துக்கொள்ள வந்திருந்த இந்தியப் பட முதலாளிகளான பிமல்ராய், சேதன் ஆனந்து, ஹிதன் சௌதிரி, நடிக நடிகைகளான திலீப் குமார், தேவ் ஆனந்து, ஷீலா ரமணி, கல்பனா கார்த்திக் இவர்களுக்கெல்லாம் இவ்வூரில் வெகு விரைவில் நல்ல பெயரும் புகழும் கிடைத்துவிட்டன. பிமல்ராய், இவ்வூரில் அவருடைய அடுத்த படமான 'மதுமதியின்' ஷூட்டிங்கையும் அவ்வமயம் ஆரம்பித்தார். இவையன்றி, செக்கோஸ்லோவாக் ராஜாங்க பிலிம் ஸ்தாபனத்தார் இந்தியப் பட முதலாளிகளுடன் கூட்டுறவாக படங்களைத் தயாரிப்பதுபற்றியும் ஆலோசித்தார்கள். செக்கோஸ்லோவாக் ஸ்தாபனத்தார் பம்பாய், சென்னை, கல்கத்தாவில் சினிமாக்களை (திறந்த வெளி தியேட்டர்கள்) கட்டலாமா என்றும் யோசித்தனர்.

இந்த சினிமா விழாவில் அமெரிக்கா தேசத்திலிருந்து வந்திருந்த பட முதலாளிகளும், ருஷ்யா, சீனா தேசங்களிலிருந்து வந்திருந்த பட முதலாளிகளும், நடிக நடிகைகளும் மிகவும் அத்தியந்த நண்பர்களாகப் பழகி, சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள், எந்த தேசத்திலிருந்தாலும், ஒற்றுமையுடன் வாழலாமென்று காண்பித்தது முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய விஷயம்.

'மர்ம வீரன்' ஸ்ரீராம் தான் இவர்!

பதிவு வேலை கடந்த மாதம் 29ந் தேதி சியாமளா ஸ்டுடியோவில் ஆரம்பமாகியது. ஸ்ரீ மங்கத் டைரக்ட் செய்யும் இப்படத்தின் சங்கீத டைரக்ஷன் பொறுப்பை ஸ்ரீ ஆர். பார்த்தஸாரதியும், ஸ்ரீ ஜி. தனராஜும் ஏற்றுள்ளனர்.

சென்னை, சேலம், கோவை ஆகிய இடங்களிலுள்ள ஸ்டுடியோக்களில் சினிமாப் படமெடுக்கும் இலங்கைப் பட முதலாளிகளுக்கு இலங்கையிலிருந்து நடிகர், நடிகைகளை இந்தியாவிற்கு அழைத்து வருவதில் இப்பொழுது ஒரு புதிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் இவர்களுக்கு இலங்கையிலுள்ள இந்திய ஹைக்கமிஷன் தாராளமாக இந்தியாவுக்கு வந்துபோக விஸா வழங்கிவந்தது. பொறுப்பற்ற சில பட முதலாளிகள் நடிகர்களை இந்தியாவிலேயே தவிக்கவிட்டு வந்துவிடுவதாகப் புகார்கள் கிடைத்ததன் பேரில் விஸா வழங்குவதை ஹைக்கமிஷன் கடினமாக்கியிருக்கிறது. இதனால் படப்பிடிப்பு வேலை தடைபட்டுப்போய் மிகுந்த நஷ்டமேற்படுவதாயும், கண்ணியமான பட முதலாளிகள் விஷயத்தில் தாராள மனப்பான்மை காட்டவேண்டுமென்றும் பிரபல முதலாளிகள் இந்திய ஹைக்கமிஷனரிடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் சிங்கள சினிமாப் படங்கள் இலங்கையிலேயே எடுக்கப்பட வேண்டுமென்றும், இந்தியாவில் எடுப்பதனால் பெருவாரியான பணம் இந்தியாவிற்குப் போகிறதென்றும், இதை அரசாங்கம் தடை செய்ய வேண்டுமென்றும் தீவிர சிங்களவாதிகள் வலியுறுத்தி வருகிறார்கள்.

கார்லவிவாரியில் 'தேவதாஸ்' திரையிடப்படுமுன்பு இந்திய கோஷ்டியினர் மேடைமீது தோன்றினர். (இடமிருந்து) பிமல்ராய், திலீப்குமார், சேதன் ஆனந்த், ஷீலா ரமணி, ஜே. கே கபூர், ஹிதன் சௌதிரி, தி. மா. ராமச்சந்திரன், அஜித் மர்ச்செண்ட்

நகர அரங்கம்

ஸ்ரீ ராம கான சபை ஆதரவில் திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் கோஷ்டியினர் கடந்த ஞாயிறன்று 'வேதாந்தம்' என்ற நாடகத்தை நடித்தனர். ஸ்ரீ 'தேவன்' எழுதிய இக்கதையின் விறுவிறுப்பும், நடிகர்களின் ஒத்துழைப்புமாகச்சேர்ந்து நாடகத்தை முதல்தரமாக்கியது. எல்லா நடிகர்களுமே தத்தம் பாத்திரங்களை நன்குணர்ந்து இயல்பாக நடித்தனர். குறிப்பாக, 'வேதாந்தம்' பாகமேற்ற ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாஸகோபாலன் ஆரம்ப முதல் கடைசிவரையில் மிக அருமையாக நடித்தார். 'செல்லம்' ஸ்ரீ எஸ். கிருஷ்ணனின் நடிப்பு உணர்ச்சிக் களஞ்சியமாக இருந்தது. 'ஸ்வாமி' ஸ்ரீ எஸ். ஆர். கிருஷ்ணஸ்வாமி தம் கம்பீரத்தின் மூலம் நாடகத்திற்குக் களையூட்டினர். 'சிங்கம்' ஸ்ரீ நடராஜன் ஹாஸ்ய நடிப்பின் சிகரத்தையே தொட்டுவிட்டாரெனலாம். மற்றும் 'சந்தானமையங்கார்' ஸ்ரீ எஸ். கே. சுப்ரமண்யம், 'வஸந்தா' ஸ்ரீமதி மைதிலி, 'வைரம் கோபாலஸ்வாமி' ஸ்ரீ ஆர். சேஷாத்திரி ஆகியோரும் உழைத்து நடித்தனர். ஸீன்கள், 'மேக்-அப்', இசை அமைப்பு, பின்னணி சங்கீதம் முதலியவையும் நன்கு அமையப்பெற்றிருந்தன.

தலைமைவகித்த ரெவின்யூ மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலு, நாடகத்தின் தரத்தையும், அதில் பங்குகொண்டவர்களின் நடிப்புத் திறனையும் வெகுவாகப் பாராட்டினர்.

ஃ ஃ ஃ

பரோடா ஆர்யகன்யா மஹா வித்யாலயத்தைச்சேர்ந்த மாணவிகள் இம்மாதம் முதல் தேதியன்று தியாகராயநகர் தக்ஷிண பாரத் ஹிந்தி பிரசார சபையில் கதம்ப நிகழ்ச்சியொன்று நடத்தினர். வைபவத்திற்கு விவசாய மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் தலைமை வகித்தார்.



ஸ்ரீ கலா நிகேதன் ஆதரவில் முதல் தேதியன்று அண்ணாமலை மன்றத்தில் டி. கே. எஸ். சகோதரர்களின் 'தமிழ் செல்வன்' நாடகம் நடைபெற்றது.

சாதாரணக் கல்வி மட்டும் பெற்றவர்களல்ல இந்த மாணவிகள். பலவகை தேகப்பயிற்சி முறைகளையும் கற்றுள்ளனர். யோகாஸனம், சிலம்பம், வாட்போர், வில்வித்தை முதலானவையெல்லாம் இவர்களுக்கு அத்துபடி! அத்தனையையும் அன்று இவர்கள் அதியழகாகச் செய்து காட்டினர். குறிப்பாக, கண்களைக் கட்டிக்கொண்டு கையால் மட்டுமன்றி காலாலும் கூட இவர்கள் குறி தவறாது அம்புகள் எய்தது சபையோரை பிரமிக்கவைத்தது.

மற்றும் ராஸக்ரீடை, கிராமிய நடனம், ஓரங்க நாடகம் முதலியவற்றையும் நடத்திக்காட்டிய இவர்களை ஸ்ரீ பக்தவத்ஸலம் பாராட்டுகையில், மேற்படி மஹா வித்யாலயம் போன்ற பள்ளிகள் தென்னிந்தியாவிலும் ஏற்பட வேண்டுமென்றார்.

ஃ ஃ ஃ

மயிலை ரஸிக ரஞ்சனி சபை ஏற்பட்டு 25 வருடங்களாகிவிட்டன. இதன் வெள்ளிவிழா சென்ற திங்கட்கிழமை டாக்டர் ஸி. பீ. ராமஸ்வாமி அய்யர் தலைமையில் துவங்கியது. இளம் வித்வான்களுக்கு ஊக்கமளிப்பதுடன் சம்பிரதாய சங்கீதத்தின் உயர்ந்த தரத்தை நிலை நிறுத்த சங்கீத சபைகள் பாடுபட வேண்டுமென்று அவர் அவ்வமயம் கேட்டுக்கொண்டார்.

விழாவைத் துவக்கி வைத்த மத்திய மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசுகையில், தங்களுக்கே உரித்தான முறையில் பாடும் திறமைகொண்ட வித்வான்களுக்கு ஊக்கமளிக்க வேண்டியது அவசியமென்றார்.

சங்கீத வித்வத் சபையுடன் ரஸிக ரஞ்சனி சபை ஒத்துழைத்து சம்பிரதாய சங்கீதத்தின் தரத்தைக் காப்பாற்றி வந்துள்ளதை ஸ்ரீ டி .வி. சுப்பராவ் சுட்டிக்காட்டினர். அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் பேசுகையில், சம்பிரதாய சங்கீதத்திற்கு இச்சபை ஆக்கமளித்து வருவதுடன் ஒரு சங்கீதப் பள்ளியையும் திறமையாக நடத்தி வருவதைப் பாராட்டினர்.

இச்சபை தோன்றிய காலம் முதல் இதற்கு ஒப்பற்ற சேவை செய்துவரும் ஸ்ரீ ஜீ. ஸ்வாமிநாதனுக்கு வெள்ளிக் குத்துவிளக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீமதிகள் பிருந்தா-முக்தா சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீமதி அபிராமசுந்தரி வயலினும், ஸ்ரீ கோவை ராமஸ்வாமி மிருதங்கமும் வாசித்தனர்.

—கே. ஆர். எஸ்.

தியாகராயநகர் மஹிள சபையின் சார்பில் ஸெயின்ட் மேரீஸ் ஹாலில் நடைபெற்ற நடன நிகழ்ச்சிக்கு நடிகை ராஜசுலோசனா தலைமை வகித்து பரிசுகள் வழங்கினர்.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள்

சங்கீத கலாநிதி டி. எல். வேங்கடராமய்யர் உதவியது

ஸ்வரப்படுத்தியவர் ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யரான ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்கள்

பல்லவி

ஸ்ரீ வரலக்ஷ்மி நமஸ்துப்யம் வஸுப்ரதே
4 3

ஸ்ரீ ஸாரஸபதே ரஸபதே ஸபதே பதேபதே (ஸ்ரீ வரலக்ஷ்மி)
3 3 3 3 3

அநுபல்லவி

பாவஜ ஜனக ப்ராணவல்லபே ஸுவர்ணபே
4 4 4

பாநுகோடி ஸமான ப்ரபே பக்த ஸுலபே
4 4 4 4

மத்யம காலம்

ஸேவக ஜனபாலினி ச்ருத பங்கஜமாலினி

கேவல குணசாலினி கேசவஹ்ருத் கேலினி (ஸ்ரீ வரலக்ஷ்மி)
3 3

சரணம்

ச்ராவண பௌர்ணமி பூர்வஸ்த சுக்ரவாரே
2

சாருமதி ப்ரப்ருதிபி: பூஜிதாகாரே
4 4

தேவாதி குருகுஹ ஸமர்ப்பித மணிமயஹாரே
3 3 2 3

தீனஜன ஸம்ரக்ஷண நிபுண கனகதாரே
3 4

மத்யம காலம்

பாவனு பேத சதுரே பாரதி ஸன்னுத வரே
4 4 3 4

கைவல்ய விதரண பரே காம்க்ஷித பலப்ரத கரே (ஸ்ரீ வரலக்ஷ்மி)
2 3

மன்மதன் தந்தையாகிய மஹா விஷ்ணுவின் நாயகியும், ஸ்வர்ணம் போன்ற காந்தியுடையவளும், கோடி ஸூர்ய ப்ரகாசமுடையவளும் பக்தர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடியவளும், ஸேவகர்களைப் பரிபாலிப்பவளும், தாமரை மாலையை அணிந்திருப்பவளும், தனித்திருத்தல் (கேவலம்) என்னும் குணமுடையவளும், கேசவனுடைய ஹ்ருதயத்தில் விளையாடுபவளும், ஆவணி மாதத்திய பௌர்ணமி திதிக்கு முன்னுள்ள வெள்ளிக் கிழமையன்று சாருமதி முதலியோரால் வழிபடப்பட்டவளும், தேவர்களாலும், குருகுஹனாலும் தாழ்மையுடன் கொடுக்கப்பட்ட மணிமாலையை அணிந்திருப்பவளும், ஏழைகளைக் காக்கும் சிறந்த பொன் வர்ஷ்ச்சி போன்றவளும், கலைமகளால் போற்றப்பட்டவளும், கைவல்யம் என்னும் நிலையைக் கொடுக்கக்கூடியவளும், வேண்டிய பலனைக் கொடுக்கும் கைகளை யுடையவளும், ஐச்வர்யத்தைக் கொடுப்பவளும், மங்களகரமான தாமரை போன்றதும், பசுமை வாய்ந்ததுமாகிய பாதங்களை யுடையவளுமாகிய ஸ்ரீ வரலக்ஷ்மி உனக்கு நமஸ்காரம்.

ஸ்ரீ ராகம் (22-வது மேளம்) — தாளம் : ரூபகம்.

ஆ : ஸரிமபநிஸ்.
அவ : ஸ்நிபதநிபமரிகரிஸ.

I		O	I

பல்லவி

1 ரீ ; ககரீஸா ரீ	ஸரீநீ நீ ; நிபபமபா	பா நிநி ஸநிஸா ; ரீ	ரிஸநிஸாநி ரிஸரீ ;
ஸ்ரீ வ . ர ல	க்ஷ்மீ . . . ந . ம . .	ஸ்து . . ப்யம் ... வ	ஸ¬ . . ப்ர தே.
ரீ,மபா.ம ககரீஸா	நி ஸ ரீகரிஸநிபா நிபபமபா	பா நிநி ஸநிஸா : ரீ	ரிஸநிஸாநி ரிஸ ரீ ;
ஸ்ரீ . . . வ . .	க்ஷ்மீ . . . . . ந ம . .	ஸ்து . ப்யம் . . வ	ஸ¬. . . . ப்ர தே.
ரீ ,\நிஸா ; ரிமா	பாபா / நீ பாஸ்ாஸ்நி	ஸ்ா ; ஸ்ா நீ பா	/ பாமா ;\ரீகரிரிஸ
ஸ்ரீ . . ஸா ர .	ப தே . ர ஸ ப .	தே ஸ ப தே	ப தே . பதே.. .

மத்யம காலம்

ரி\நிஸா ரிமபநீ பஸ்நி	ஸ்' ஸ்நிபா பமரி கரிஸ	(ஸ்ரீ வரலக்ஷ்மீ)
ஸ்ரீ . ஸா ரஸபதேரஸப	தே ஸபதே பதே பதே.	

அநுபல்லவி

பா; பாநிப மா மாபம ரீ	/ ரீ : ஸாரிக ரீ ரீகரி ஸா	ஸாரிஸ நீ ஸநிஸா ; ரீ	ரி ஸ நி ஸ ரீ : ரீ ;
பா. வ . ஜ ஜ . . ன	க ப்ரா.. . . . . ண	வல் . . . ல . யே . ஸ¬	வ . ர்ணு பே.
\பா / ககரீஸா ; நிநி	\பா, நி\மா மப\ரீ ;.ரி / ப	ப ம பா : நீ ; \பா	பா ஸ் நி ஸ் நி ஸ்ா ;;
பா . நுகோ . டி..	ஸ, மா . . ன . . ..ப்ர.	பே . . ப க்த	ஸ¬ல . பே . . ..

மத்யம காலம்

நிநி க்ரிஸ்நி\பாபநிஸ்ரி	ஸ்ரி நி ஸ்ப நி. மபரிமபா	ரீமபநிஸ் ரீ,க் ஸ்ா.ரி ஸ்நிநீ	பா த நி பா மரி ரிக கரிரிஸ
ஸே வகஜன பாலி.னி .	ச்ருதபங். கஜமா லி . னி	கேவலகுணசா..லி.. னி . .	கே ச வஹ்ருத்கே வி. ன

(ஸ்ரீ வரலக்ஷ்மீ)

சரணம்

ஸா ; / நீநீ நிபபநி	பா நிமா, ; மபா ; ;\	ரீ : ரீ கரிகரிஸநி	ஸா,நி நீ ஸநிஸா ;;
ச்ரா. வண பௌ ..	ர்ணமீ . . . பூ . ..	ர்வ. ஸ்தசு . . . க்ர.	வா. . . ரே. . ..
ஸா,நி ஸா ரீ,க\ரீ;	; ககரீ ஸ நி ஸா ;	ரீ : மா ரிரிமா,\ரி	ரீ / பமபம பமபா ;;
சா . . ரு ம.. தி.	ப்ர. ப்ருதி . பி :	பூ ஜி தா. . . .	கா . . . . ரே. . ..
மா ; பா ; பநிஸ்ா	ரீ க் க் ரீ ஸ்ா ஸ்ரிநீ நீ	/ க்க்ரீ ஸ்ா நிஸ்ரிஸ்ா ;ரி ஸ்நிபா பம	பாநிநிஸ்நிஸ்ா ;;
தே . வா . தி. கு	ருகு . ஹ ஸ ம . . .	ர்ப்பி த ம ணி. . . . .ம . . ய.	ஹா. ரே. . ..
ரீ ; ; க்க் ரீ ஸ்ா	நி\பா. மபநிபா :நி பாமா	ரீமாபா / ஸ்நிபாமா	ரீ ஸரிகரீ:க\ரீ ; ; ஸா
தி . . ன ஜன	ஸம் . . ர . . . . . க்ஷண	நி புண க . ன க	தா . . . . . . ரே. . .

மத்யம காலம்

பாம ரீ,ம ரீ ஸ ரி / ப\மா	பா / நி\மா பாபஸ நி ஸ்ா	ஸ் நி ஸ்ா ரி க்ரிஸ்நி\பரீ	ஸ்ா நி ப நிபாம ரிக கரிஸா
பாவனு பேதச து ரே	பா ர தி ஸன்னுத வ ரே	கை. வல்ய விதரண பரே	காம்க்ஷித பலப்ரதக ரே.

(ஸ்ரீ வரலக்ஷ்மீ)

M211,N30S MSL.22.27-28.



கடந்த மாதம் 29உ திருவல்லிக்கேணி ஆர்ட்ஸ் அகடமி சார்பில் தேசிய பெண்கள் பள்ளி கலாமண்டபத்தில் டி. கே. எஸ், சகோதரர்களின் 'ராஜராஜ சோழன்' நாடகம் நடைபெற்றது. ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணி தலைமை வகித்தார்.

ஜுபிலி பிலிம்ஸாரின் 'மர்ம வீரனி'ல் வைஜயந்திமாலா.

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.
The Swadesamitran Weekly.

ரெக்ஸோனாவில் இப்போது ஓர் புதுமை உள்ளது!

நறுமணம்...

முன்னை விட...

மிக அதிகம்!

இப்போது அபரிமிதமான
நறுமணம் கமழும்
ரெக்ஸோனா சோப் நீடித்த
புத்துணர்ச்சியளிக்கும்!

R.P. 143-X52 TM

ரெக்ஸோனா ப்ரொப்ரைடரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House', Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.